ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.

பேராசிரியர் சரவண. ஆறுமுகமுதலியார் M.A., B.T., M.O.L.
அன்பளிப்பு
சென்னை-20.

# தமிழ் நெஞ்சம்

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMILSANGAM

வித்துவான்

மு. வரதராசன், B.O.L., M.O.L.,

தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி

முதல் பதிப்பு : ஜூன் 1947

உரிமை ஆசிரியர்க்கு

Printed at the Sadhu Press, Royapettah, Madras
(P. I. C. No. M. S. 115) under clause 23
for M. Varadarajan, Chetpet, Madras—C. 1000—25-6-47

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்,**
**59, பிராட்வே, சென்னை**

விலை ரூ. 2—0—0

# முகவுரை

இலக்கியம் ஒரு தனி உலகம். நினைப்பளவில் அந்த நல்லுலகத்திற்குச் சென்று மகிழ்ந்து வாழ முடியும். வாழ்ந்து பழகப் பழக உரிமையும் இன்பமும் மேன்மேலும் பெருகச் செய்யும் உலகம் அது. 'நவில்தொறும் நூல்நயம்போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு' என்பதே அந்த உலகத்தில் பழகிய அறிஞர் அளிக்கும் நற்சான்று.

இலக்கிய உலகத்தில் சான்றோர் பலர் உள்ளனர். அவர்தம் தொடர்பு வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பழந்தமிழ் இலக்கியத்தில் அச்சான்றோர் உணர்வெல்லாம் தெளிவாகக் காண்கின்றோம். அவர்தம் உணர்வே தமிழன்னையின் நெஞ்சம். அவ்வுணர்வின் பெற்றியை ஒருவாறு சுருங்கிய அளவில் எடுத்துரைப்பதே இந் நூலின் நோக்கமாகும்.

இந் நூல் புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை அடிப்படையாகக்

கொண்டு எழுதப்பட்டுள்ளது. புறநானூறு இருபது நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடல்களை உடையது. இக்காலத்து உலகப் போக்கிற்கு ஏலாத நிகழ்ச்சிகள் சில இதில் உள்ளன. ஆயினும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை விடுத்து, அடிப்படையான உணர்வை ஆராய்ந்தால், எக்காலத்திற்கும் பொதுவான உண்மைகள் பலவற்றை உணரலாம். இவ்வாறு உணர முயன்ற முயற்சியே இச்சிறு நூலாகும்.

இத்துறையில் எனக்கு ஊக்கம் அளித்து உதவிய நண்பர்களுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

மு. வ.

| | | |
|---|---|---|
| 1. | நாகரிகம் ... | 1 |
| 2. | அஞ்சாமை ... | 11 |
| 3. | அருள் உணர்வு ... | 26 |
| 4. | வஞ்சினம் கூறல் ... | 44 |
| 5. | திருத்தும் கடமை ... | 57 |
| 6. | பரிசில் வாழ்க்கை ... | 73 |
| 7. | வயிற்றுக் கவலை ... | 92 |
| 8. | உணர்த்தலும் உணர்தலும் ... | 112 |

THE MADURA TAMIL SANGAM

முதலாவது

# நாகரிகம்

ஈராயிர ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட இப்போது மக்கள் வாழ்க்கை எத்துணையோ முன்னேற்றம் எய்தியுள்ளது. ஆயினும் எல்லாம் புறத்தில் நேர்ந்த முன்னேற்றமே; வாழ்விற்குரிய கருவிகளுக்கு நேர்ந்த முன்னேற்றமே அன்றி, வாழ்வின் முன்னேற்றம் அன்று. மக்கள் பெரும்பாலோர் எண்ணும் எண்ணங்கள், உணரும் உணர்வுகள் முன்னேறினவா என்பது ஐயமே. புறக் கருவிகளின் முன்னேற்றத்திற்குக் காரணமான அறிவியல் (Science) கருத்து வகையிலும் மக்களை உயர்த்திவிடும் நாகரிக நிலையே வேண்டத்தக்கதாகும்.

அறிவியல் (Science) சிறந்த கலையே. அதனை உலகம் பல வகையில் பயன்படுத்தி வருகின்றது. போக்கு வரவுக் கருவிகளில் புதுமை பல காண உதவியது அறிவியலே. இசையும் நாடகமும் பலர்க்கும் பயன்படுமாறு செய்த வானொலியும் (ரேடியோ) பேசும் படமும் (சினிமா) அறிவியலின் விளைவுகளே. செய்திகள் விரைவில் நாடெங்கும் உலகெங்கும் பரவவும், நூல்கள் பல்லாயிரமாய்ப் பெருகவும் துணை செய்ததும் அறிவியலே.

இவை போன்ற நன்மைகள் பற்பல செய்து உதவிய அறிவியலே உலகைக் கலக்கி அழித்து வரும் பெரும் போர்களுக்கும் காரணமாகியுள்ளது. வேலும் வாளும் கொண்டு எவரேனும் இருசாரார் போர் செய்து மடிவா

ராயின், பல கோடி மக்கள் வாழும் இப் பெரிய உலகம் கலங்க வேண்டுவதில்லை. துப்பாக்கியும் பீரங்கியும் கொண்டு எவரேனும் போர் நிகழ்த்தினும், பள்ளிக்கூடம் செல்லும் சிறுவரும் குழந்தைகளை வளர்க்கும் தாயரும் மருத்துவ நிலையத்து நோயாளிகளும் நடுநடுங்கி மாளும் கொடிய நிலை நேர்தலில்லை. அறிவியல் தோற்றுவித்த விமான வெடிகுண்டும் நச்சுப் புகையும் அவற்றினும் கொடிய அணுக் குண்டுமே இருநூறு கோடி மக்கள் இராப் பகலாய் நடுங்க வல்ல போர் நடைபெறக் காரண மாக இருந்தன.

மக்கள் உயிரைப் போக்குவதில் இவ்வளவு விரைந்து தொண்டாற்றிய அறிவியல், மக்களின் உயிரைக் காக்கு மளவில் அத்துணை உதவி ஆற்றியிருப்பின் ஒருவாறு நாக ரிகம் வளர்ந்ததெனப் போற்ற முன்வரலாம். பெரிய பெரிய மருத்துவ நிலையங்களுக்குச் சென்று சுற்றிச் சுற்றி நோக்கின், அறிவியலின் ஆக்க வேலையை உணர்தல்கூடும். மருந்துகளைச் செய்யும் புதிய முறைகள், அவற்றை உட லில் புகுத்தும் அரிய முறைகள், அறுத்துச் செய்யும் சிகிச்சைகளில் வியத்தகு முன்னேற்றம், அறுவையின் பொருட்டு அமைந்துள்ள புதிய கருவிகளின் பெருமை, மின்வலியின் துணைகொண்டு நோய் வலியைத் தீர்க்கும் சிறப்பு முதலிய பலவற்றில் அறிவியலின் அரும்பெருஞ் செயல்களைக் காணலாம். இவை முற்போக்கை நினை வுறுத்துகின்றன. ஆயினும் இவையனைத்தும் மக்கள் பலர்க்கும் எட்டாது சிலர்க்கே பயன்படுவனவா யுள்ளன. போர்களின் பொருட்டுச் செலவிடும் கோடிக் கணக்கான பொற்காசுகளில் ஒரு சிறு பகுதியே இவற்றின் பொருட் டுச் செலவிடப்படுகின்றது. அன்றியும் உலகில் பொது வாக நோயாளிகள் மிகுதலையும் மக்களின் உரம் குன்று தலையும் கருதி வருமுன் காக்கும் ஆக்க வேலைக்கோ அவ்

வளவு செலவாவதாகத் தெரியவில்லை. பல்லாயிர உயிர்களைக் கொல்லும் கொலைக் கருவிகளைக் காண்பதில் எய்திய முன்னேற்றத்தை நோக்கி, மருத்துவ நிலையக் கருவிகளின் முன்னேற்றத்தையும் நோக்கின், பின்னது சிறிதே எனத் தோன்றிவிடும்.

மனிதன் காட்டில் திரிந்து காய்கனி முதலியன தின்று விலங்குகளிடையே வாழ்ந்துவந்த காலம் நாகரிகமற்ற காலம் என்பர். வேட்டையாடிக் கொன்றவற்றை வேக வைத்துத் தின்றதும், நிழலும் குகையும் நாடுதல் விட்டு வீடு கட்டி ஒதுங்கியதும் நாகரிகத்தின் தொடக்கம் என்பர். உண்ணும் உணவைப் பண்படுத்திப் பயன்படுத்தக் கற்றது போலவே, உடுக்கும் உடை எடுக்கும் படை முதலியவற்றையும் உண்டாக்கிப் பயன்படுத்தக் கற்றதும் நாகரிகத்தின் தொடக்கமே என்பர். சிறு சிறு கூட்டமாய் அங்கும் இங்குமாய் அலைந்து வாடியது போய், பெருஞ் சமூகமாய்ப் பேரூரிலும் சிற்றூரிலும் அமைந்து வாழ்ந்தது நாகரிகத்தின் வளர்ச்சி என்பர். ஆயினும், எண்ணத் தெரிந்து அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையால் உயர்ந்த உயர்வே நாகரிகத்தின் மலர்ச்சி என்னலாம். எனவே, ஊணும் உடையும் படையும் வீடும் ஊரும் நாடும் காண்பது நாகரிகம் அன்று ; அவை அனைத்தும் நாகரிக வளர்ச்சிக்குரிய கருவிகளே. கருத்தின் உயர்வே-உள்ளத்தின் உயர்வே நாகரிகம் எனலாம். அத்தகைய நாகரிகப் பெற்றியைப் பண்டைத் தமிழிலக்கியம் காட்டுகின்றது.

> ஊனும் ஊனும் முனையின் இனிதெனப்
> பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்
> அளவுபு கலந்து மெல்லிது பருகி
> விருந்துறுத் தாற்றி இருந்தனெம் ஆக
>
> (புறம். 381)

நெடுநீர நிறைகயத்துப்
படுமாரித் துளிபோல
நெய்துள்ளிய வறைமுகக்கவும்
சூடுகிழித்து வாடூன்மிசையவும்
ஊன்கொண்ட வெண்மண்டை
ஆன்பயத்தான் முற்றழிப்பவும்
வெய்துண்ட வியர்ப்பல்லது
செய்தொழிலான் வியர்ப்பறியாமை
ஈத்தோன் எந்தை இசைதன தாக (புறம். 386.)

களந்தோறும் கள்ளரிப்ப
மரந்தோறும் மைவீழ்ப்ப
நிணஊன்சுட்(டு) உருக்கமைய
நெய்கனிந்து வறைஆர்ப்ப
(மதுரைக்காஞ்சி. 753-6).

எனப் பழந் தமிழ்ப் பாடல்களில் வரும் ஊண் சிறப்புப் பல.

பாம்புரி அன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியின் இழையணி வாரா
ஒண் பூங் கலிங்கம் (புறம். 383)

காம்புசொலித் தன்ன அறுவை (சிறுபாண். 236)

இழைமருங் கறியா நுழைநூல் கலிங்கம்
(மலைபடுகடாம், 561)

ஆவி அன்ன அவிர் நூல் கலிங்கம் (பெரும்பாண். 469)

நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி அன்ன அறுவை (பொருநர் - 82, 3)

கொட்டைக் கரைய பட்டுடை ( ,, 155)

என உடைச் சிறப்பும் பலபடக் காணலாம்.

இவ்வாறு செல்வ வாழ்வில் மிகத் திளைத்திருந்த மக்களைச் சுற்றி வறுமையும் கடுங் கூத்தாடிவந்தது. ஒரு வீட்டில் தூண்கள் எல்லாம் உளுத்தும் செல்லரித்தும் வீழும் நிலையில் இருந்தன. சுவர்கள் பழுதுபார்த்த லின்றி அழிவுபட் டிருந்தன. அந்த வீட்டுச் சமையல் அறையில் புழுதி மிகுந்து, அந்தப் புழுதியில் காளான் பூத்திருந்தது. அங்கு ஒரு நாய், குட்டி ஈன்று, தனக்கும் உணவின்றித் தன் குட்டிகளுக்கும் பாலின்றி வருந்திக் கிடந்தது. எச்சிற் சோறு உண்டு, குட்டிகள் பலவற்றுக் கும் பால் கொடுத்து, இன்பமாய் வாழவல்ல நாய்க்கும் வறுமையின் தாக்குதல் இருந்ததெனின், அந்த வறுமை யின் கொடுமையினை என்னென்பது! குட்டிகள் இளங் குட்டிகள். ஆதலின் இன்னும் கண் திறக்கவில்லை. அந் நிலையில், அவை வெளியே ஓடிச் சென்று உணவு தேடுதற் கும் இயலாதிருந்தன. செவிகளைச் சாய்த்துக் கொண்டு தாயின் மடியில் வாய் வைத்து உறிஞ்சித் தாய்நாய்க்குத் துன்பமே தந்தன. பால் சிறிதும் இல்லாமையால், குட்டி களுக்குப் பால் கொடுத்து இன்புறும் இயல்புள்ள நாய், அவற்றின் வாய் உறிஞ்சுதலைப் பொறுக்க முடியாமல் துன்ப மிகுதியால் குரைத்திடலாயிற்று. நாயின் நிலை இன் னது என்றால், அந்த இல்லத்துத் தலைவியின் நிலை கூறல் வேண்டுமோ? அவள் பசியால் வருந்தி வருந்தி மெலிந்து ஒடுங்கியிருந்தாள். குப்பையிலே சிறிது வளர்ந்திருந்த வேளைக் கீரையைப் பறித்துவந்து உப்பில்லாமல் வேக வைத்தாள். வெந்ததை உண்பதற்கு எல்லோரையும் அழைத்தாள். உண்ண வந்தவரோ ஒரு பெரிய சுற்றம். வந்த அனைவருக்கும் உப்பில்லாத கீரையைப் பகுத்துக் கொடுத்தாள். வறுமையிலும் மானம் விளங்கியபடியால், அவ்வாறு கீரை உண்பதை அயலார் பார்த்துவிடின் இகழ் வர் என எண்ணி நாணி வாயிற் கதவை அடைத்தாள்.

திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்தல் நோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
பூழி பூத்த புழல்கா ளாம்பி
ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்(து)
இரும்பேர் ஒக்கலொ(டு) ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் (சிறுபாண். 130-140)

இத்தகைய கொடிய வறுமையும் அக்காலத் தமிழகத்தில் இருந்ததெனநினைக்கவும் வருத்தம் மிகுகின்றது. பெருஞ்சித்திரனார் முதலான பெரும் புலவர்களும் இத்தகைய கொடிய வறுமைக்கு ஆளாகியிருந்தது குறித்துப் பழந் தமிழ்ப் பாடல்கள் அறிவிக்கும்போது நெஞ்சம் நைகின்றது. எனவே, செல்வப் பெருமை ஒருபாலும் வறுமைச் சிறுமை மற்றொருபாலும் நிலவிய தமிழ்நாடு, இரண்டும் கூடி வாழும் இக்கால உலகத்தினின்று இவ்வகையில் வேறுபடாததெனவே கருத வேண்டியுள்ளது.

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய (பட்டினப்பாலை. 187-193)

பேரூர்கள் செல்வக் குறைபாடின்றி இருந்தன. ஆதலின்,

கோடுபோழ் கடைநரும் திருமணி குயிநரும்
சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும்

பொன்உரை காண்மரும் கலிங்கம் பகர்நரும்
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் புகையும் ஆயும் மாக்களும்
(மதுரைக். 511-515)

பெருகியிருந்தனர். அவர்கள் அணிவனவும் சூடுவனவும் பற்பலவாக இயற்றித் தந்தனர்.

மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற ஓங்கிய பல்படைப் புரிசை (மதுரைக். 351,2)

பருந்துயிர்த்(து)
இடைமதில் சேக்கும் புரிசை (புறம். 343)

பருந்து பறக்கல்லாப் பார்வல் பாசறை (மதுரைக். 231)

மலையென மழையென மாடம் ஓங்கி (மலைபடு. 484)

மழையென மருளும் மகிழ்செய் மாடம் (பொருநர். 84)

வையை அன்ன வழக்குடை வாயில் (மதுரைக். 356)

யாறுகிடந் தன்ன அகல்நெடுந் தெரு ( ,, 359)

ஓவுக்கண் டன்ன இருபெரு நியமம் ( ,, 365)

பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கின் அருவியின் நுடங்க
( ,, 373,4)

என்பன அக்காலத்துப் பேரூர்களின் மதில், வாயில், மாடம், தெரு முதலியவற்றின் சீரிய அமைப்பையும் அவற்றின் பெருமையையும் புலப்படுத்துவன.

இவ்வாறு செல்வ வாழ்க்கை அமைத்து மூவேந்தர் ஆட்சி புரிந்த அக்காலத்திலும் வேந்தரின் வெற்றிக்குக் காரணமான படை வன்மையினையும், அழிக்கும் ஆண்மை

யினையும் பெருமையுடையன என்று போற்ருது அறிஞர் சிலர் ஒதுக்கி வந்தனர். அவர் கருத்தில்தான் நாகரிகம் நிலவுகின்றது. “ அரசே ! யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நாற்பெரும் படையால் பெருகிச் சிறந்திருக்கின்ற 'அரசு சிறப்புடையதெனக் கொள்ளல் வேண்டா. அரசின் வெற்றிக்கு அடிப்படை இப் படைப் பெருமை அன்று ; அறநெறியே ” என மதுரை மருதனிள நாகனுர் என்ற புலவர் பாண்டியன் ஒருவனுக்கு அறிவுறுத்திய கருத்து நாகரிக விளக்காகும். அவர் அப்பாண்டியனுக்கு மேலும் அறிவுறுத்தத் தொடங்கி, “ நடு நிலையோடு இருந்து ஆட்சி செய்க. நம்மவர் என விருப்பு மிகக் கொண்டு தவறலாகாது. பிறர் என வெறுப்புக் கொண்டு தீங்கிழைத்தலுமாகாது. ஞாயிறு போன்ற ஆண்மையும், திங்கள் போன்ற மென்மையும் மழை போன்ற வண்மையும் உடையை ஆகுக ” என்ருர்.

> கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
> நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய
> புகல்மறவரும் என
> நான்குடன் மாண்ட(து) ஆயினும் மாண்ட
> அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
> அதனுல், நமர்எனக் கோல்கோடாது
> பிறர்எனக் குணம்கொல்லாது
> ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்
> திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்
> வானத் தன்ன வண்மையும் மூன்றும்
> உடையை ஆகி... நீநீடு வாழிய (புறம். 55)

மதுரைக் குமரனுர் என்னும் புலவர் சோழ வேந்தன் ஒருவன் அன்புடன் ஒழுகாதது கண்டு அவன் முன்னிலையிலேயே, “ வேந்தர்தம் மண்ணுளும் பெருஞ் செல்வத்தை யாம் வியந்து நிற்போம் அல்லோம். சிறிய ஊரை ஆளும்

தலைவனே ஆயினும், எம் நிலை உணர்ந்து அன்பு செலுத்தும் பண்புடையன் ஆயின் அவனையே கண்டு மதிப்போம். அன்புக்குரிய உணர்ச்சி இல்லாதவர் பெற்றுள்ள செல்வத்தை மதித்து நினையோம்; எமக்கு எத்துணைக் கொடிய துன்பம் நேரினும் அவர் செல்வத்தை நினையோம்; அதற்கு மாறாக, நல்லறிவு உடையவர் செல்வம் இன்றி வறியவராய் வாழினும், அவர்தம் வறுமையையே நினைப்போம்; அவரையே நாடுவோம்; அவ்வாறு நினைத்து நாடுவதில்தான் எமக்குப் பேருவகை உண்டு" என்றார்.

மண்கெழு தானை ஒண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே;
எம்மால் வியக்கப் படூஉ மோரே...
சீறூர் மன்னர் ஆயினும் எம்வயின்
பாடறிந்(து) ஒழுகும் பண்பி னோரே;
மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளேம்;
நல்லறி(வு) உடையோர் நல்குர(வு)
உள்ளுதும் பெருமயாம் உவந்துநனி பெரிதே.

(புறம். 197)

அக்காலத்துப் புலவர், வேந்தர்தம் செல்வத்தையும் மதியாமல், வறியவரே ஆயினும் அறிவுடையவர்தம் நல்லுணர்வையே மதிப்பதாகத் தெளிவித்த துணிவுரை என்றும் போற்றத் தக்கதாக உளது அன்றோ?

மக்களுடைய வாழ்வே ஆராய்ச்சிக்கு உரியது. அம் மக்களுள்ளும் பாட்டு வடிவில் நிலைத்து நிற்பவர் புரவலரும் புலவருமாகிய இரு திறத்தாரே. ஆதலின், அவர்தம் சொல்லும் செயலும் கருவியாக அவர்தம் உள்ளம் உணரல் பயன் தருவதாகும்.

வாழ்க்கையில் பழக்கங்கள் பல ; வழக்கங்கள் பல ; சடங்குகள் பல. இவற்றை விரிவாக ஆராய்தலால் நாகரிகம் புலனும் என்று எண்ணுதற்கில்லை. பழக்க வழக்கங்களும் சடங்குகளும் முதன் முதலில் புகுத்திய மக்களின் மனப்பாங்கை உணர்த்துவனவே அன்றிப் பின்னர்ப் பல நூற்றுண்டுகளாகக் கண்மூடிப் பின்பற்றிச் செய்யும் மக்களின் மனப்பாங்கை உணர்த்துவன அல்ல. அவற்றைத் தொடக்கத்தில் செய்த மக்களின் மனப்பாங்கு இன்னதென அறியக் கூடாதவாறு அவற்றில் திரிபுகள் பல படிப்படியாகப் புகுந்திட்டமையால், அம் முயற்சியும் பயன் தருவது அன்று. ஆதலின், அவற்றை ஆராய்தலும் வேண்டா.

ஆங்காங்கு நிகழ்ந்த சில நிகழ்ச்சிகள் பாட்டுருப் பெற்றுள்ளன ; சில அறிவுரைகள் பாட்டுருப் பெற்றுள்ளன ; சில துணிவுரைகளும் அவ்வாறே அமைந்துள்ளன. நிகழ்ச்சிகளாகவும் அறிவுரைகளாகவும் துணிவுரைகளாகவும் பாடப்பெற்றுள்ள பாடல்களே நாகரிகத்தைத் தெளிவிக்கப் போதியன. நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக நின்ற நெஞ்ச நிலையே உண்மையான நாகரிகத்தை விளக்குவதாகும்.

## அஞ்சாமை

கருவூர் என்னும் பேரூரினைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஒருகால் முற்றுகையிட்டான். அவ்வூரெல்லையில் ஆன்பொருநை ஆறு அணி செய்து ஓடியது. ஆற்றங்கரையில் காவல்மரங்கள் இருந்தன. ஊர்ச் சிறு மகளிர் ஆற்றை அடைந்து மணலில் விளையாடிப் பொழுது போக்குதல் வழக்கம். ஆறும் ஊரும் அவ்வளவு அண்மையில் இருந்தன. காவல் மரங்கள் ஊரை அடுத்து ஆற்றங்கரையில் அமைந்திருந்தன. காவல் மரங்களைப் பகைவராய் வந்தோர் வெட்டுதலும் அதன் வாயிலாகப் போருக்கு அறைகூவிச் சினமூட்டுதலும் பண்டைக்கால மரபுகள். முற்றுகை யிட்டிருந்த கிள்ளிவளவனுடைய படைவீரர் அம்மரபு பற்றிக் கூரிய கோடரியைக் கையிற் கொண்டு காவல் மரங்களை வெட்டலாயினர். மரங்களின் நெடுங் கிளைகள் பூங்கொத்துக்களுடன் கமழ்ந்து வெட்டுண்டு வீழ்ந்தன. மரங்களை வெட்டும் ஓசை கருவூர் வேந்தனின் செவிக்கு எட்டவில்லையோ? எட்டிற்று, உடனே எட்டிற்று. ஆற்றங்கரையின் அண்மையால் மரம் வெட்டும் ஓசை வேந்தனுடைய அரண்மனையிற் சென்று எதிரொலித்தது. அகத்தோனாகிய வேந்தன் சினம் மூண்டனனோ? அல்லன்; போர்க்கு எழுந்தனனோ? அல்லன். யாதும் செய்யாது வாளா இருந்தான். ஒன்றும் தீங்குறுதவன்போல் வாளா இருந்தான்; 'இனிது' இருந்தான். புறத்தானாகிய கிள்ளிவளவனோ முரசங் கறங்க ஆரவாரம் செய்தான்.

ஆலத்தூர் கிழார் என்ற புலவர் இதனைக் கண்டார். இது போர் ஆகாமை உணர்ந்தார்; அறமின்மை அறிந்தார்; மறம் இன்மையும் தெளிந்தார். போர்க்கு முன்வாராது கருவூரை அடைத்திருக்கும் வேந்தனைத் தனக்கு ஒத்தவனாகக் கருதிப் பொர வந்த கிள்ளிவளவனை அணுகினார். "அரசே! நீ தொடர்ந்து போர் செய்யினும் செய்க; அன்றி முற்றுகை விடுத்து ஊர்க்குச் செல்லினும் செல்க; இவற்றுள் எது தக்கது? எது மறமும் அறமும் உடையது என்பதனை ஆராய்ந்தறிய வேண்டியது உன் கடமை. உன் உயர்வுக்கு - மறம் வழுவாப் பெருமைக்குத் - தக்கது யாது என நீயே அறிந்து செய்க. ஒன்று மட்டும் கூறுவேன். நீ யாருடன் போர் செய்கின்றாய் என்பதனை எண்ணிப் பார். நின் அறைகூவலுக்கு வெகுண்டு எழுந்து வாராது அமைதியாய் இருக்கும் வேந்தனோடு போர் தொடங்குகின்றாய். நீ காவல் மரம் வெட்டும் ஓசை அவனுடைய அரண்மனையில் எதிரொலிக்கின்றது. அவ்வளவு அண்மையில் அவன் இருந்தும், ஓசையைக் கேட்டும், நின் செயலினை அறிந்தும், அங்கே இனிது இருக்கின்றான். இத்தகைய வேந்தனோடு பொருகின்றாய் என்பதனை எண்ணிப்பார். இது நாணத் தக்கதாக உள்ளது" என்றார்.

அடுநை ஆயினும் விடுநை ஆயினும்
நீஅளந் தறிதிநின் புரைமை ; வார்கோல்
செறியரிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கின் தெற்றி ஆடும்
தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலின் நிலைஅழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறும்
கடிமரந் தடியும் ஓசை தன்னூர்
நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப [நின்
ஆங்(கு) இனி(து) இருந்த வேந்தனோ(டு) ஈங்கு

வை- இரா
சோழவந்தான்



சிலைத்தார் முரசங் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தக வுடைத்தே.
(புறம். 36.)

போரின்றி அமைதி நிலவுங் காலத்திலேயே அரசர் என்றால் அஞ்சி நின்று, செங்கோலுக்கு முன்னே சங்கீதம் செல்லாது என எண்ணி, கைகட்டி வாய் பொத்தி வணங்கி வழிபாடு செய்வது அறிஞர் உலகமோ? ஆலத்தூர் கிழார் எடுத்துக்காட்டாக நின்றது அறிஞர் உலகமோ? “அறிவுடையார் எல்லாம் உடையார்” என்று இறுமாந்திருத்தலைப் பிற்கால அறிஞர் உலகம் மறந்து விட்டது போலும்! ஆனால் இந்தப் பழந் தமிழறிஞரின் பெற்றி உலகினின்று அடியோடு மறந்தொழியவில்லை. வல்லரசுகளுக்கும் அஞ்சாது தம் உள்ளத்தில் உண்மை என உணர்ந்ததை உணர்ந்தவாறே உலகறிய எடுத்துரைக்கும் ஆங்கில அறிஞர் பெர்னார்டு ஷா முதலானவர் அறிவுலகத்தின் பெருமையை இன்றும் காத்து வருவது எண்ணி இன்புறத் தக்கதாகும்.

அறிவு என்றால் தந்திரம் என்றும், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொல்லிப் பகை மூட்டலே அத் தந்திரத்தின் பயன் என்றும் மயங்கிக் கூறும் கூற்றுக்களும் இக் காலத்து எழலாயின. அமைதி நிலவுங் காலத்திலும் அரசியல் தலைவர்க்குத் தாம் நண்பராய் நெருங்கிப் பழகி நன்மை பெறும் தன்னலங் கொண்டு பிறர்தம் குறையே கூறியும் அவர்தம் புகழே மொழிந்தும் அவரைத் தம்வயப் படுத்தும் ஆற்றலைப் பிற்காலத்து அறிவு பெருக்கிவிட்டது. ‘இன்னான் உம்மை இவ்வாறு பழித்தான். யான் அதனைக் கொள்ளேன். உம் பெருமை யான் நன்கு அறிவேன், நெடுங்காலமாக அறிவேன் அல்லனோ’ என அத் தலைவர் உளம் மகிழச் செய்து தம் அறிவின் பயனை

அடைய முயலும் இயல்பினர் இக்காலத்துப் பலர்; அக்காலத்தும் சிலர் இருந்தனர் போலும்.

எடுத்துக் காட்டு: இயற்பெயரால் அறியப்படாமல் ஊன்பொதிபசுங்குடையார் எனப் பாடற்சிறப்பால் அறியப்பட்ட புலவர் ஒருவர் சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியை அடுத்துப் பாடிய பாட்டு ஒன்று எக்காலத்தினர்க்கும் எஞ்சா அறிவொளியாய்த் தமிழ்க் கருவூலத்தில் திகழ்கின்றது. "அரசே! உன்னிடம் பலகாலும் பயின்று வந்து உன்னைப் புகழ்தலே தொழிலாகக் கொண்டு வழிபடுவோர் சிலர் உள்ளனர்; அவரை நீ விரைந்து ஆராய்ந்து அறிந்திடுக. சிலர் உன்னைப் புகழ்தலோடு நில்லாது, எளிதில் உன்னை வயப்படுத்தக் கருதி உனக்கு மாறுபட்டுள்ள பகைவரின் பழியை எடுத்துரைத்தலையே தொழிலாகக் கொண்டுள்ளனர். அவர்தம் மொழியை நம்பற்க" என்று இருபெருங் கருத்துக்களைத் தெளிவாக்கினர்.

வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதேற லையே

(புறம். 10)

அரசியலிலோ வேறு எத்துறையிலோ தலைவரென வருவோர் வழுக்கி வீழும் படுகுழிகள் இரண்டு உள்ளன எனின், அவை புகழ் மொழியை நச்சி அடிமையாதலும், பழிமொழியை நம்பிப் பகைகோடலும் ஆகிய இவ்விரண்டே யாகும். உயர்வு பெற விழையும் தலைவர் என்றென்றும் மறவாமல் போற்ற வேண்டிய உண்மை இங்குக் காணப்படுகின்றது.

இவ்வாறு தலைவரைப் புகழ்ந்தும் பிறரைப் பழித்தும் தம் வயிறு வளர்க்கும் கூட்டம் அக்காலத்துஞ்

சிறிது இருந்தது போலும்! இக்காலத்து அம்முறை ஒரு கலையாய், அக்கலைக்குக் 'காக்கை பிடித்தல்' என்று பெயரும் அமைதலாயிற்று. ஆயின், பண்டைத் தமிழ் நாகரிகம் இதனைக் கடிந்து ஒதுக்கியுள்ளது. அமைதிக் காலத்தில் வழிபாடும் ஆற்ருது, பிறர் பழியும் கூருது உண்மை எடுத்துரைத்தல் அரிதே; ஆயின், போர் வெறி கொண்டு சின மூண்டவனுய் முற்றுகையிட்டுக் காவல் மரங்களை வெட்டி நின்ற ஓர் அரசன் முன்னே சென்று கடிந்துரைத்து நிற்றல் அதனினும் அரிதே ஆகும். அத்தகைய நிலையில் ஆலத்தூர்கிழார் கிள்ளிவளவன் கண்ணெதிரே சென்று நின்ருர்; நின்று அவனுடைய பெரும்புகழை எடுத்தோதி அவனை வழிபட்டாரல்லர்; அல்லது, அடைத்திருந்த கருவூர் வேந்தனின் பழிகளை எடுத்தோதி அவனை வயப்படுத்த முயன்ருரல்லர். அவன் அப்போது செய்த செயலையே அஞ்சாது எடுத்துரைத்தார். போரின் அடிப்படை இன்னது என்பதனை அவனுக்கு நினைவூட்டினுர். அதனோடு அவனுடைய உரிமையையும் உரிமையைத் தக்கவாறு பயன்படுத்த வேண்டிய கடமையையும் தெளிவாக்கினுர். "அடுக அல்லது விடுக; உன் உயர் நெறி—அறம் வழுவா மறம் — இத்தகைத்தென எண்ணி அதற்கு ஏற்புடையதைச் செய்க" என்று ஆண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாய் அஞ்சாது நின்று எடுத்துரைத்தார். சினங்கொண்ட அவனது நெஞ்சில் ஊன்றிப் பதிந்து அவனது உள்ளத்தைக் கலக்கிக் கலக்கித் தெளிவுறுத்துமாறு ஒரு கடுஞ்சொல்லையும் கலந்து அறிவுரையை முடித்தார். "நாணம்" என்னும் சொல்லின் கடுமையைக் காண்க. "மலைத்தனை என்பது உனக்குப் பெருமை தரத் தக்கதாக இல்லையே. போரால் பெருமைப்பட வேண்டுவது போய்ச் சிறுமையுறல் வேண்டுமோ? தலைநிமிர்ந்து இறுமாத்தல் போய்த் தலைகுனிந்து நாண

வேண்டுமோ ?'' என்னும் சொல்மருந்து அமைய "மலைத் தனை என்பது நாணுத் தகவுடைத்தே'' என்றார்.

"கிள்ளிவளவ! நின் போர் வெற்றி யுறுக. நின் பகைவர் அழிக. நீ விடாது அழிக்க, காவல் மரங்களை அழித்த பின்னர்க் கடிமதிலும் அழிக்க. கருவூரான் கோழை. அவனை எளிதில் வெல்வாயாகுக. நீ சிங்கவேறு, அவன் செம்மறியாடு. வெற்றி உனது. அவன் சரண்புகி னும் விடேல்; அஞ்சி ஓடினும் விடேல். அவனை அழிப் பதே அறம்; அதுவே நின் மறம். நின்னினும் வலிய வேந்தர் இதற்கு முன் பிறந்ததும் இல்லை; இனிப் பிறப்ப தும் இல்லை. நின்னினும் வரையாது வழங்கும் வள்ளல் இன்றுவரை இல்லை; இனியும் இல்லை'' எனப் பலவாறு புகழ்ந்து, அறிவை விற்று, உலக அறத்தைக் கொன்று, தம் வயிறு ஒன்றே வாழ்வித்துப் பெறற்கரிய பரி சில் பெற்றுத் திரும்பியிருக்கலாம். ஆலத்தூர்கிழார் உண்மையறிவு உடைய பெரும் புலவராதலின் உயிரும் போற்றாது வயிறும் கருதாது உண்மை எடுத்துரைத்து அறத்தை வாழ்வித்தார். *

நாகரிக உலகில் இந்நிலை எளிதே. மற்றையுலகில் இது கனவினும் காண்பதற் கரியது. நாகரிக உலகு போரின் பெற்றியை உணர்வது; போர் செய்யும் தலை வரும் அதனை உணர்ந்தே செய்வர்; அவர்பால் சென்று உண்மையை எடுத்துரைத்தல் அறிஞர் கடமை. உதைபந்து விளையாடுமாறு காலிழந்த ஒருவனை மற்றொருவன் அழைத்தலைக் காணின், "இது நாணுத்தகவுடைத்து''

* பின்னர்க் கருவூரிலிருந்த வேந்தன் வெளியே போந்து களங்குறித்துப் போர் செய்ததாகவும் அப்போரில் கிள்ளிவள வன் வென்றதாகவும் மாறோக்கத்து நப்பசலையார் (புறம்-39) பாடலால் அறியக் கிடக்கின்றது.

என்று அழைத்தவனுக்கு அறிவுறுப்பதில் குற்றம் என்ன? அத்தகையதே ஆலத்தூர்கிழார் செயல்.

சோழர் ஆட்சியில் சிறந்து விளங்கிய ஊர்களுள் ஆவூர் என்பதும் ஒன்று. அவ் வூரின் உரிமை குறித்து நலங்கிள்ளி நெடுங்கிள்ளி என்னும் இருவரும் மாறுபட்டனர். நெடுங்கிள்ளி அவ்வூரைக் கைப்பற்றிக்கொண்டு அரணினுள் இருந்து மதில்வாயிலை அடைத்தான். நலங்கிள்ளி வெளியே முற்றுகையிட்டான்.

போர் செய்து வெல்லும் முயற்சியின்றி நெடுங்கிள்ளி அடைத்திருந்தான்; ஆதலின் அஃது ஆண்மைக் குறைவைக் காட்டிற்று. அத்தகையானுடன் முரணி முற்றுகையிடல் தகாது; எனினும் இது பொருந்தும்; காரணம் உளது.

போருக்கு அறை கூவுங்கால் எதிர்ப்பட்டுப் பொருதற்கு முன்வாராதவனை விடுத்துச் செல்லுதல் முறைமையே. ஆனால் தனக்கும் உரிமையாயுள்ள ஊரைக் கைப்பற்றிக்கொண்டு தன்னை அணுகவிடாத ஒருவனை அவ்வாறு விடுத்துச் செல்லுதல் தக்கதன்று; அங்நிலையில் தனக்கு உரியதைப் பற்றாது அஞ்சிச் சென்றான் என்னும் பழியே வந்து சாரும். ஆதலின், "எனக்கு உரியதைக் கொடுக்கும் வரையில் அவனை வெளியில் விடாது முற்றுகை யிடுவேன்; வெளியில் வந்து போர்செய்வதாயின் முற்றுகை தவிர்ப்பேன்" என உறுதி பூணுதலே நலங்கிள்ளியின் கடமையாயிற்று. அக்கடமையில் ஒன்றும் குற்றமில்லை யாதலின், புலவர் எவரும் நலங்கிள்ளியை நெருங்கி இடித்துரைக்கும் காரணம் இல்லையாயிற்று.

ஆயின், நெடுங்கிள்ளியின் நிலைமை வேறானது. "எனக்கு உரியதைக் கொடு" எனக் கேட்கும் பங்காளிக்குக் "கொடுப்பேன்" எனச் சொல்லிக் கதவு திறத்தலும்

செய்யாமல், "கொடேன், கேட்பின் போர் நிகழ்த்துவேன்" என வெளிப்போந்து பொருதலும் செய்யாமல், நெடுநாள் கதவடைத்துக் கிடத்தல் கோவூர்கிழார் என்ற புலவர்க்குத் தகாத செயலாகத் தெரிந்தது.

இம் முற்றுகையின் காரணத்தால் ஆவூர் துன்புற்றது. யானைகள் கயங்களில் படிந்து மகிழ்தற்கு இயலாமல் வருந்தின; கவளங்கள் பெறுமல் வருந்தின; கட்டுத் தறிகளில் கட்டுண்டவாறே கைபுரண்டு வெய்துயிர்த்து இடிபோல் முழங்கி வருந்தின. ஆவூர்க் குழந்தைகள் பாலின்றி அலறின; மகளிர் பூ இல்லாமல் கூந்தல் முடித்தனர். ஓவியச் செல்வம் மிக்க வீடுகள்தோறும் அழுகுரல் எழுந்தது. இவற்றை அறிந்த கோவூர்கிழார் மனம் நொந்தார்; வேந்தன் கடமை தவறியதாக உணர்ந்தார்; அறிவுறுத்தல் தம் கடமை என எழுந்தார்.

அரசன் ஒருவன் செங்கோல் கைப்பற்றி வெண்குடை நிழற்றி அரியாசனத் திருத்தல், தன் புகழையும் தன் வாழ்வையும் மட்டும் பெருக்கும் தன்னலங்கொண்டு செய்வதன்று. அரசன் கொண்ட குடை, வெயில் மறைவுக்காக அன்று, குடிகளின் துன்ப மறைவுக்காகவே என்று வெள்ளைக்குடி நாகனுர் என்னும் புலவர் மொழிந்தருளினுர்.

"கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்ரே அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ" (புறம். 35.)

ஆதலின், குடிகளின் துன்பத்தைப் போக்கி ஆளும்ஆட்சிக்காகக் கொண்ட வெண்குடையினையும் முறைவழுவாது நேர்மை காத்தற்கு அறிகுறியாகக் கொண்ட செங்கோலினையும் பொது நலங் கருதாது தன்னலங் கருதி வைத்திருப்பானேல், அவன் அரசன் அல்லன். ஆவூர் அலறும் நிலை

யினை அறிந்தும் நெடுங்கிள்ளி வாளா இருந்தான்; கவலையின்றி இருந்தான்; இனிது இருத்தல் எனக் குறித்திட்டார் புலவர். குழவிகளும் மகளிரும் வருந்தும் நிலையில் விட்டுவிட்டு, ஊரின் உரிமையைக் காக்கும் காவல் தன்னலத்தின் பாற்பட்டதா? பொதுநலத்தின் பாற்பட்டதா? பொதுநலமே நோக்கமெனின், ஊர் முழுதும் வருந்தும் துன்பத்தையே முதலில் போக்க வேண்டும். அதனைச் செய்யாது மதிலினுள்ளிருந்து கதவடைத்து "நலங்கிள்ளிக்குக் கொடேன்" என்று வாளா இருத்தல் தன்னலங் கொண்ட செய்கையே! தன்னலமில்லையேல், ஒன்று செய்யலாம்; அஃது அரசர் குடிக்கு உரிய செயலே; அஃதாவது ஆண்மை மிக்கவர் ஆட்சிக்கு உரியர்; ஆண்மை மிக்கவர் யார் என அறிதற்கு மதிற்புறத்தே களங்குறித்துப் போர் செய்தே அறிதல் வேண்டும். வெற்றியும் தோல்வியும் அதனால் விரைவில் விளங்கும். இத்தகைய துயரோடு ஊரார் அலறும் துன்பம் தவிரும். வென்றவர் நாட்டை ஆளும் வழி பிறந்திடும். இம்முறை மறத்தின்பாற் பட்டது.

மற்றொரு வழியும் உளது; நலங்கிள்ளியும் சோழர் குடியில் பிறந்தவனே. அவனுக்கும் ஆவூரை ஆளும் உரிமை உள்ளது. ஆதலின், அடைத்த கதவைத் திறந்து, "நீயே ஆள்க; நீயும் சோழனே" என்று கூறி இடந்தரலாம். இஃது அறத்தினை அடிப்படையாகக் கொண்டது.

ஆவூரின் கொடுந்துயர் கண்டு நெடுங்கிள்ளியிடம் சென்ற புலவர் தம் கருத்தை அஞ்சாது எடுத்துரைத்தார்; அதனினும் உணர்ச்சி மிக்க இடித்துரை இல்லை எனுமாறு உரைத்தார். "வேந்தே! நீ இங்கே இனிது இருக்கின்றாய்; இது கொடுமை. நீ அறம் போற்றின், இதோ உன்னுடைய ஊர் எனத் திறந்திடுக; அன்றி மறம் போற்றின், வருக போருக்கு எனப் போர் செய்யத் திறந்திடுக.

இங்கு நீ இருக்கும் நிலையில் அறமும் காணேன்; மறமும் காணேன். வலிய கதவைத் திறவாது அடைத்து, நீண்ட மதிலின் ஒரு மூலையில் ஒடுங்கியிருக்கின்றாய். இந் நிலை காணுங்கால் நாணத் தக்கதாயுள்ளது!'' என்றார்.

இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த ஒற்றி
நிலமிசைப் புரளும் கைய வெய்துயிர்த்(து)
அலமரல் யானை உருமென முழங்கவும்
பாலில் குழவி அலறவும் மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும் நீரில்
வினைபுனை நல்லில் இனைகூஉக் கேட்பவும்
இன்னா தம்ம ஈங்கினி திருத்தல்
துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்
அறவை ஆயின் நினதெனத் திறத்தல்
மறவை ஆயின் போரொடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே (புறம். 44)

அரசர்க்குப் பெருஞ் செல்வமாய் விளங்கியது யானைப் படை. அத்தகைய யானைப்படை கயம்படிதல் இன்றிக் கவளம் பெறுதல் இன்றிக் கை புரண்டு பெருமூச்செறி தலை அறிந்தும் வருந்தாது நெடுங்கிள்ளி இனிதிருக்க முடிந் ததே என்று புலவர் கொதித்தார். அவன் கண் போன்ற யானைப் படையின் துன்பம் உணர்ந்து உருகாமையைக் கடியத் தொடங்கியவர், தம் உள்ளம் உருகக் கேட்ட குழந்தைகளின் அலறலையும் எடுத்துரைத்தார். புலவர் "ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம் சான்றோ"ராத லின், குழந்தைகளின் துன்பங் கண்டு அவர் நெஞ்சம்

பொறுக்கவில்லை. மகளிர் அழகிழந்து வாடுதலையும் அழகிய மனைகளில் அழுகுரல் கேட்டலையும் நினைந்து வெதும்பியே, "இன்னு தம்ம ஈங்கினி திருத்தல்" என்று இடித்துரைத்தார். அரசனது வலிமையை இகழ்ந்துரைத்தல் இயலாது. அவன் அத்துணை வலிமை மிக்கவனே. ஆயினும், அவன் அரண் வலி பெரிதெனக் கருதி ஒரு மூலையில் ஒடுங்கியிருத்தல் தகாதென எள்ளியுரைத்தார். துன்னருந் துப்பு உடையவன் ஒடுங்குதல் நாணத்தக்கது என்று கடிந்து கூறும் உரையில் விளங்கும் வன்மை பு... ...றலை எடுத்துக்காட்டுகின்றது.

அரசனைப் பலவாறு புகழ்ந்துரைத்து அவ... வன யாவும் செம்மையே எனக் கூறிப் பெறும் செ... கினைப் புலவர் பெரிதென மதித்தா ரல்லர்; குடி... துன்பத்தைப் போக்காது தன்னலங் கொண்டு ஒடு... அவனது செயலைக் கடிந்து அதனால் தமக்கு யாது வரினும் வருக என்று துணிந்து பொதுநலமே பெரிதென மதித்தார்; பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றுவே அறிவின் பயன் அன்றோ?

> அறிவினான் ஆகுவ(து) உண்டோ பிறிதின்நோய்
> தன்நோய்போல் போற்றாக் கடை (திருக்குறள்)

என்று சான்றோர் போற்றிய நெறியே நெறி எனக் கொண்டு அறிவைப் போற்றிய கோவூர்கிழாரின் சொற்கள் செஞ்சொற்கள்; அச் சொற்கள் பிறந்த நெஞ்சமே நாகரிகம் வாழும் கோயில் ஆகும்.

முற்றுகை உறையூரிலும் நிகழ்ந்தது. அந்த நெடுங்கிள்ளியே அடைத்திருந்தவன்; நலங்கிள்ளியே முற்றியிருந்தவன் *கடும்போர் புரிதற்கு வேண்டும் ஏற்பாடுகள்

---

*நலங்கிள்ளி உறையூரைப் பெற்று ஆண்டதாகக் கோவூர்கிழார் பாடிய புறநானூறு 68-ஆம் பாட்டால் தெரிகின்றது.

அனைத்தும் தனித்தனியே இருவரும் செய்துவந்தனர். கோவூர் கிழார் நெஞ்சம் அங்கும் வாளா இருக்கவில்லை. ஒரு குடியில் பிறந்த மக்கள் இருவரும் இவ்வாறு பொருதல் அறிவற்ற செயல் என அவர் மனத்திற் பட்டது. நெடுங்கிள்ளி சூடியதும் ஆத்தியே; நலங்கிள்ளி சூடியதும் ஆத்தியே. இருவர் விழைந்ததும் வெற்றியே. இருவரும் வெல்லும் வழி உண்டெனின் நன்றே; ஆயின் அஃது உலகில் இல்லாதது. போரெனின் ஒருவனுக்குத் தோல்வியும் மற்றவனுக்கு வெற்றியுமாக முடிதல் இயல்பு. சோழன் வென்றான், சோழன் தோற்றான் என முடியுமாறு ஒரு போர் நிகழ்த்தல் அறிவுடைமையோ? இவ்வாறு எண்ணித் தெளிந்தவராய் இருவர்பாலும் சென்றார்.

புலவர் குடி முதலிய எல்லைகளைக் கடந்தும் நோக்க வல்லவர். "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற பெரு நோக்கு அவரது புலமைக்கு உரிமையானதே. அந் நோக்கு எனது நாடு உனது நாடு என மாறுகொள்ளும் அரசர்க்கு எட்டாதது; ஆதலின் அரசர் பெரிதெனப் போற்றி யுணர்ந்த குடிப்பற்றுக் கொண்டே அவர்க்கு அறிவுறுத்தலானார். அக் காலத்து அரசர் குடிப்பற்று மிக்கவர்; குடியின் புகழ்க்கும் சிறப்புக்கும் அறிகுறியாகக் கொண்ட குடிப் பூவினைத் தம் உயிரெனப் போற்றியவர். சோழர் ஆத்திப் பூவினைக் குடிப் பூவாகக் கொண்டவர்; ஆதலின் சோழன் எவனும் ஆத்தியைப் பழிக்கப் பொறுத்திரான்; இவ்வாறுள்ள அரசர் மன நிலை உணர்ந்த புலவர் அவர் போற்றுவன கொண்டே அறிவுறுக்கத் தொடங்கினார். அவரது நோக்கமோ, போரை நிறுத்தல் வேண்டும் என்பதே; அஃது அறம் பற்றிய நோக்கமாகும்.

"வேந்தே! உன்னோடு மாறுபாடு கொண்டவன் சேர வேந்தன் அல்லன்; பாண்டிய வேந்தனும் அல்லன். அவன்

பனந்தோடும் அணியவில்லை; வேப்பம்பூவும் அணியவில்லை. நீ சூடிய ஆத்தியே உன் பகைவனும் சூடியுள்ளான். உங்களுள் எவர் தோற்றாலும் சோழர் குடிக்கே தோல்வியாகும். சோழர் குடிக்குத் தோல்வி நேராது வெற்றி விளைய வேண்டுமாயின், நீங்கள் இருவரும் வெற்றிபெறல் வேண்டும். இத்தகைய போரில் இருசாரார் வெல்லுதல் இயல்பன்றே! ஆகையால் நீங்கள் முனைந்த செயல் உங்கள் குடிக்குச் சிறுமை தேடுவதே அன்றி, பெருமை நாடுவது அன்று. ஆயின், இச் செயலால் விளையும் பெருமை உங்களுக்கு இல்லாமற் போயினும் பிறர்க்கு விளைவது திண்ணம். உங்களுக்கு நிகரான சேரர்க்கும் பாண்டியர்க்கும் இப் போர் பெருமையையும் தரும் ; பெரு மகிழ்ச்சியையும் தரும்" என்றார் புலவர்.

இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே, அதனான்
குடிப்பொருள் அன்று நுஞ் செய்தி கொடித்தேர்
நும்ஓர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யுமிவ் விகலே. (புறம். 45)

உலகம் விளங்க வேண்டும் என்னும் பொது நோக்கம் கொண்டவர் புலவர் பெருந்தகையார். குடி விளங்க வேண்டும் என்னும் அளவிலேனும் நோக்கம் பெருகுமாறு அறிவுறுத்தினார் கோவூர் கிழார். தான் விளங்கவேண்டும் என்னும் தன்னல நோக்கமே கொண்டவர்க்கு அவ்வாறு குடி விளங்கும் நோக்கம் வருமாறு செய்தல் அறிவான முயற்சியே ஆகும் ; தகுதி யறிந்து செய்த நன் முயற்சியே ஆகும்.

ஆனால், உலகந் தோன்றிய நாள்முதல் தான் விளங்க வேண்டும் என்னும் தன்னலமே பெருகி யிருந்துவந்துள்ளது. நாடுதோறும் எழுந்த போர்கள் பலவும் இத் தன்னலத்தால் எழுந்த போர்களே. வரலாறுகள் எல்லாம் இக் கொடும் போர்கள் பலவற்றைப் பற்றியனவே. வழங்கும் கதைகளும் இவை பற்றியனவே. அவை அண்ணன் தம்பி மாறுபாட்டைப் பற்றியனவா யிருக்கும்; அல்லது, தந்தை மகன் சீற்றத்தைக் குறித்தனவா யிருக்கும்; அல்லது, கணவன் மனைவி முரண்பாட்டைக் கூறுவனவா யிருக்கும்; அல்லது, தமக்கை தங்கை வேறுபாட்டை உரைப்பனவா யிருக்கும்; அல்லது, நம்பிய நண்பர் இருவர் பிளவைத் தெரிவிப்பனவா யிருக்கும்; இவை போன்றனவா யிருக்கும்.

உலகத்தைத் திருத்துவதற்கு என்று அமைந்த பெரு நிலையங்களும் இந்த நச்சுமர நிழலால் அழிந்தன. தாம் விளங்க வேண்டும் என்னும் தன்னலங் கொண்டு நிலையத் தலைவர் நிலையங்களை அழித்தனர்; நிலையம் விளங்கவேண்டும் என்னும் பொதுநலங் கருதாது அழித்தனர். தாம் விளங்க வேண்டும் என்னும் தன்னலத்தால் சிலர் சமய அமைப்புக்களையும் அழித்தனர்; சமய அமைப்புப் பெரிது என்னும் பெருநோக்கம் இன்மையால் அழித்தனர். அத் தன்னலத்தால் சிலர் மொழி யாக்கத்திற்கும் கேடு சூழ்ந்தனர்; மொழி யாக்கம் பொது நலம் பயப்பது எனக் கருதாது கெடுத்தனர். உலக முழுவதும் உய்யும் பொது நோக்கம் கொண்ட அரசியலமைப்பும் தன்னலங் கொண்ட தலைவரால் தகர்ந்து தகர்ந்து வீழ்கின்றது.

நாகரிகம் என்பது தன்னலத்தைக் கொன்று வீழ்த்திய இடத்தில் விளையும் நன்மர நீழல். குடி நலம் கருதிக் கருதி நாட்டு நலம் நாடி நாடி உலகப் பொதுநலமாய் விரியும் நன்மர நீழலே நாகரிகம். அந் நாகரிகத்தின் கவடு

எனத் தக்க குடிப்பொருளை வற்புறுத்தினர் கோவூர் கிழார். “நுஞ்செய்தி குடிப் பொருள் அன்று” என்று கடிந்துரைத்துத் தன்னலப் போரைக் கொன்று வீழ்த்த முனைந்தார்.

புலவர் மனத்தில் இத்தகைய பொதுநலம் கனிந்திருக்க வில்லையேல், அவர் தன்னலங் கொண்ட பேயனாய் இருந் திருப்பின், நலங்கிள்ளிபால் சென்றபோது அவனுக்கு உவப் பாகப் புகழ்ந்து மாற்றானைப் பழித்து வந்திருத்தல் கூடும்; நெடுங்கிள்ளிபால் சென்றபோதும் அவ்வாறே, “நீயே வேந்தன்; அவனுக்கு அரசும் தகுமோ? அவனை அழிக் கும் நின் முயற்சி வெல்வதாக. அவன் கயவன்; நீயோ சோழர் குடித் தோன்றல். வாழ்க நின் கொற்றம்” என அவன்புகழால் உவப்பித்தும், மாற்றான் பழியால் மகிழ வித்தும் வந்திருத்தல் கூடும். இருவர்பாலும் எய்தற்கரிய பெரும் பரிசுகளைப் பெற்று இனிதின் வாழ்ந்து காலங் கழித்திருக்கலாம். போரின் விளைவுகளை நினைந்து உருகிப் பொதுநலம் போற்றித் தன்னலம் மறந்து உலகம் உய் யும் நெறியறிந் துணர்த்திய அன்பு நெஞ்சம் இந் நிலைக்கு ஒருகாலும் இழிந்திருத்தல் இயலாது. நன்மர நீழலில் இன்புற்றோர் நச்சுமர நிழலை நாடக் கனவிலும் கருது வரோ? நச்சு மரத்தை வெட்டி வீழ்த்தவும் அஞ்சுவரோ?

# அருள் உணர்வு

தன்னலம் பல வடிவு கொள்ளும். அவற்றுள் மிகக் கொடிய வடிவு பழிக்குப் பழி வாங்குதலே யாகும். அக் கொடுஞ் செயலில் - பழிக்குப் பழிவாங்குதலில் - ஆண்மையும் இல்லை; அறமும் இல்லை; தன்னலம் ஒன்றே கொடிய வடிவு கொண்டுள்ளது.

ஒரு கன்னத்தில் அறைந்தவனை அவனுடைய இரு கன்னத்திலும் திருப்பி அறைதல் உலகியல். பொறுத்திருந்து அவனைத் திருத்த முயலுதல் அன்பியல். பொறுத்திருக்க மன வலிமை வேண்டும்; மன வலிமை இல்லாதார் உடனே சினங்கொண்டு அதற்கு ஈடாக அறைந்து ஒருவாறு மகிழ்வர். அவ்வாறு செய்தலால் என்ன விளையும் என்பதை எண்ணவும் அவரது மனம் இடந்தருவதில்லை. திருப்பி அறைவோர் என்ன பயன் காண்பர்? பகைவனை வென்றதாக மகிழ்தற்கு இல்லை; அவன் மேலும் சினங் கொண்டு காலம் வரும் என்று அடங்கி யிருப்பானுதலின், அவனை வென்றதாகக் கொள்வதற்கில்லை. திருப்பி அறைந்த அளவில் தாம் மகிழ்ந்தமையால் மன வலிமை மேலும் குறைந்தவராய் விடுவர். அன்றியும், பகைவனைச் சிறிதும் திருத்தாமையால் தோல்வியே பெற்றுர் எனல் வேண்டும். இத்துணைக்கும் காரணம் வலியற்ற மனமே யாகும். வலியுற்ற மனத்தினரோ, பொறுத்திருந்து பகைவன் நெஞ்சத்தில் நாணம் எழுப்பித் திருத்தலும் கூடும்;

அன்றி அச்சம் உளதாக்கி அடக்கவும் கூடும். அறமும் ஆண்மையும் இவர்பால் உளவாகும்.

> ஒறுத்தார்க்(கு) ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
> பொன்றுந் துணையும் புகழ்

என்னும் வள்ளுவர் வாய்மொழியை உன்னி உணரவல்லார்க்கு உண்மை விளங்கும்.

திருப்பி அறைந்தவன் தன்னலம் உடையவனா? பொறுத்திருந்தவன் தன்னலம் உடையவனா? ஒருவன் செய்த தீங்கிற்கு ஈடாக உடனே தீங்கு செய்யும் மனம் தனக்கு வெற்றி தேடும் மனம்; இவ்வாறு தேடிப் பெறும் வெற்றியோ கிடைத்தற்கு அரிதாய், கிடைப்பினும் பொய்யாய் நிலையற்றதாய் மாய்கின்றது. அவன் செயலால் ஒரு நாள் இன்பம் அவனுக்கு உளதாகுமே அன்றி, உலகிற்கு நன்மை இல்லை; பகைவனைத் திருத்தும் வாய்ப்பையும் அவன் இழந்தவன் ஆகின்றான். ஆதலின், அவன் தன் வெற்றி கருதி, நன்மை செய்யும் ஆற்றல் இழக்கின்றான். தன்னலத்தின் விளைவு இது.

தன் வெற்றியும் மகிழ்ச்சியும் பொருள் எனக் கொள்ளாது, எது நன்மை விளைப்பது என எண்ணுபவனே பொறுமை பூண்பான்; அப் பொறுமை வாயிலாக, உலகில் நல்லறத்தை நிறுத்திப் பூசலைக் குறைத்திடுவான்; இயன்ற அளவு பகைவனைத் திருத்தும் முயற்சியில் வெற்றி பெறின், உலகில் கொடுமையும் குறைத்திடுவான். இவனது நோக்கு உயர்ந்த பொதுநலம் விளைப்பதாகும்.

இவ்வாறு ஆராயின், திருப்பி அறைகின்றவன் - தீங்கிழைத்தவனை ஒறுக்கின்றவன் - தன்னலமே போற்றுபவன் என்பது தெளிவாகும். தன்னலம் இவ்வளவில் நிற்பதுமில்லை. தீங்கிழைத்தவனை ஒறுப்பதோடு அமை

யாது, அவனுடைய மக்கள் எளியராய்த் தன் கையில் அகப்படுவராயின், அவரையும் ஒறுக்க எண்ணுதல்உண்டு. அவனுடைய வீட்டுப் பசு கண்ணில் காணப்படின், அதன் காலை ஒடித்தனுப்ப எண்ணும் சிறு மனமும் உண்டு. இது சிறுவரிடையே மிகுதியாய்க் காணப்படுவது. சிறுமி ஒருத்தியின் சிற்றிலை மற்றொருத்தி காலால் சிதைத்தால், முன்னவள் உடனே நேரே சென்று அவள் இழைத்த சிற்றிலை அடியோடு அழித்தல் காணலாம் ; அவள் இழைத்த சிற்றிலை அழிப்பதோடு அமையாமல், அவள் தங்கை இழைத்த சிற்றிலையும் அவ்வாறே செய்ய முனைவாள் ; அவை மட்டும் அல்ல ; அச் சிறுமி எங்கேனும் முல்லைக் கொடி வைத்து நீர்பாய்ச்சிப் பாராட்டி வளர்ப்பாளாயின், அந்த முல்லைக்கொடி மீதும் சினங்கொண்டு அதனை ஒடித்தெறிந்து பாழ்படுத்துவாள். அறிவிலாச் சிறுவரிடம் காணும் இவ்வியல்பே அரசாளும் தலைவரிடமும் காணப்படின், இதுவே உலகின் பெருங் குறை. ஆளும் தலைவர்பால் தன்னலத்தின் பேய் வடிவு காணப்படுமாயின், அவர்க்கு அடங்கி அவரைத் தலைவரெனப் போற்றி வாழும் குடிகள் எவ்வாறு திருந்துதல் இயலும் ? இதுவே பழிக்குப் பழிவாங்கும் பாழ்மனத்தின் செயல் !

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமானொடு பகை கொண்டவன். மலையமான் திருமுடிக்காரியும் வேந்தனை யொத்த புகழும் ஆண்மையும் படைத்தவன் ; புலவர்பால் அன்பு கொண்டு அவர் தம் புலமையை வாழ்விக்கும் கொடை நலம் பூண்டவன் ; கபிலர், மாறோக்கத்து நப்பசலையார் முதலாய செந்நாப் புலவரால் சிறப்பித்துப் பாடப்பெறும் பெருமை பெற்றவன். ஆயினும் சோழன் கிள்ளிவளவனுக்கும் வள்ளல் மலையமானுக்கும் பகைமை இருந்தது. மலையமான் மாண்ட பின்னரும் அப் பகைமை மாளவில்லை.

மலையமான் மக்கள் சோழனிடம் அகப்பட்டுக்கொண்டனர். சோழ வேந்தனோ மலையமான் மீதிருந்த பழைய பகையைச் சிறிதும் மறந்தானல்லன். தன் சிற்றிலை அழித்தவள் வளர்த்த முல்லைக் கொடிமீது சீற்றங் கொண்டு அவ் வழகிய பூங்கொடியை ஒடித்தெறியும் அறிவிலாச் சிறுமியின் மன நிலையே அப்போது சோழன் கிள்ளிவளவனுக்கு இருந்த மன நிலையாகும். "இவர் யார்? நம் பகைவன் மலையமான் பெற்ற மக்கள் அல்லரோ? பழிவாங்கும் வாய்ப்புக் கிடைத்தது. இவர்களைக் கொன்றிடுவேன்" என வன்னெஞ்சங் கொண்டான். அத்தகைய தன்னலப் பேய் வந்து ஆட்டிய காலத்தில் அவ் வேந்தன் தன் குடிப் பண்பை முற்றும் மறந்தான். சோழர் குடி அருளுக்குப் பேர்பெற்ற குடி; அடைக்கலம் புகுவாரை அரண் செய்து காக்கும் குடி; அக் குடிப் பண்பு மறைந்தது.

சோழனது கொடு மனத்திற்கு இரையாக நின்றவரோ வள்ளல் ஒருவன் பெற்ற அருமை மக்கள். அம் மக்களை ஈன்ற தந்தை மலையமான் "மாவண் தோன்றல்" எனக் கபிலரால் சிறப்பிக்கப்பட்டவன்; தான் பெற்றவையெல்லாம் பிறர்க்கே அளித்துத் தன் துணைவியின் தோளன்றிப் பிறிதொன்றும் உரிமை இன்றிப் பிறர்க்குரியாளனாய் வாழ்ந்தவன்; எண்ணத் தொலையா இழையணி நெடுந்தேர் இரவலர்க்கு ஈந்து இசைமிகச் சிறந்தவன். இத்தகைப் பெரியோன் பெற்ற அருமை மக்கள் தமக்கு வருவது அறியாது நின்றனர்.

அம் மக்கள் நின்ற இடம் ஊர் மன்றம். மன்றத்தில் பலர் குழுமி யிருந்தனர். அவர் நெஞ்சம் பழி வாங்கும் கொடுமையின்பாற்பட்டு இறுகி யிருந்தமையால், சிறிதும் இளகவில்லை. அச்சுறுத்தும் வாள்வீரர் தம்மைச் சுற்றி நிற்றலைக் கண்டு அஞ்சி மக்கள் அழுதுகொண்டிருந்தனர். அம் மன்றத்தை! நோக்கி யானை ஒன்று வந்தது. யானை

யைக் கண்டதும் மக்கள் பெருவியப்பு உற்றவராய் அதனை நோக்கியவாறே அழுகையை மறந்து நின்றனர்.

யானை வந்தது இவர்களை மகிழ்வித்தற் பொருட்டு அன்று; இவர்களைக் கொல்லும்பொருட்டே யாகும். யானைக்கு இட்டு அம்மக்களின் ஆருயிரைப் போக்கக் கிள்ளிவளவன் துணிந்தான். வாள் வீரர் சூழ்ந்து அச் சுறுத்தும் துன்பத்தை மக்கள் மறந்தனர். இளஞ் சிறுவர் புதிய காட்சியைக் கண்டு மயங்கினர்; அழுகையை மறந்தனர். சூழ்ந்துள்ள துன்பத்தையே மறக்கும் குழந்தை மனம் வருந் துன்பத்தை அறியவல்லதோ? தம் கண்ணைக் கவருந் தோற்றமும் நடையும் உடையதாய் வந்த யானை தம்மைக் கொல்ல வந்துள்ளது என்பதனை இளஞ் சிறுவர் அறியார்; அறியாமையால் யானையைக் கண்டு மயங்கி வியந்து நின்றனர்.

அந் நிலையில் மன்றத்தார் பின் தொடரச் சோழன் நடுவே வந்து அமர்ந்தான். அவரனைவரையும் சிறுவர் மருண்டு மருண்டு பார்த்தனர். இவர் ஆணையால் கொலை நடைபெறும் என்பதனை அச் சிறுவர் அறியார். இரக்க மற்று இறுமாப்புடன் வீற்றிருந்த கிள்ளிவளவன் அணிந்தனவும் மன்றத்தார் உடுத்தனவும் சிறுவர் கண்ணைக் கவர்ந்து மருட்கை யுணர்வை ஊட்டின. மன்றத்தின் தோற்றம் அவர்க்குப் புதியது. புதுமை கண்டு மகிழும் மனமோ அந்நிலையில் இல்லை. யானையைக் கண்டு அழுகையை மறந்தனரே அன்றித் துன்பம் அற்றனர் அல்லர். உள்ளத்தே துன்பம் மிகுந்து கலக்க, மன்றம் புதுமை மிகுந்து மருட்ட, சிறுவர் சுற்றிலும் நோக்கிக்கொண்டிருந்தனர்.

நாட்டை ஆளும் அரசன் பொறுமை பொறுமை என்று எல்லாவற்றையும் பொறுத்திருத்தல் தகுதியன்று.

தீமையைக் களைந்து நன்மையைக் காக்கும் கடப்பாடு அரசனுக்கு உண்டு. ஆதலின், தீமையைப் பொறுத்திராது களைந்திட முன்வரல் வேண்டும். அவன் கையில் ஒறுப்பு என்னும் பொறுப்பு மிக்க கடமை அமைந்துள்ளது. அவன் அக் கடமையை நிறைவேற்றுங் காலத்தில் தனக்குத் தீங்கு செய்வோன் எவன் எனத் தேடி ஒறுத்த லாகாது. தன் குடிகளுக்குத் தீங்கு செய்வோனையே நாடி ஒறுத்தல் வேண்டும். அங்ஙனம் செய்யும் செயல் பயிரிடும் உழவன் களை போக்கும் கடமையை நிகர்த்தது.

> கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்.

ஆயின், இங்கே கிள்ளிவளவன் ஒறுக்க முனைந்த ஒறுப்பு எத்தகையது ? தன் குடிகட்கு மலையமான் தீங் கிழைத்தான் என எண்ணித் தொடங்கினனல்லன் ; தன் பகைவன், தனக்கு ஆகாதவன் என்றே தொடங்கினன். அன்றியும், மலையமான் தீய பகைவன் என்றே கொள்ளி னும், அவன் பெற்ற மக்கள்—இளஞ் சிறுவர்—குடிகட் குத் தீங்கு விளைப்பவர் என எண்ணியது அறிவுடை மையோ ? சோழன் காக்கும் குடிகட்கு இச் சிறுவர் களை எனக் களையத் தக்கவரோ ? தன்னல நோக்கம் அறத்தினை உணராதவாறு உணர்வைக் கெடுத்தது. ஆதலின் அரசன் தவறினன்.

கொல்லும் ஆணை பிறந்ததும் யானை அருமை மக்களின் ஆவியைப் போக்க நின்றது. வேந்தனது கொடுமனத்தே செம்மை சிறிதும் இல்லை. மலையமான் என்று எண்ணி எண்ணிப் பலகாலும் பகைமை வளர்த்துத் தன்னலத்தால் வன்மை பெற்ற நெஞ்சம் இரங்காமல் இருந்தான். வேந் தனது உறுதிக்கு முன்னர்த் தம் உரை செல்லாதென்றோ, உரைப்பின் தமக்கும் தீங்காமோ என அஞ்சியோ, மன்

றத்தார் பலரும் அவன் ஆணையை நிறைவேற்றக் காத்திருந் தனர். அரசன் தன்னலம் பெரிது; அமைச்சர் முதலா னோர் தன்னலமோ அச்சத்தால் ஆகி அடக்கமாயிருந்தது. அவரிடையே தன்னலமற்ற புலமைப் பெருந்திருவினர் ஒருவர் இருந்தார். அவர்க்கோ அச்சம் இல்லை; அச் சுறுத்துவார்க்கு அடங்கும் அடக்கமும் இல்லை; அருள் என்ற ஒப்பற்ற நற்பண்பே உருவாய நெஞ்சமே இருந்தது.

அரசனைப் போற்றி அவன் செயலைப் புகழும் கடமை அவர்க்குப் பெரிதாகத் தோன்றவில்லை. அரசன் ஆணை அவர்க்கு வலிதாகத் தோன்றவில்லை. அரசனுற் பெறுஞ் செல்வாக்கும் அவர்க்குச் சிறந்ததாகத் தோன்றவில்லை. பரிசு பெறும் உரிமைபோய் அரசனது ஒறுப்புக்கு ஆளாக நேருமே என்றும் அவர் சிறிதேனும் அஞ்சினரல்லர். பிறர்மேல் வைத்துக் கூறி, உலகம் பழிக்கும் என்று எடுத் துரைக்க முயலலாம் என்ற தந்திரமும் அவர் கொண்டா ரல்லர்.

அரசனை நெருங்கி நின்று தம் உள்ளத்தில் எழுந்த உண்மைகளை எடுத்துரைக்கலானர்: "வேந்தே! உன் ஆணையை நிறைவேற்று முன் யான் சொல்வன கேட்க. எண்ணிப் பார்க்க. நீ பறவைக்கும் அருள் சுரந்த அருளா ளன் மரபில்—சோழர் குடியில் பிறந்தவன். நீ கொல்லத் துணிந்த இச் சிறுவரோ புலமை வாழுமாறு வாழ்ந்து புலவர் இடுக்கண் கண்டு அஞ்சிய அருளாளன் மக்கள். இவர்தம் நிலையை உன்னுக. களிறு கண்டதும் அழுகையை மறக்கும் குழந்தை மனத்தை ஆராய்க. மன்றத்தை மருண்டு நோக்குதல் காண்க. இவர்தம் உள்ளத்தே புதுமையான துன்ப உணர்வு உள்ளது என்பதை உணர்க. யான் கூறுவன இவையே. கேட்டனையோ? கேட்டனை ஆயின் நீ விரும்பியது செய்திடுக" என்ருர்.

கிள்ளிவளவன் என்னும் தன் எண்ணம் விடுத்துத் தன் குடியைப் பற்றி எண்ணுமாறு செய்திட்டு அதன் வாயிலாக வேந்தன் மனத்தை மாற்ற முயன்றார்; குடியின் பெருமைக்குக் காரணமான அருட்பண்பை நினைவூட்டினார்; மலையமான் தன்னை எதிர்த்த ஒரு தலைவன் என்ற எண்ணம் ஒழித்துப் புலவர் பலரைக் காத்த பெரியோன் என எண்ணச் செய்தார். தம் கண்ணிற் கண்டு சிறுவர் மன நிலையை உணர்ந்து உருகியவாறு இஃது என அரசனும் உணர்ந்திடுமாறு அறிவித்தார். "நீ கொலை செய்க, அல்லது செய்யாதொழிக" எனக் கூறவும் மனமின்றி, கொலை என்ற சொல்லையும் கூற நா எழாத அருள் நெஞ்சத்தினராய், நீ விரும்பியது (நீ வேட்டது) செய்க எனக் குறித்தார்; அரசன் விரும்பிய செயல் தம் நாவால் குறித்திடவும் தகாத செயல் என்பதையும் தெளிவுபடுத்தினார்.

அரசன் உள்ளத்தில் குடிகொண்டிருந்த தன்னலம் ஒழிந்தது. அருள் குடிபுகுந்தது. அவன் அருளற்ற கொடியோன் அல்லன். பழிக்குப் பழி வாங்கும் கொடு மனத்தின் முன் அவனது இயல்பான அருளுடைமை ஒதுங்கி நின்றது. புலவர் கோவூர்கிழார் மொழிந்த அருள் மொழி மீண்டும் அவன் நெஞ்சத்தில் அருள் விளங்கச் செய்தது.

நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே, புலன்உழு துண்மார் புன்கண் அஞ்சித்
தமதுபகுத் துண்ணும் தண்ணிழல் வாழ்நர்;
களிறுகண் டழூஉம் அழாஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ உடையர்;
கேட்டனை யாயின்நீ வேட்டது செய்ம்மே (புறம். 46)

என்ற புலவர் அருள்மொழி கிள்ளிவளவன் உள்ளத்தை யும் காத்தது ; மருண்ட மக்கள் உயிரையும் காத்தது. அருளாளர் நெஞ்சம் உலகாளும் ஆணை மிக்க அரசரை யும் திருத்த வல்லது என்பதை இப் பழம்பாடல் தெளி வாக்குகின்றது.

இவ்வாறு தொண்டு செய்து ஆருயிர் காக்கும் பேறு கோவூர்கிழார்க்கு மற்றொரு முறையும் வாய்த்தது. இம் முறை அவர் காத்தது தம் போன்ற புலவர் இளந்தத்தனார் என்பவரின் ஆருயிராகும். கோவூர் கிழார் இளந்தத்த னாரைத் தம் போன்ற புலவரென அறிந்து, தமக்கும் அவர்க்கும் வேற்றுமை அறியாராகி, வேந்தனிடம் தாம் அவர் எனக் குறித்திடாது பாடுவாராயினார். தமக்கும் அவர்க்கும் உரிய வாழ்க்கை பொதுவாதல் பற்றி அப் பரி சில் வாழ்க்கையின் தீங்கறியாப் பான்மையை விளக்கினார். பரிசில் வாழ்க்கை இத்தகைத்தாதலின் இதனைப் பாழ் படுத்தல் ஆகாதென அரசனே உணருமாறு செய்தார்.

சோழன் நலங்கிள்ளியிடம் பழகியவர் இளந்தத்த னார். அங்கிருந்து அவர் உறையூர் போந்தார். உறையூரில் ஆண்டுவந்த சோழன் (காரியாற்றுத் துஞ்சிய) நெடுங் கிள்ளியோ நலங்கிள்ளியோடு மாறுபட்டவன். புலவர் வருகையைப் பற்றி நெடுங்கிள்ளி ஐயுற்றான். பகைவனிட மிருந்து வந்தவரைத் தேறுதல் ஆகாது ; புலவராயினும் தேறுதலாகாது ; ஒருகால் ஒற்றாக வந்திருக்கலாம் என எண்ணினான். கொல்லாது விடின் பகைவனுக்கு ஒற்று உரைத்து அரசியற் கேடு விளைத்தல் கூடும் என எண்ணிக் கொல்லத் துணிந்தான்.

கொல்லத் துணிந்த துணிவு கோவூர்கிழார்க்குத் தெரிந்தது. புலவர் ஒருவர் இவ்வாறு அரசனது ஐயத் திற்கு இலக்காகி, அவன்வாளுக்கு இரையாவதை அறிந்த தும் கோவூர்கிழார் தம் வாழ்க்கைக்கே பெருந் துன்பம்

வந்தாற்போல் வருந்தினர். ஒட்டக்கூத்தர்க்கும் புகழேந்தியார்க்கும் ஒட்டிப் புனைந்த பிற்காலக் கதையில் காணும் பொருமை கோவூர்கிழார் போன்ற பெரும் புலவர் வாழ்க்கையில் எம்மூலையிலேனும் காணப்படாததாகும். எழுத்தும் சொல்லும் கடந்து பொருள் கற்று உணர்வைப் பெருக்கி வாழும் வாழ்வே புலவரது பெருவாழ்வாகும். எழுத்திலும் சொல்லிலுமே புரண்டு கிடந்து நெளியும் சிறு வாழ்விற்குரிய பொருமை, உயிரெல்லாம் உணர்வாய்த் திகழும் பெரும் பொருள் கண்டவர்பால் காணப்படாதது. இளந்தத்தனுரை வேந்தன் ஐயுற்றுக் கொல்லத் துணிந்தான் எனக் கோவூர்கிழார் உணர்ந்ததும் பரிசில் வாழ்க்கையே கொல்லப்படுவதாக உணர்ந்தார். அந்த நல்லுணர்வின் பீடும் பெருமையும் போற்றத் தக்கன.

நெடுங்கிள்ளியிடம் ஓடிச் சென்று, " பரிசில் வாழ்க்கை எத்தகைத்து ? வரையாது வழங்கும் கையினரான வள்ளலை நாடுதல், பழுமரம் நாடும் பறவைபோல் அவர்பால் செல்லுதல், நெடு வழிகளையும் பொருட்படுத்தாது கடத்தல், திருந்தா நாவினுல் இயன்றன பாடுதல், பெற்ற பொருளைக் கொண்டு மகிழ்தல், அப் பொருளால் சுற்றத்தாரை உண்பித்தல், எஞ்சியுள்ள பொருளைக் காத்திராது கவலையின்றிப் பிறர்க்கு வாரி வழங்குதல், பரிசு பெறுவதில் சிறப்புத் தேடி முயலுதல் — இவையே பரிசில் வாழ்க்கை. இவற்றில் காணத் தக்க குற்றம் யாது? பிறர்க்குத் தீதறியா வாழ்க்கை ஒன்று உண்டெனின் அஃது இத்தகைய புலவர் வாழ்க்கையே. இதன்பால் இளிவரவுதான் யாதேனும் உண்டோ ? இல்லை. திறமை கண்டு பகைவர் நாணுவர் ; அவர் நாணுமாறு தலை நிமிர்ந்து ஏகும் பெருமிதமும் உண்டு. இத்தகைய இனிய வாழ்வே அன்றித் தலைமையும் உண்டு. புகழ் மிக்க வேந்தராகிய நும் போன்ற தலைமையும் உண்டு '' என்ருர்.

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே, திறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி(து) ஒழுகின் அல்ல(து) ஓங்குபுகழ்
மண்ஆள் செல்வம் எய்திய
நும்ஓர் அன்ன செம்மலும் உடைத்தே. (புறம் 47)

இளந்தத்தனார் வாழ்ந்தார்; பரிசில் வாழ்க்கை உய்ந்தது; புலவர் பெருமை விளங்கியது. கோவூர்கிழார் மலையமான் மக்களுக்குக்காகப் பாடினார்; உய்யக் கொண்டார். அது போன்றே இளந்தத்தனார்க்காகப் பாடினார்; உய்யக் கொண்டார்.

இங்கு அரசர் உண்மை உணர்ந்து புலவர் வேண்டுகோட்கு இணங்கிய பெருமை காணப்படுகின்றது; புலவர்—கோவூர்கிழார் என்ற செந்நாப் புலவர் - பொய்ம்மொழி புகலார் என்று மண்ணாள் வேந்தரும் போற்றிய மாண்பு காணப்படுகின்றது; கலை வளர்க்கும் பெருமக்கள் உணர்ந்து உரைத்த உரைகளை மன்னரும் மதித்த மதிப்புக் காணப்படுகின்றது.

அரசர் சிறப்பு மேலும் விளங்குமாறு உள்ளது. புலவர் செல்வாக்கு உடையவர் ஆதலின், அவர் கூறியவாறு விடுத்தார் என்ற அளவில் நில்லாது, புலவர் கூற்றுக்களால் அரசர் மனம் திருந்திய பண்பாட்டை அறிதல் வேண்டும். புலவர் உண்மை உணர்த்தும் ஆற்றல் மிக்கவர்; அரசர் உண்மை உணரும் ஆற்றல் மிக்கவர். "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" ஆதலின், உய்யக்கொண்டனவாகப்

புறநானூற்றில் காணும் பாடல்கள் புலவர் பெருமை உணர்த்தும் அளவு அரசர் பெருமையும் உணர்த்துவன வாம். அருள் ஒளிந்த நெஞ்சத்தில் அருள் விளங்குமாறு யிற்று. பழி வாங்கும் வன்னெஞ்சம்—தன்னலக் கன்னெஞ்சம் அகல்வதாயிற்று. இத்துணைப் பெருநலம் எய்தித் திருந்துமாறு ஆள்வோர் மனம் பண்பட்டிருந்தமையே அவர்தம் சிறப்பாகும்.

தம்மினும் புலவர் சிறப்புடையர் என்பதையும், நாட்டிற்கு மிக்க பயன் விளைக்கும் நல்லியல்பு அமைந்தவர் என்பதையும் உணர்வு சான்ற அரசர் அறிந்திருந்தனர். அதனால்தான் புலவர் வாழ்விற்குப் பெருந்துணை செய்தனர். புலன் உழுது உண்ணும் புலவரது புன்கணுக்குத் தாம் அஞ்சித் தமது செல்வத்தைப் பகுத்துண்ணும் நல் வாழ்க்கையை மேற்கொண்டனர். வேண்டுமளவு கொடுக்கும் வளம் இல்லாதபோது, உடனிருந்து உண்டு மகிழ்ந்தனர். நீண்ட ஆயுள் முதலிய நலம் தரும் பொருளை யெல்லாம் புலவர்க்குத் தந்து, அவர் உண்ணத் தாம் கண்டு களித்தனர்.

புலவர் நல்லுரை கேட்டு அரசர் பலர் உண்மை உணர்ந்து முற்றுகை விடுத்தனர்; போர் தவிர்ந்தனர்; வெஞ்சினம் தவிர்ந்தனர்; ஒறுத்தல் நிறுத்தினர். புலவர் உறவே பேருறவாகக் கொண்டனர்; அவரையே கண் போல் நண்பின் கேளிராகப் போற்றி ஒழுகினர்; அவர் தம் நட்பால் "இன்களிமகிழ்நகை" யுற்றனர்; அவர் நாட்டைப் பாடி வாழ்வித்திடுவர் என எதிர்பார்த்திருந்து வாழ்த்துப் பெற்று மகிழ்ந்தனர். அவர் கடுஞ்சொல் கொண்டு வேம்பும் கடுவும் போல்வன கூறிக் கடிந்த போதும் உண்மை உணர்ந்து உள்ளம் குளிர்ந்தனர்; அறம் உணர்த்திய அறிவுரைக்காக நன்றி பாராட்டினர்;

தாமும் புலமையொளி பெற முயன்றனர்; புலவராய்ப் பாடினர்; புலமை வாழ்க என்று கொண்டாடினர்.

புலவரையும் புலமையையும் இவ்வாறு போற்றிய அரசர், அவர் செய்த குற்றம் ஏதேனும் காணின் அதனை அப்போதே மறக்கும் இயல்பினர் ஆயினர். தாம் அரச வாழ்வில் சிறப்பித்துப் போற்றிய வழிபாடு முதலியவற்றிற்குப் புலவரால் இடையூறுநேரினும் அதனைப் பொருட்படுத்தினார் அல்லர். தெய்வத் தன்மை உடையவை என அரசர் போற்றியவற்றைப் புலவர் அறிந்தோ அறியாமலோ மதியாது ஒழுகினும் அவர்பால் குற்றங் கண்டு வெறுத்தார் அல்லர். புலமையே வாழ்விற்கு ஒளி காட்டும் சுடர்விளக்கு எனப் போற்றிய அரசர் ஏனைப் பழக்கவழக்கங்கட்கு அவர் செய்த முரண்பாடுகளைப் பொருட்படுத்தினர் அல்லர்.

அரசனுக்கு நாடாளும் சிறப்பை நல்குவனவற்றுள் முரசு ஒன்று. அம் முரசைத் தெய்வமாகப் போற்றி வழிபடுதல் பண்டைக்கால மரபு. அதற்கெனத் தனியிடமும் தனிக் கட்டிலும் உண்டு. முரசத்திற்கு மயிற்பீலியும் மணிமாலையும் மலர்மாலையும் சூட்டி, குருதிப்பலி கொடுத்து, அச்சத்தோடு வழிபடும் வழிபாடும் உண்டு. அதனை நீராட்டுவதைப் பெருஞ் சடங்காகக் கொண்டாடினர். நீராட்டிய பின்னர், தூய முரசுகட்டிலில் அதனை இருத்தினர்.

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர வேந்தனது அரண்மனைக்கு மோசிகீரனார் என்ற புலவர் ஒரு நாள் சென்றார். நெடுவழி பல அரிதின் கடந்து களைத்தமையால் அரண்மனை அடைந்ததும் இளைப்பாற விழைந்தார். அவர் அன்று அரண்மனையில் சென்று எய்திய பகுதி முரசு கட்டில் அமைந்த பகுதி

யாகும். கட்டிலிலிருந்து முரசு வெளியே மண்ணிவரும் பொருட்டுச் சென்றிருந்தது. அவர் கண்கள் கட்டிலில் இருந்த சேக்கையை—படுக்கையைக் கண்டன. அதன் மென்மையும் பொலிவும் களைத்த மனத்திற்குக் களிப்பூட்டின. எண்ணெய் நுரை முகந்தாற் போன்ற மெல்லிய பஞ்சணையைக் கண்டதும் அதனை இன்னதென அறியவும் அறியாராய்ச் சோர்வு மிகுதியால் எண்ணவும் எண்ணுராய்த் தலை சாய்த்தார். மெல்லிய பூஞ்சேக்கையில் சாய்ந்த புலவர் தம்மை மறந்து துயின்றார்.

சேரமான் அவ்வழியே வந்தான். தொலைவில் கண்ட போது முரசுகட்டிலில் தூங்கும் அறிவிலி எவனோ என்று பொல்லாப் பெருஞ்சினங்கொண்டு வாள் ஓச்சி இருதுண்டமாக்கத் துணிந்துவிட்டனன் போலும். தான் வழிபடும் தெய்வத்தின் உறைவிடமாகப் போற்றிய இடத்தில், தெய்வம் ஏறியிருக்கும் மெல்லிய செல்வக் கட்டிலில் எளிய தோற்றத்தான் ஒருவன் உறங்குவதைக் கண்டபோது அவன் நெஞ்சம் பதைத்தல் இயல்பே அன்றோ? இத்தகைய வரம்பு கடந்த செயல் செய்யத் துணிந்தவன் எவனே ஆயினும் அவனை ஆராய்ந்தறியாமல் வெட்டி வீச முனைந்ததும் இயல்பே அன்றோ? ஆயினும் அடுத்த நொடியில் அரசன் பதைப்பும் துணிவும் பறந்தன. நெருங்கி வந்து கண்டபோது அறிவொளி மிக்க முகத்தை அறிந்தான்; உறங்குபவர் புலவர் ஒருவர் என உணர்ந்தான். கையில் எடுத்த வாளை உறையில் இட்டு, கட்டிலருகே இருந்த கவரியை எடுத்தான். வாள் வீசி வெட்டித் துணிக்க வந்த கை, கவரி வீசித் தண் மணம் கமழச் செய்தது. வலிய தோள்கள்—போர்க்களத்தே பேராண்மை விளக்கும் தோள்கள்—மெல்ல வீசுதலாயின; பேரன்பு விளங்கச் செய்தன.

'புலவர் விழித்து எழுந்தபோது வேந்தன் தொண்டு செய்து நிற்கும் காட்சியைக் கண்டு திடுக்கிட்டார். "தமிழ் - நல்ல தமிழ் - நிரம்பக் கற்றதற்குக் கண்ட பயனோ! என்னே! என்னே! நான் உறங்கியது முரசு கட்டில்! முரசு கட்டில்! எத்துணைப் பெருந் தவறு செய்தேன்! இப் பெருங் குற்றத்திற்கு மன்னிப்பு உண்டோ? உன் வாளால் இருகூறுபட்டிருக்க வேண்டுமே! ஆயின், இன்னும் உயிருடன் உள்ளேன்! வியப்பினும் வியப்பு! நல்ல தமிழ் நிரம்பக் கற்ற கல்வியின் பயன் போதும்! போதும்! அதனோடு அமையாது, அன்பு கொண்டு என்னை அணுகிக் கவரி வீசுகின்றனையே! வெற்றித் தலைவ! இசையே பெருந்துணை; இம்மைக்கும் மறுமைக்கும் நலந் தருவது இசையே என நம்பித் தமிழைப் போற்றுகின்றாய் அல்லையோ? அதனால் இச் செயல் செய்தனை போலும்!" என்று வேந்தனைப் போற்றினார்.

மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா(து) ஏறிய என்னைத் தெறுவர
இருபால் படுக்கும்நின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும்நல் தமிழ்முழு(து) அறிதல்
அதனொடும் அமையா(து) அணுக வந்துநின்
மதனுடைய முழவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடம் கமழ
இவண் இசை உடையோர்க்(கு) அல்ல(து) அவண(து)
உயர்நிலை உலகத்(து) உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசில்நீ ஈங்கிது செயலே. (புறம். 50)

அரசன் புலவர்க்கு ஆற்றிய அருந் தொண்டும், புலவர் அரசன்பால் கொண்ட கெழுதகை அன்பும், தனி நட்பைப் பற்றியன அல்ல என்பது மறத்தல் ஆகாது. புலவரை வாளுக்கு இரையாக்காது அரசன் கவரி வீசியது தன் நண்பர் என்பது பற்றி அன்று; அவர் தமிழறிந்த புலவர் என்பது பற்றியே. புலவர் அரசனைப் பாராட்டியது தம் நண்பன் என்னும் உரிமை பற்றி அன்று; அவனது தமிழ் விரும்பும் தண்ணிய நெஞ்சம் பற்றியே ஆகும். இருவர்க்கும் இடையே நெஞ்சம் பிணிக்கும் தொடர்பை ஆக்கியது "நல் தமிழ்" என்ற ஒன்றேயாகும். இருவரும் அந்த நற்றமிழைப் போற்றிய காரணம் ஏதோ மூட நம்பிக்கை அன்று. ஈன்று புறந்தந்த அன்னையைப் போற்றும் அறிவுடை மக்களைப்போல், இங்கும் புலவரும் அரசரும் அறிவைப் புறந்தந்து வாழ்வைப் பீடுற உயர்த்திய தமிழன்னையைப் போற்றினர்.

மொழி வேறு, கருத்து வேறு ஆகுமோ? ஆகா. மொழி இன்றேல் கருத்து இல்லையாகும். கருத்து இன்றேல் மொழியும் இல்லையாகும். தாய் மொழியின் சொற்களும் பொருளும் விடுத்து ஒருவன் ஒரு சிறிய எண்ணமும் எண்ணுதல் இயலாது. "நான் உண்ண வேண்டும்" என்று எண்ணுகின்ற ஒருவன் உள்ளத்தில் சொற்களும் பொருள்களும் இன்றேல் எண்ணம் எழாமற் போயிருக்கும். நாகரிகம் அற்ற மக்கள் உள்ளத்தில் எழும் எண்ணங்கள் சிறியவை; சிறப்பில்லாதவை. காரணம் அவர்கள் கற்ற மொழிக் கல்வி சிறிதே; அதுவும் சிறப்பு உறாதது. சொல்வளமும் பொருள்வளமும் பெருகுமாறு மொழியை மேலும் மேலும் கற்றுணர்ந்தவர்க்கே கருத்து வளமும் சிறக்கும். எனவே, மொழிப் புலமைக்கு ஏற்பவே எண்ணும் ஆற்றல் வளர்ந்து ஓங்கும். இதுவே பொதுவியல்பு, பெரும்பாலோரிடையே காணப்படுவது; இத்தகையாரி

டையே பேரறிஞரும் பெருஞ் செயலாளரும் தோன்றிப் பெருகி உலகத்தை உய்விப்பர். மொழியால் கருத்துக்கள் வளர்ந்து உயர்ந்த புலமை பெற்ற பேரறிஞருள் மோசி கீரனுர் ஒருவர். மொழியால் கருத்துக்கள் வளர்ந்து உயர்ந்த ஆண்மை எய்திய பெருஞ் செயலாளருள் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை ஒருவர். இத்தகைய பேரறிஞரும் பெருஞ் செயலாளரும் தத்தம் வாழ்க்கைப் பேற்றிற்குக் காரணமாக விளங்கிய தாய்மொழியைக் கனவிலும் மறப்பரோ? "அதூஉம் சாலும் நல்தமிழ் முழுதறிதல்" என்ற மணி மொழியின் செம்பொருள் உன்னி உன்னி உணரத் தக்கது.

புலவர் புலமையை வளர்த்துப் போற்றி, உயர்ந்த எண்ணங்கள் எண்ணும் ஆற்றலைப் பெருக்கி, அதனுல் உலகை உய்வித்தார்; அரசரோ புலவரைப் போற்றி, அவர் எண்ணித் தெளிவித்த பெருஞ்செயல்களைச் செய்யும் ஆற்றலை வளர்த்து அதனுல் உலகை உய்வித்தார். இக்காரணத்தாலேயே புலவர்க்கும் அரசர்க்கும்—பேரறிஞர்க்கும் பெருஞ்செயலாளர்க்கும் ("பெருஞ்செயாடவர்"க்கும்) இடையே வியத்தகு கேண்மை இருந்தது. இதனுலேயே இருசாராரும் தாய்மொழியை உயிரினும் சிறப்பப் போற்றினர். அத் தாய்மொழிப் பற்றே வாள்வீசி வெட்டும் கையினைக் கவரி வீசித் தொண்டு ஆற்றுமாறு செய்தது; அதுவே இயற்கை அழகைப் பாடும் நாவினுல் உலகத் தலைவரையும் பாடச் செய்தது.

நைந்து நைந்து கந்தலாய்ப் பல தையல் உடையதாய் நீர்ப்படு பருந்தின் சிறகு போன்றிருந்த உடையை நீக்கி, பாம்புரி அன்ன வடிவும் கழையின் கண்கவர் சொலியும் உடைய ஒண்பூங் கலிங்கம் உடுத்திய பெரு மன்னர்களைப் பழந்தமிழ்ப் பாடல்களில் காண்கின்றோம். விருந்து கண்டொளிக்கும் திருந்தா வாழ்க்கையினராய், ஆடுநனி

மறந்த அடுப்பின்கண் ஆம்பி பூத்த வறுமையினராய், உண்ணு வயிற்றினராய் வந்தவர்க்குப் பொலங்கலத்தில் தேறலும் தந்து, நெய்துள்ளிய சுவையுணவும் நல்கி, வெறுப்புத் தோன்றியபோது அவற்றை விடுத்து நீர்வடிவாய்ப் பாலிற் பெய்தனவும் பாகிற் கொண்டனவும் அளவுபு கலந்து மெல்லிது பருகச் செய்து, விருந்தாற்றி, வெய்து உண்ட வியர்வை அல்லது செய்தொழிலால் வியர்வை அரும்பாதவாறு காத்தளித்த பெருமக்களை அப்பாடல்களில் காண்கின்றோம். ஆயினும், வாள் வீசுதலை விடுத்துக் கவரி வீசித் துயிற்றித் தொண்டு ஆற்றிய சேரமான் நிகரற்றுச் சிறந்து விளங்குகின்றான். "என் நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே" என்றும், "எந்தையுள்ளடி முள்ளும் நோவ உறாற்க தில்ல" என்றும் தம்மைப் புரந்தோர்பால் நன்றி மறவா நெஞ்சத்தினராய்ப் போற்றும் புலவர் பலர் பழந்தமிழ் நூல்களில் வாழ்கின்றனர்; ஆயினும் "அதூஉம் சாலும் நல்தமிழ் முழுது அறிதல்" என்று நன்றிகூறச் சொற்கள் போதாக் குறையை உணர்ந்து உண்மையை உணர்த்திய மோசிகீரனார் ஒப்பற்றவராய் உயர்ந்து விளங்குகின்றார்.

# வஞ்சினம் கூறல்

தன்னைத் தான் காத்துக் கொள்ள உதவுவது அறிவு. திண்ணிய கால்களும் வாலும் கூரிய நகங்களும் பற்களும் வலிய அலகும் சிறகும் கொண்டு விலங்குகளும் பறவைகளும் தற்காப்புத் தேடி வாழ்கின்றன. மனிதனுக்கு அத்துணைக் கருவிகள் இன்றியே அஞ்சாது வாழும் வாழ்வு வாய்த்துள்ளது எனின், அஃது அவன் பெற்றுள்ள அறிவின் சிறப்பே ஆகும். தற்காப்புக் கருவியாக அறிவு பயன்படுமளவு கால் வால் முதலியவற்றின் திண்மையும் நகம் பல் முதலியவற்றின் கூர்மையும் பயன்படுதல் இல்லை. அறிவு என்ற ஒரு சிறந்த கருவி வாய்ப்பின், ஏனையவை வேண்டா; வேண்டிய பிற கருவிகளைப் படைத்துக் கொள்ளும் ஆற்றல் அறிவிற்கு உண்டு. ஆதலின் அறிவே சிறந்த தற்காப்புக் கருவி.

> அறி(வு)அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
> உள்ளழிக்கல் ஆகா அரண்
>
> அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
> என்உடைய ரேனும் இலர்

என்னும் திருக்குறள் மொழிகளைக் காண்க.

தற்காப்புக் கருவியாக உள்ள அறிவிற்கும் பகையாக ஒன்று உள்ளது. அதுதான் சினம் என்பது. தன்னைத் தான் காப்பது வேண்டுமேல் அறிவு வேண்டும்; சினம்

ஆகாது. தன்னைத் தான் அழிக்கவல்லது-கொல்லவல்லது சினம்.

> தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
> தன்னையே கொல்லும் சினம்.

அறிவை அழிக்கவல்ல நஞ்சும் பித்தும் நெடிது நிலைப்பன; கள்ளும் சினமும் தோன்றி அழிவன. நிற்கும் நேரத்தால் வேறுபாடே அன்றிப் பிறிது இல்லை. ஆயினும் பித்து, நஞ்சு, கள் இவற்றினும் கொடுமை மிக்கது - விரைந்து கெடுக்கும் ஆற்றல் மிக்கது சினம். ஆதலின் "தன்னைத் தான் காக்கின் சினம் காக்க" என ஒன்றையே எடுத்தோதுவாராயினர் சான்றோர்.

தன்னலத்தால் சினம் எழுவதே பெரும்பான்மை. பொதுநலம் கருதியும் சிறுபான்மை சினம் எழுதல் உண்டு. தீமையே விளைக்கும் இயல்பினதாகிய சினம் பொதுநலம் கருதியபோது நன்மையும் விளைத்தல் உண்டு. கொள்ளைக் கூட்டத்தார் ஓர் ஊரிற் புகுந்து கொள்ளையடித்து மக்களை வருத்தியது கேட்ட அவ்வூர்த் தலைவன் ஒருவன் வருந்தி நெட்டுயிர்த்துச் சோர்வுற்று நிற்பானோ? உள்ளங் கொதித்துப் பதைப்பான், அவன் சினம் பொதுநலம் கருதியதே அன்றோ? "அக்கொள்ளைக் கூட்டத்தைக் கண்டுபிடித்து என் கையால் பிணித்துக் கொணர்ந்து தலைதறித்திடும் வரையில் உண்ணேன்; உறங்கேன். அவ்வாறு செய்யேனாயின், என் தலைமை இழப்பேனாக; இழந்து யானும் கொள்ளைக் கூட்டத்தைச் சார்ந்தவனாகுக" எனச் சினந்து கூறுவான். அச்சினம் அவனுடைய பொதுநல நோக்கிற்கு ஆற்றல் அளித்து அவனைக் கடமை செய்யத் தூண்டும். இத்தகைய சினங்கொண்டு கூறும் கூற்று வஞ்சினம் எனப்படும்.

தமிழ்நாட்டு வேந்தர் பொதுநலம் மிக்க தலைவர்; நாடாளும் கடமையில் ஆர்வம் மிக்கவர். அவரது ஆட்சிக்கு எவரேனும் இடையூறு செய்ய முயன்றாலும் அல்லது முயல்வதாகக் கேள்வியுற்றாலும் கொதித்தெழுந்து வஞ்சினம் மொழிந்துள்ளனர். அவ்வாறு மொழிந்த வஞ்சினக் கூற்றுக்கள் சில பாட்டு வடிவுபெற்று வாழ்கின்றன. பாடியவர் வேந்தரே. மூவேந்தரும் பாவேந்தராக விளங்கிய காலம் அது. அப்பாடல்களுள் சிறந்து நின்றுள்ளன மூன்று. ஒன்று, எல்லையூர் தந்த பூதப் பாண்டியன் பாட்டு. மற்றொன்று, பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடியது. இன்னொன்று சோழன் நலங்கிள்ளி பாடியது.

இப் பெருவேந்தர் பாடிய பாடல்களில் அவர் கொண்ட பேருணர்வு விளங்குகின்றது. இவ் வஞ்சினப் பாடல்கள் உள்ளத்து உணர்வு மிகுதியைப் புலப்படுத்தும் பாடல்களாக இருத்தலால், பழங்காலத் தலைவரது உணர்வின் பெற்றியை அறிந்து அவர்தம் நாகரிகச் சிறப்பினைத் தெளிதற்கு மிக உதவுகின்றன. அவற்றை இங்கு ஆராய்வாம்.

மூன்று பாடல்களிலும் பகையரசர் செய்த சூழ்ச்சியும், இகழ்ந்து கூறிய சிறு சொல்லும் குறித்து நாடாளும் தலைவர் சினம் கொண்டமை அறியப்படுகின்றது. அவ்வாறு வெல்லச் சூழ்ந்து இகழ்ந்து சிறு சொல் சொல்லிய அரசரைப் புறங்காணல் வேண்டும், போர்க்களத்தே சிதையத் தாக்கி முரசும் குடையும் கைப்பற்றல் வேண்டும், அவர் வருந்தப் பொருதல் வேண்டும் என்று உள்ளக் கொதிப்புடன் மொழிந்துள்ளனர். இப்பகுதிகள் அவர்தம் ஊக்கமிகுதியைப் புலப்படுத்துகின்றன. ஆனால் இவற்றைத் தொடர்ந்து, "இவ்வாறு செய்யாவிடின் இன்ன இன்ன நிலைமை எய்துவேனாக" எனக் கூறும்

பகுதிகளே அவர்தம் உணர்வின் சிறப்பைப் புலப்படுத்து கின்றன.

ஒருவன் தன் நண்பனுக்கு ஓர் உதவி செய்யக் கருதி, "உனக்கு நான் இந்த உதவி செய்யத் தவறினால், பெற்ற தாய்க்கு உதவாத பேதை என்று என்னை நினைத்துக் கொள்" என்று கூறுவானாயின், அவன் நண்பனுக்கு உதவ முயலும் முயற்சியின் உறுதி தெளிவாகும். ஆயின், அதனினும் மிகுதியாக, அவன் தன்னை ஈன்ற அன்னையிடம் கொண்டுள்ள உணர்வு நன்கு விளங்கும். அன்றியும் வஞ்சினங் கூறுங்கால், மேற்கொண்ட கடமையினும் பெரியதும் சிறந்ததுமாகிய தன் உள்ளக் கோட்பாட்டினைக் கூறுதலே வழக்கம். நண்பனுக்கு உதவி செய்யும் கடப்பாடு சிறந்ததாயினும் ஈன்ற தாயைப் போற்றுதல் மிகச் சிறந்தது என்று கருதியே அவன் இவ்வாறு கூறுவான். இது போன்றே, வஞ்சினம் கூறிய வேந்தர்கள் பகைவரோடு பொருது அவரைப் புறங்கண்டு வெல்லுதல் சிறந்த கடமையாகக் கொண்டனர்; ஆயினும் அதனைக் கூறுமிடத்து அவர் உடன் மொழிந்த கடமைகள் அதனினும் உயர்ந்தவை, மிகச் சிறந்தவை, உள்ளத்தே நெடுங்காலம் உணர்வாய்க் கிடந்தவை என்பது அறிதல் வேண்டும். அவ்வாறு அவர்கள் மொழிந்த கோட்பாடுகளாவன,

... .. ...சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக;
அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக; மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பின்
பொய்யா யாணர் மையல் கோமான்
மாவனும் மன் எயில் ஆந்தையும் உரைசால்

அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்
வெஞ்சின இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பின் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை இழுக்கியான் ஒன்றோ
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலின் ஒரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.

(புறம். 71)

இது பூதப்பாண்டியன் உயர்ந்த கோட்பாடுகளாக உணர்ந்து கூறியவற்றைத் தெரிவிக்கும் பகுதி.

......பொருந்திய.
என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக ;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை;
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்(கு) ஈயா இன்மையான் உறவே

(புறம் 72)

இது பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது உள்ளத்தே மிக்கிருந்த உணர்வுகள் இன்ன இன்ன எனக் காட்டும் பகுதி.

.........பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே.

(புறம். 73)

இது சோழன் நலங்கிள்ளி தன் உயிரினும் சிறந்ததாய் உள்ளத்தே வைத்துப் போற்றிய கொள்கையினை விளக்கும் பகுதியாகும்.

தன் வாழ்க்கைத் துணையாய் விளங்கிய அரசியைப் பிரியாது வாழும் வாழ்வைப் பூதப்பாண்டியன் விழுமிதாகப் போற்றினான். வஞ்சினங் கூறியபோது, துணைவியின் அருகே இருந்து கூறியதாகத் தெரிகின்றது. “சிறந்த பேரமர் உண்கண் இவளினும் பிரிக” என்ற தொடரில் இவள் எனச் சுட்டியுள்ளான். அவளைப் பிரிந்து பிறரொடுங் கூடி வாழுங் கற்பில்லா வாழ்வு, பகைவர்க்குத் தோற்றிடும் தோல்வியினும் கொடியது என்று உணர்த்தியுள்ளான்.

செங்கோல் செலுத்தும் அரசன் பொறுப்பு மிகப் பெரிது. தன் கையில் செவ்விய கோலை ஏந்துவதால் அது தீர்வதில்லை; தன்னிடம் நேரில் வந்த வழக்குகளை நேர்மையாய்த் தீர்க்குமளவில் பொறுப்பு நிற்பதில்லை; முறை செய்யும் அவையோர் அறம் திரியாதவராக விளங்குமாறு காத்தல் வேண்டும்; திறனில்லாதவன் ஒருவனை அங்கே அமைத்து அவனால் முறையும் நேர்மையும் கெடாதவாறு அரசன் காத்திடல் வேண்டும். சுருங்கக் கூறின், தன் நாட்டின்கண் அவைக்களந் தோறும் அறமும் திறமும் மிக்கோரை நிலைநாட்டிச் செங்கோல் செலுத்தல்வேண்டும். இதுவே இரண்டாவதாக வேந்தன் உணர்ந்து கூறியது.

புலமை மிக்கவரும் ஆண்மை மிக்கவருமாகிய தக்கோரைப் பூதப்பாண்டியன் கண்போன்ற நண்புடைய கேளிராகக் கொண்டு அவரோடு கூடி இனிது களித்து மகிழ்ந்து நகைமிக்கு வாழும் வாழ்வை உடையவன். அத்தகைய தக்கோருடைய கூட்டுறவு பெறுதற்கரியது என்று உணர்ந்த வேந்தன் அதனை இழக்குமாறு இழைத்திடும்

தவறு மிகக் கொடியது எனவும் உணர்ந்தான்; பகைவர்க்குத் தோற்றலினும் கொடியது என உணர்ந்தே அதனையும் உரைத்தான். அவ் வுறவைப் பாராட்ட முயன்ற வேந்தன் பூதப்பாண்டியன் - புலவர் பூதப்பாண்டியனார் - பாவேந்தனுயிருந்து தொடுத்த சொற்களைக் கருதுக. தான் பெற்ற இன்பப் பேற்றை இனிமை, களிப்பு, மகிழ்ச்சி, நகை என்னும் பல சொற்களாலும் கூறல் அமையாது என உணர்ந்து, "இன்களிமகிழ்நகை" என ஒரு தொடராய்க் கூறிப் போற்றினான்.

அரசன் நினைவில் தன் குடிப்பிறப்பும் வந்துற்றது. பாண்டியர் குடி உலகங் காத்தலில் பெரும் புகழ் பெற்ற நற்குடி. அக் குடியில் பிறந்ததே பெறற்கரிய பேறு என எண்ணிவந்த பூதப் பாண்டியன், வஞ்சினங் கூறியபோது அதனை நினைந்து, "பகைவர்க்குத் தோற்பின் அக்குடிப் பிறப்பை இழந்தவனாய், பிறநாட்டுக் கொடுங்கோல் மன்னர் குடியில் பிறப்பேனாக" எனக் கொதித்தான். எனவே, அவன் உள்ளத்தே ஓங்கியிருந்த இவ் வுணர்வின் உண்மை நிலை தெளிவாகின்றது. "பாண்டியர் குடியில் என் முன்னோர் எல்லாரும் மக்களைச் செவ்வியமுறையில் ஓம்பிக் காத்து ஒப்பற்ற புகழ் படைத்தனர். அவர் மரபில் பிறந்த யானும் அவர்போல் மன்பதை காத்து மாண்புறவேண்டும். அதுவே இக்குடியில் பிறந்ததன் பயன். காக்கும் காவலே என் கடமை. அதனை நிறைவேற்றவே யான் பாண்டியனாய்ப் பிறந்தேன்." என்னும் இச் சீரிய உணர்வு விளங்குகின்றது.

துணைவியோடு அன்பு கலந்து வாழும் கற்பு வாழ்க்கை, தக்கோரை நாட்டி அறம் காக்கும் அறிவு உடைமை, நல்லோருடன் கூடி இனிது மகிழும் உறவு உடைமை, காக்கும் மாண்பு உடைமை இந்நான்கையும் பூதப்பாண்டி

[library stamp]

யன் சிறந்தனவாக உணர்ந்து தன் வாழ்க்கையில் போற்றியது தெளிவாகின்றது.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனே, பூதப்பாண்டியன் கூற்றில் குறித்ததையே முதலில் கூறினான். "என் காவலில் உள்ள குடிகள் கலங்கிக் கண்ணீர் சொரிந்து வாடி என்னைக் கொடியவன் என்று பழி தூற்றும் நிலைமை உறுக" எனச் சீறினான். இவ் வஞ்சினக் கூற்றில், பகைவர்க்கு அஞ்சாத பெருமகன் - பாண்டிய வேந்தன் - குடிகளின் கண்ணீருக்கு அஞ்சும் அச்சம் புலனாகின்றது. வாளுக்கும் வேலுக்கும் அஞ்சாது நின்ற நெஞ்சம் கண்ணீர்ப் படைக்கு அஞ்சும் பெருந்தகைமை பெற்றிருந்தது. இளமையிலேயே தான் ஒருவனாய்ப் பெரும்பகைவர் எழுவரை வென்ற வீரன்- "புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க, ஒருதான் ஆகிப் பொருதுகளத் தடலே......இன்றி னூங்கோ கேளலம்" எனப் புலவர் வியந்து போற்ற இளமையிலேயே பெரும்போர் கண்டு வென்ற வீரன் — கண்ணீர்ப் படைக்கு இவ்வாறு அஞ்சிய நிலையே நாகரிகம். "என்னை எள்ளிச் சிறுசொல் சொல்லிய வேந்தரைத் தாக்கி வெல்லேனாயின், என் குடிகள் கண்ணீர் பரப்புங் கொடுங்கோலன் ஆவேனாக" என்னும் கருத்தில், அவன் ஆட்சி முறையைப் பற்றிக் கொண்டிருந்த உயர்ந்த கொள்கை தெளிவாகின்றது.

இரண்டாவதாக, நெடுஞ்செழியன் போற்றியது புலவரால் எய்தும் புகழ் நிலையே. தன் நாடு வாழவேண்டுமானால் - சிறக்க வேண்டுமானால், புலவர் அதனைப் பாட வேண்டும் என்று விழைந்த வேந்தன், ஆதலின் இவ்வாறு குறித்தான். இது மூட நம்பிக்கையின்பாற் பட்டதன்று. புலவர் பொருள்பெறக் கருதிக் கண்ட நாட்டையெல்லாம் புகழ்ந்துபாடுவார் அல்லர். அவ்வாறு புகழ்ந்துபாடும் புலவர்

அக்காலத்தில் இருந்திருப்பின், "புலவர் பாடவேண்டுமே" என்று நெடுஞ்செழியன் இத்துணைக் கவலையோடு வருந்த வேண்டியதில்லை. ஆதலின் அரசன் விழைந்தது மூட நம்பிக்கை அன்று. புலவர் பாடவேண்டுமாயின், அன்பும் அறமும் செறிந்த நாடாக அது விளங்க வேணடும்; வெறு மாடமாளிகைகள் கண்டோ, பொன்னும் மணியும் கண்டோ,புலவர் ஒரு நாட்டைப் புகழ்ந்துபாடார்என்பதை நன்கு உணர்ந்தே நெடுஞ்செழியன் இவ்வாறு கூறினுன். "புலவர் பாடல் நிரம்புமாறு, அன்பும் அறமும் விளங்க வல்ல நாடாக இதனை நான் ஓம்பி அப் பெருமக்களை வரவேற்க வேண்டும்" என்பதே அரசன் உள்ளத்தே ததும்பிய உணர்வு. அதனை உணர்த்தியபோது, தான் அறிந்த புலவர் பலரையும் நினைந்து அவருள் தலை வராய் விளங்கிய மாங்குடி மருதனுரைக் குறித்துப் போற்றுவாருயினுன். ஓங்கிய சிறப்பு, உயர்ந்த கேள்வி, உலகமொடு நிலைஇய புகழ் இவற்றைப் புலவரிடம் காணும் பேறு பெற்றவன் இவ் வரசன்.

அரசனைச் சார்ந்து வாழும் மாந்தர் பலர் உண்டு. அவர் அனைவரையும் புரத்தல் அரசன் கடமை. அரசனுக்கு அவர் பல்லாற்ருனும் உதவி செய்து அரணுக அமைந் திருப்பர். அரசன் கைம்மாருக அவர்க்குச் செய்ய வேண்டு வது ஒன்றே; அஃதாவது அவர்க்குத் துன்பம் தோன்ரு வாறு பொருள் உதவிப் புரத்தல் ஆகும். வெளிநாட்டி லிருந்தோ தன்னுட்டில் பல ஊர்களிலிருந்தோ, அவனிடம் வந்து பொருள் இரப்போரும் உண்டு. அவரால் அரசர்க்கு உதவி யாதும் இல்லை எனினும் வயிறு படைத்த இனம் என்ற ஒரே எண்ணங் கொண்டு அவரையுங் காத்தல் அரசனுக்குக் கடமை. புரக்கப்படுவோரும் இரப் போருமாகிய அவ்விரு திறத்தாரும் அரசனை நம்பி வாழ்ந்திடுவோர். அரசன்பால் அன்பும் அருளும்

இல்லையானால், புரக்கப்படுவோர் வாழ்வும் இரப்போர் வாழ்வும் முடிந்திடும் ; அழியும் ஆதலின், அரசன் அவரைக் காத்தலைக் கடமையாகக் கொள்வான். நெடுஞ் செழியன் அவ்விரு சாராரும் துன்பம் உறாதவாறு காத்த வன். "பகைவரை வெல்லவில்லையானால், என்னால் புரக்கப் படுவோர் துன்பப்படுமாறும், இரப்போர்க்கு இல்லை என்னுமாறும் என் கடமையினின்றும் தவறுவேனாக" எனக் குறித்தான். இரப்பவர்க்கு ஈயவொட்டாத நிலை யினையே வறுமை என்றும் கருதி யுரைத்தான். அரச வாழ்வே ஆயினும் ஈகை இல்லையேல் நல்குரவே-இன்மையே என்னும் கருத்து விழுமிது. நெடுஞ்செழியன் நயனுடையான் என்பது இதனால் தெளிவாகின்றது.

நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

குடிகள் கண்ணீர் விட்டு வருந்தாதவாறு இனிது காத்தல், புலவர் பாடுமாறு நாட்டைச் சிறப்புறச் செய்தல், தன்னைச் சார்ந்தவர் வறுமையைக் களைந்து வாழ்வித்தல்—இம் மூன்றும் நெடுஞ்செழியன் நெஞ்சத்தே மிக்கிருந்த கோட்பாடுகள்.

சோழன் நலங்கிள்ளி தன் காதல் துணைவியாகிய அரசியோடு வாழும் கற்பு நெறி தவறாதவன். "என் உள்ளம் எள்ளிய மடவோன் வருந்துமாறு பொருது வெல்லேனாயின், என் வாழ்வு பரத்தையர்பால் உறுவ தாக ; உள்ளத்துக் காதல் கொள்ளாத அப் பொதுமகளி ரின் பொருந்தாக்கூட்டத்தினால்கெடுவேனாக" என்று அவன் மொழிந்த வஞ்சினக் கூற்று, அவனுடைய திண்ணிய கற் பைத் தெளிவாக்குகின்றது. நாட்டை ஆளும் தலைவன் ஒருவன் எத்துணைக் கருத்தாய்த் தன் ஒழுக்கங் காக்க முயன்று வந்தான் என்பதையும், செல்வமும் செல்வாக்கும்

மிக்கவர்க்கு ஒழுக்க வரையறை வேண்டா என்று தடு மாறிக் கெடுவார் போக்கையும் ஒப்பிட வல்லார்க்கு நாக ரிகத்தின் உண்மைத் தோற்றம் புலனுகும். ஒழுக்கம் ஒன்றே விருப்பம் தருவது; அதுவே இனிய உயிரினும் சிறந்ததாய் ஓம்பப்படுவது. அரசனுயினும் பிறன் எவனு யினும் இவ் வரம்பு கடந்தானுயின், தானும் கெடுவான்; உலகமும் கெடுப்பான்.

எளியவன் ஒழுக்கக் கேடு, அவனுக்கும் அவனைச் சார்ந்த சிலர்க்கும் மட்டும் கேடு விளைக்கலாம். ஆயின், அரிய தலைவன் ஒழுக்கம் கெடுவானுயின், அதனுல் அவன் கேடுறுதல் போல அவன் தலைமையின்கீழ் வாழும் உலகமும் கேடுறும். ஆதலின் உலகை ஓம்பும் தலை மக் களே ஒழுக்கந் தவருது வாழும் கடப்பாடு மிக்கவர். அவர் கெடின், உலகம் கெடும். அவர் நல்வழி ஒழுகின், அவரைப் பின்பற்றி உலகம் திருந்தும். அன்றியும், தன் நெஞ்சத்தை நல்வழி விடுத்து அல்வழித் தடுத்துக் காக்க இயலாத ஒருவன் தலைவனுயின், அவன் தலைமையால் பயன் இல்லை. தன் நெஞ்சத்தைக் காக்கும் வலியற்றவன் உல கைக் காக்க முன்வருதல் நன்மை கருதியது ஆகுமோ? அன்பைப் பெருக்கி அருளை விளக்கும் காதல் வாழ்வில் பண்பட்டுச் சான்றேருகை வாழாது தவறியவன் தலைமை உலகைக் கெடுக்குமே அன்றிக் காக்குமோ?

சோழன் நலங்கிள்ளி தான் தக்க தலைவனுய் விளங்கி உலகைக் காக்க விரும்பிய பேருணர்விற்கு அடிப் படையாய் விளங்கியது அவன் ஒழுக்கத்தைப் போற்றிய விழுப்பமே. அதனுலேயே பண்பட்ட காதல் வாழ்வைப் போற்றுவானுகி, "யான் சோர்ந்து தோற்பேனுயின் ஒழுக்கங் கெட்டுப் பொதுமகளிர்பால் வாழ்ந்து இழிவு உறுவேனுக" என்று தன் உறுதியை விளக்கினுன்.

ஆனால், இந் நாகரிக வாழ்வினைப் போற்றவும் அறி யாத நிலை பிற்காலத்தே வந்துற்றது. அரசன் எனின் மகளிர் பலருடன் கூடி வாழும் செல்வம் பெற்றவன் என் னும் கருத்துப் படுமாறு பாடல்கள் பல்கின; நாடகங் களும் பரவின. அவ்வளவிலும் நின்றிடாமல், அரசன் தேர் முதலியவற்றின் மீது ஊர்ந்து உலா வருங்கால், அவ னைக் கண்டு பொதுமகளிர் பற்பலர் காமுறுவதாகவும் தூது விடுப்பதாகவும் நூல்களும் எழுதப்பட்டுத் தனிப் பெயரும் அமைப்பு முறையும் பெறலாயின. உலா என் னும் நூல்வகை இவ்வாறு அமைந்ததே யாகும். தம்மை நாடாத ஒருவனை - நாடக் கூசும் நெஞ்சினனுயை ஒரு தலை வனைப் பரத்தையர் கண்டு காமுறுதல் ஒல்லுமோ? அவ் வாறு கற்பனையாக நூல் எழுதினும் அத் தலைவன் அத னைக் கேட்கவும் இணங்குவனே? ஆயின், அத்தகைய நூல்களைப் புலவர் பாடவும் புரவலர் பரிசில் வழங்கவும் காலம் மாறியது என்னென்பது! சோழன் நலங்கிள்ளி பாடிய இப் பொன் மொழியை அந்நூல்களின் முகப்பில் அமைத்திடின், அவற்றைக் கற்பவர் தலைமை சான்ற நலங்கிள்ளியின் உள்ளத்து உயர்வையும் அஃது இல் லாது (நூலுலகில்) உலா வந்து மயங்கிய அரசர் பெரு மையையும் ஒப்பிட்டு நோக்குவர்; அந் நோக்கங் கொண்டு சிறந்தது இன்னது என நன்கு அறியும் வாய்ப் பும் வாய்க்கப் பெறுவர்.

தமிழ் நாட்டை ஆண்ட பெரு வேந்தர் பாடிய பாடல் களுள் தம் உள்ளத்து உணர்வுமிக்கு, வஞ்சினம் கூறிய கூற்றுக்களாக உள்ளவை இம் மூன்றுமாம். அவை சினம் பொங்கக் கூறியவை ஆயினும் உண்மைக் கொள் கைகளை உணர்வு ததும்ப விளக்குவன. அவ்வாறு வஞ் சினம் மொழிதலாக அமைந்த பாடல்களில் நாகரிக நெஞ் சினராகிய அவ் வேந்தர், காதல் மிக்க கற்பு வாழ்வினை

யும், அறம் திறம்பாச் செங்கோல் முறையினையும், குடிகளின் கண்ணீர் காணுக் காவல் நெறியினையும், புலவர் விரும்ப வாழும் பெரு நிலையினையும், வறுமையைத் துரத்தி வெல்லும் வண்மையினையும் சிறந்தனவாகக் கொண்டு போற்றிய சிறப்பெல்லாம் தெளிவாகின்றது.

# திருத்தும் கடமை

வீட்டு வாழ்வு செம்மையாக இருந்தால்தான் நாட்டு வாழ்வும் செம்மையாக விளங்கும். வீட்டு வாழ்விற்கு அன்பும் அறமும் வேண்டும். நாட்டுவாழ்விற்கும் அன்பும் அறமும் இன்றியமையாதவை. வீடுகள் பல கொண்டே நாடு அமைவது. சிறு வீடுகளில் அமைதியும் இன்பமும் இல்லையாளுல் பெரிய நாட்டிலும் குழப்பமும் துன்பமும் மிகும். இவ் வுண்மையை உணர்ந்தே தமிழ்ச் சான்ருேர் இல்லறம் விழுமியது என்று போற்றி அதனை நடத்தும் இருவரையும் தலைவராகப் பாராட்டித் தலைவன் தலைவி எனலாயினர்.

நாடு வாழ நல்லெண்ணங் கொண்ட பெரும் புலவர் வீடும் வாழ வகை தேடினர். புறத்துறை பற்றிப் பல நூறு பாடல் பாடிய சான்ருேர் அகத்துறை பற்றிப் பல்லாயிரம் பாடியுள்ளனர். அச் சான்ருேர் கண்ட கனவு கள் பற்பல. அவற்றுள் நாட்டைப் பற்றியவை இன்றும் உலகில் நனவாகவில்லை. காரணம், அவற்றிற்கு அடிப் படையாக - நாடு திருந்துவதற்கு முதற் காரணமாக - வீடு திருந்தாமையே. அவர் நாட்டு வாழவுபற்றிக் கண்ட கனவுகள் எத்தகையவை? ஒரு நாட்டில் சோறு சமைக் கும் தீயும் செஞ்ஞாயிற்றின் வெப்பமும் தவிர வேறு தீயும் வெப்பமும் புகுந்து மக்களை வருத்தலாகாது எனக் குறுங்கோழியூர் கிழார் விரும்பினுர். நாட்டு மக்கள் கண் ணில் வானவில் காணப்படவேண்டுமே அன்றிக் கொலை

வில் தோன்றலாகாதுஎனவும் விழைந்தார். வில் வாள் முதலிய படைகள் அறவே ஒழிந்து, கலப்பை ஒன்றே படை என்னும் பெயர் பெற்று நிலவும் நற்காலத்தைக் கனவில் கண்டார். கருக்கொண்டு வயாவுற்ற மகளிரே மண் உண்ணும் வேட்கை கொள்ள, ஆளும் அரசர் என் போர் மண்ணுசை கொண்டு மக்களை அலைக்கும் போர்த் துன்பம் ஒழிந்த நல்லுலகைக் கனவில் கண்டார்.

சோறுபடுக்குந் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறல் அல்லது
பிறிதுதெறல் அறியார்நின் நிழல்வாழ் வோரே
திருவில் அல்லது கொலைவில் அறியார்
நாஞ்சில் அல்லது படையும் அறியார் ..
வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது
பகைவர் உண்ணா அருமண் ணினையே (புறம். 20)

என்னும் அடிகளில் ஓர் அரசனைப் புகழும் புகழ்மொழிகள் இருப்பினும், அவற்றின் கருத்தாய் நிலவும் கனவு உய்த்துணருமாறு அமைந்துள்ளது.

அடுதீ அல்லது சுடுதீ அறியா(து)
இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்
(புறம். 70)

என்பது போன்ற பழம் பாடல்களும்,

வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால் (கம்பா.

என்பது போன்ற இடைக்காலப் பாடல்களும் புலவர் பெருமக்கள் கண்ட விழுமிய கனவை விளக்குவனவே. இத்துணைக் கனவும்நனவு ஆகாமை, நாட்டிற்கு அடிப்படையான வீட்டு வாழ்வு திருந்தாமையே ஆகும். ஒன்றிரண்டு குடும்பங்கள் செம்மை யுறுதல் சாலாது; வீடுதோறும் அன்பும் அறனும் நிலவும் நன்னிலை வேண்டும்.

வீட்டு வாழ்க்கை திருந்தல் வேண்டும் என்பதே தமிழ் நாட்டு அறவோர் எழுதிய அறநெறிக் கெல்லாம் அடிப்படையாக விளங்குவது.

> இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
> முயல்வாருள் எல்லாம் தலை

என்றும்,

> அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது

என்றும் திருவள்ளுவர் அறத்துப்பாலில் தெளிவுறுத்தியது இதற்குச் சான்றாகும். உலகம் வாழ வேண்டும் என்னும் பரந்த நோக்கமாகிய அருள் ஒரு குழந்தை என்றும், அதன் தாய் தொடர்புடையார் மாட்டுத் தோன்றும் அன்பு என்றும், அத்தகைய அன்பு அறத்தின் அடிப்படையில், இல்வாழ்க்கை நெறியில், வாழ்க்கைத் துணை நலம் அமைந்து, மக்கட்பேறு வாய்த்த பின்னரே படிப்படியாக வளர்ந்தோங்கி அருளாய் மாறி நிற்பதென்றும் தெளிவாக்கியவரும் அத் தமிழ்ச் சான்றோரே ஆவர்.

அருள் நெறிக்கு வழியாய், அன்பு வாழ்வுக்கு அடிப்படையாய் அமைந்த இல்வாழ்க்கை உண்மையாகவே சிறந்து விளங்க வேண்டுமாயின், நாட்டின் ஆட்சி முறை நன்னெறிப் பட்டதாக விளங்கவேண்டும். ஒரு சிலர் நன்மனம் வாய்த்த புரவலராய் அமைந்திடுதலால் சிற்சில குடும்பங்களைக் காக்க முடியும். அவ்வளவிற்கு மேல் பெரு நன்மை விளையாது. அன்றியும், சுற்றுப்புறத்தின் தீய அமைப்பு அப் புரவலர் குடும்பங்களையே பற்றித் தொடரினும் தொடரும். அதற்கு எடுத்துக்காட்டாகத் தமிழ் நாட்டுப் புரவலர் ஒருவரின் இல்வாழ்க்கையைச் சுட்டலாம். தமிழ் நாட்டுப் புரவலர் வண்மையின் எல்லை

யைக் கண்டு தம் வாழ்க்கையை விற்க முனைந்து கெட்ட ஒப்புரவாளர்; நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும் பெற்ற வித்தகர்.

கடையெழு வள்ளல்கள் உணர்வே உருவாய பெருமக்கள்; தம் கூர்த்த அறிவெல்லாம் கொள்ளை கொடுத்து உயிர்க்கெல்லாம் இன்பம் செய்தலே வாழ்வாக வாழ்ந்தவர். அவருள், முல்லைக் கொடியின் கொழுகொம்பு பெறுத் திகைப்பைக் கண்ணால் கண்டபின் தன் செல்வ நிலையும் வாழ்வும் யாவும் மறந்து, அதற்கு உதவுதலே உணர்வாய்த் தான் ஊர்ந்து வந்த தேரை அங்கு அதற்கு உரியதாக நிறுத்தி வந்தான் பாரி என்னும் வள்ளல். இரவலர்க்குக் குதிரைகளை வழங்கி நாட்டையும் நல்கியவன் காரி என்னும் வள்ளல். நீல நிறப் பட்டாடையை ஆலமர் செல்வனுக்குக் கொடுத்து வேண்டிய பொருள்களையும் ஊர்களையும் வந்தவர்க் கெல்லாம் வழங்கி எல்லாம் இழந்தவன் ஆய் என்னும் வள்ளல். பெறுதற்கு அரியதாய் வாழ்நாள் வளர்ச்சிக்கு உரியதாய்ப் பெற்ற நெல்லிக்கனியையும் தான் உண்ணக் கருதாமல், புலவர் நெடிது வாழ விழைந்து கொடுத்து மகிழ்ந்தவன் அதிகமான். நண்பர்தம் இல்லறம் நடத்தற்கு வேண்டுவன நல்கிப் புகழ் பெற்றவன் நள்ளி. கூத்தர்தம் கலை வாழ அவர்க்கு நாடு கொடுத்துக் களித்தவன் ஓரி. மயில் ஆடி அகவியதைக் கேட்டுக் குளிரால் நடுங்கிக் கூவியதாக உணர்ந்து தன் போர்வையை அதற்குக் கொடுத்தவன் பேகன்.

அவருள் பேகன் கை வண்மையைப் புகழ்ந்த பரணர், “எவ்வளவு இயலுமோ அவ்வளவும் ஈதல் நல்லது என்பதே பேகன் கோட்பாடு. அவன் வண்மை மறுமை நோக்கியது அன்று; பிறர் வறுமை நோக்கியதே ஆகும்” என்றார்.

உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்(கு) ஈத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை ஆயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர், வறுமை நோக்கின்(று)அவன் கைவண் மையே.
(புறம். 141)

கை வண்மை மிக்க இத்தகைய வாழ்வு வாழ்ந்த பேகனிடம் ஒரு குறை வந்துற்றது. அஃது அவனது இல்லறத்திற்கு இழுக்குத் தரும் குறையாய் நின்றது. அதனை உணர்ந்த புலவர் மனங் குழைந்து வருந்தினர். கபிலர், பரணர் என்னும் செந்நாச் செல்வங்கள் வருந்தின. அரசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் என்னும் புலமை யுள்ளங்கள் வருந்தின. இப் பேரறிஞர் பேகனிடம் சென்று தம் மனத்துயரை எடுத்துரைத்தனர்.

மனத் துயர்க்குக் காரணம் என்ன? புலவர் பசியோ? அன்று. புலவர்க்கு இயல்பானது என அறியாது கூறும் வறுமையோ? அன்று. வரிசை அறியாது பரிசில் கொடுத்தவன் குறையோ? அன்று. கொடுத்த பரிசில் குறை யுடையது என்னும் குறையோ? அதுவும் அன்று. காணாது கொடுத்த பரிசில் என்னும் மானம் பற்றியதோ? அன்று. அன்பின்றிக் கொடுத்தது என்னும் குறையோ? அன்று. தவிர்ந்து விடு பரிசில், காலம் நீட்டித்துக் கொடுத்த பரிசில் என்னும் குறையோ? அன்று. தம் நாட்டார் வாழும் வகை நல்லுதவி பெறாக் குறையோ? அதுவும் அன்று. பேகனது வாழ்நாளுக்குத் தீது ஏதேனும் கண்டு வருந்திய வருத்தமோ! அதுவும் அன்று.

பசித்தும் வாரேம் பாரமும் இலமே (புறம். 145)

எனப் பரணர் பாடியதும்,

*அன்ன ஆகநின் அருங்கல வெறுக்கை*
*அவைபெறல் வேண்டேம் அடுபோர்ப் பேக* (புறம். 146)

என அரிசில் கிழார் அறிவுறுத்தியதும் காணலாம்.

புலவர்தம் மனத்துயர்க்குக் காரணம் பேகனது இல் வாழ்க்கையில் நேர்ந்த இழுக்கே யாகும். மயிலின் துன்பம் எனத் தவருக எண்ணியதைப் போக்கும் பொருட்டுத் தன் படாத்தினை அதனுக்கு ஈந்துவிட்டு வந்த அருளாளன், தன் வாழ்க்கைத்துணைவி வருந்தக் கைவிட்டுப் பிறள் ஒருத்தியோடு வாழ்வானாயினன். கண்ணகி என்னும் பெயர் வாய்ந்த அத் துணைவியோ கண்ணீர் சொரிந்து நைந்து நைந்து அழிவாளாயினள். இந் நிலையினை உணர்ந்த புலவர் மனம் வாளா இருத்தலும் கூடுமோ? அருளை வளர்ப்பது காதல் வாழ்வு. அருளாளனாகிய பேகன் இன்று காதல் வாழ்விற்கு இழுக்குத் தேடி அன்பு துறந்து வாழும் வாழ்வு புலவர் கருத்தைக் கலக்கிற்று. பரிசில் பெறுதல், வரிசை விழைதல் முதலிய காரணம் ஒன்றும் இன்றியே பேகனை நாடிச் சென்று தம் மனத்துயரை எடுத்துரைத்தனர்.

"கை வண்மை சான்ற பேக! நேற்று அரு வழி நடந்து வருந்தி வந்த சுற்றத்தின் பசியைப் போக்க வேண்டி, நின்னூர் எய்தி நின் வாயிலில் வாழ்த்தி நின்றேன்; நின்னையும் நின் மலையையும் பாடினேன். அதனைக் கேட்டவுடனே, துன்பம் மிகுந்து கண்ணீர் சொரிந்து அதனை நிறுத்தவும் ஆற்ருளாய், விம்மி விம்மி மிக அழுதாள்; அவளது அழுகுரலும் குழலின் துன்ப இசைபோல் இருந்தது! அவள் யாரோ? இரங்கத் தக்கவளாய் இருந்தாள்" என்ருர் கபிலர்.

**கைவள் ஈகைக் கடுமான் பேக!**
**யார்கொல்? அளியள் தானே! நெருநல்**

சுரன்உழந்து வருந்திய ஒக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசின் இரங்கும் அருவி
நளியிருஞ் சிலம்பின் சீறூர் ஆங்கண்
வாயில் தோன்றி வாழ்த்தி நின்று
நின்னும்நின் மலையும் பாட இன்னா(து)
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைய விம்மிக்
குழலினை வதுபோல் அழுதனள் பெரிதே. (புறம். 143)

புலவர் முயன்ற முயற்சியிலும் அதற்குக் காரணமான நல்லெண்ணத்திலும் நாகரிகம் விளங்குமாறு போலவே, அவர் மொழிந்த மொழியிலும் நாகரிகம் விளங்குகின்றது. பேகனுடைய துணைவியாகிய கண்ணகியே எனத் தாம் அறிந்திருந்தும், அறியார் போன்று, "யார் கொல்?—அந்த அம்மை யாரோ?" என்றார் பின்னர், "யாராக இருப்பினும் என்ன? அவள் நிலை இரங்கத் தக்கது!" என்றார். தன் மனைவி யாதலின் பரிந்து பேச வந்தார் புலவர் என்ற எண்ணமும் பேகனுக்குத் தோன்றாதவாறு, "யாரோ? யாராக இருப்பினும் என்ன? அவள் நிலைமட்டும் காணினும் அமையுமே! தலைவன் குடும்பத்தாளாயினும் பிற குடும்பத்தாளாயினும், அவள் உண்மையாகவே நைந்து விம்மி அழுதிடும் அழுகை எவர் மனத்தையும் கரைந் துருகச் செய்யும்! ஆதலின் இரங்கத் தக்காள்" என மொழிந்து வள்ளலின் உள்ளத்தை மாற்ற முயன்றார். தொடர்புடையார் மாட்டுத் தோன்றும் அன்பினும் தொடர்பில்லார் மாட்டும் தோன்றும் அருள் பெரிதாய் உணர்வு சிறந்தோங்கிய வாழ்வு வாழ்ந்த பேகனைத் திருத்த இதனினும் சிறந்த வகை வேறு உண்டோ? இவ்வாறு அருளாளனாய பேகனது உள்ளத்தில் அருளுணர்வு எழச் செய்த புலவர், பிறகே தாம் கண்ட காட்சியை எடுத்துரைக்கத் தொடங்கினார். "யான் பாடியது உன்னையும் உன் மலையையும். அப் பாடலைக்

கேட்டதும் ஒருத்தி அழக் காரணம் என்ன? அவள் உனக்கும் உன் மலைக்கும் தொடர்புடைய ஒருத்தியே ஆதல்வேண்டும். உன் நினைவால் அவள் உள்ளத்தில் துன்பம் மிகுந்த காரணம் யாதோ" என்னும் கருத்துக்கள் பெற அவள் அழுத அழுகையைக் கூறினர். "உன்னால் துறக்கப்பட்டதே காரணம்" எனக் குறிப்பால் புலப்பட வைத்த பின்னர், அவ்வாறு நீ துறக்கக் காரணம் இல்லையே! துறத்தற்குத் தகாத இளமையள்! அந்தோ" என்னும் கருத்துப்பட மொழிந்தார். அவள் உள்ளம் அழிந்து உடல் மெலிந்து அழுத காலத்தும், அவளுடைய குரல் குழலின் இனிமையைப் பெற்றிருந்ததாகக் குறித்து, "குழல் உருக்கமாக இசைப்பதுபோல் அழுதனளே" என்றார்.

கண்ணகியின் இளமையும், பேகனை நினைவூட்டிய அளவில் அந் நினைவு அவளை வருத்திய துயரும், துயர் ஆற்றாது அவள் விம்மி விம்மி அழுத அழுகையும், அவளை அறமின்றித் துறந்த பேகன் கொடுமையும், உயிர்க்கெல்லாம் இன்பம் செய்யும் வள்ளல் தன் வாழ்க்கைத்துணைவிக்குத் துன்பம் செய்தல் தகுதியன்று என்னும் உண்மையும், அவள் எத்தகையள் ஆயினும் இரங்கத் தக்காள் என்னும் இரக்க உணர்வும், தன் துணைவி என்னும் காரணம் பற்றி அன்பு செய்யத் தவறினும் யாரோ ஒருத்தி என்று எண்ணியேனும் அருள் செய்தல் வேண்டும் என்னும் கடமையும் ஆகிய அனைத்தும் அறிந்து திருந்துமாறு செறுத்த செய்யுட் செய்த செந்நாப் புலவர் பாடல் இது.

பரணர் கண்ணகி காரணமாக இரண்டு பாடல் பாடித் தம் கருத்தை வெளிப்படையாகக் கூறினர். தொடக்கத்திலேயே, "அருளாள! நீ அருளை மறந்தது கொடுமை" என்றார். "பேக! யாம் யாழிசைத்து உன் கானம் பாடி உன் வாயிலிற் சென்று நின்றேம். அவ்வள

வில், நெய்தல் மலரன்ன கண்களில் நீர் சொரிய, அணி கலன் நனைய ஓயாது அழுதாள். அழுகையைக் கண்ட யாம், 'அம்மா! நீ எம் நண்பன் பேகனுக்கு உறவோ?' என்று தொழுது வினவினேம். அந்த அம்மையோ, காந்தள் முகை போன்ற அழகிய விரலால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, 'யாம் அவனுக்கு உறவு அல்லேம். அவன் வேறு ஒருத்தியின் அழகை நச்சி வாழ்ந்து வருகின்றான்' என்றுரைத்தாள்" என்றார் புலவர்.

அருளாய் ஆகலோ கொடிதே! இருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினேம் ஆக,
நீல்நறு நெய்தலின் பொலிந்த உண்கண்
கலுழ்ந்துவார் அரிப்பனி பூணகம் நனைப்ப
இனைநலா ளுள் ஆக, 'இளையோய்!
கிளையை மன்எங் கேள்வெய் யோற்(கு)என
யாம்தன் தொழுதனம் வினவக், காந்தள்
முகைபுரை விரலின் கண்ணீர் துடையா
'யாம் அவன் கிளைஞரேம் அல்லேம் கேள்இனி
எம்போல் ஒருத்தி நலன்நயந்(து) என்றும்
வரூஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்
ஒல்லென ஒலிக்கும் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே! (புறம். 144)

நெய்தல்மலர்போல் பொலிந்த மையுண்ட கண் என்றும், காந்தள் முகை போன்ற விரல் என்றும் கூறிக் கண்ணகியின் அரிய இளமையை விளக்கிய புலவர், அந்த அம்மைமீது தவறு இல்லை என்பதனையும் தவறு பேகன் கண்ணதே என்பதனையும் தெளிவாய் எடுத்துரைத்தார். உன் கானம் பாடிய அளவில் அழுத அம்மையை யான் கண்டு தொழுதேன்; தொழுதே கேட்டேன் எனக் கண்ணகியின் தோற்றத்தில் விளங்கிய பெருமையும், ஒரு தலை

வனுக்குத் துணைவியாகும் தலைமை அவள்பால் விளங்கும் விளக்கமும் தெளிவாக்கினார். பேகன் தன்னைக் கைவிட்டுத் துறந்த கொடுமையைக் கடுமை சிறிதுமில்லா நற்சொல்லால் எடுத்துரைத்த கண்ணகியின் உரை கொண்டு அவளது அன்பின் பெற்றியையும் அறிவின் திறத்தினையும் புலவர் புலப்படுத்தினார். இவ்வளவு உண்மையும் தம் உள்ளம் உணர்ந்தமையால், உறுதி கொண்டு, “பேக! கொடுமை உனதே” எனக் கடியும் கூற்றை முதலிலே அமைத்து “அருளாய் ஆகலோ கொடிதே” என்றார்.

பேகன் தன் குற்றம் உணர்ந்தும் உடனே திருந்தானாய்த் தயங்கியிருந்து, “புலவர் மணியே! என் பரிசிலை ஏற்றருள்க” எனப் பரிசில் வழங்க முற்பட்டான் போலும்! பரணரோ, அதனை ஏலாது, “மயில் குளிரால் நடுங்குகின்றது என எண்ணி, அதற்குப் படாம் ஈந்து அருள் செய்த கெடாப் புகழோய்! பசியால் வருந்தி வந்தேம் அல்லேம். சுற்றத்தைக் காக்கும் கடமையைக் கருதியும்வந்தேம்அல்லேம்.ஆயினும், யாம்யாழ் இசைத்துப்பாடி உன்பால் இரந்திடும் பரிசில் ஒன்று உளது. அதுவே எமக்குப் பரிசிலாக வேண்டுமே அன்றிப் பிறிதில்லை. நீ அருள் ஆள்வாய்! அருளை விரும்பிப் போற்றும் வாழ்வு உடையாய்! அறம் செய்தருள்க என வேண்டுகின்றேம். மணியொலிக்கும் நெடுந்தேர் ஏறிச் சென்று துன்புருவாய் வாழும் உன் துணைவியின் துயர் களைந்தருள்க. இதுவே யாம் இரந்த பரிசில்” என்றார்.

மடத்தகை மாமயில் பனிக்குமென்(று) அருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக!
பசித்தும் வாரேம்; பாரமும் இலமே;
களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி

அறஞ்செய் தீமோ அருள்வெய் யோய்என
இஃதியாம் இரந்த பரிசில் அஃ(து) இருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னு(து) உறைவி அரும்படர் களைமே. (புறம். 145)

கண்ணகி என்னும் இல்வாழ் மயில் கண்ணீர் கலங்கி விம்மிப் பனித்தலைக் களைதல் வேண்டும் என்னும் நினைவு மிகுமாறு, கான மயிலுக்கு நடுக்கம் நீக்கக் கருதிப் படாம் ஈந்த புகழ்ச் செயலை நினைவூட்டினர். அருளை விரும்பியவன் என்பதை நினைவூட்டி "அருள் வெய்யோய்" என விளித்து அறம் செய்யுமாறு வேண்டினர். "இரந்த எல்லாம் அளிக்கும் கை வண்மையைக் காட்டுவாயாக. இஃது யாம் இரந்தது" என இரந்தார். இறுதியில் ஓரடியில் கண்ணகியின் கடுந்துயரை அவன் உள்ளத்தே பதிய வைத்திடுமாறு, "இன்னு துறைவி" என்றும், "அரும்படர்" என்றும் எடுத்துரைத்தார். படர்களைக-நினைந்து நினைந்து வருந்தும் துயர்களைக என வேண்டினர்.

அரசில் கிழார் என்னும் புலவரும் பேகன் அளித்த பரிசிலை மறுத்து, "உன் செல்வமாகிய அணிகலன்கள் பெறுதலை யாம் விரும்பவில்லை. என்னை விரும்பிப் பரிசில் நல்குவாய் ஆயின், யான் கூறுவது கேட்க," என்று கண்ணகியின் துயரைப் போக்கி அன்பு செலுத்துமாறு வேண்டினர்.

அன்ன ஆக; நின் அருங்கல வெறுக்கை
அவைபெறல் வேண்டேம்; அடுபோர்ப் பேக!
சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடு பாட என்னை நயந்து
பரிசில் நல்குவை ஆயின், குரிசில்! நீ
நல்கா மையின் நைவரச் சாஅய்
அருந்துயர் உழக்கும்நின் திருந்திழை அரிவை

**கலிமயிற் கலாவம் கால்குவித் தன்ன**
**ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇத்**
**தண்கமழ் கோதை புனைய**
**வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே.** (புறம். 146)

கண்ணகியின் துயரம் எல்லாம் பேகன் அருளின்றித் துறந்த காரணத்தால் ஆகியதே என்பதைப் புலவர் தெளி வாக்கக் கருதி "நீ நல்காத காரணத்தால் நைந்து மெலிந்து அருந்துயர் உழக்கின்றாள்" என்றார். "நீ தேர் ஏறிச் செல்ல வேண்டும். அத் தேர்க்குக் குதிரை பூட்டுக. நீ சென்று அருளினால் அத் துணைவி தன் துயர் மறத்தல் திண்ணம். துயர் எல்லாம் மறந்து பண்டுபோல் வாழத் தொடங்குவாள். தன்னைப் புனைந்து கொள்வாள். பேக! அவளது கூந்தல் உன் கண்ணிற் படவில்லையோ? அக் கூந்தல் நறும் புகை மறந்து, மலர்க்கோதை துறந்து இருக் கின்றதே. அதற்குப் புகையும் பூவும் பண்டுபோல் வாய்க்க வேண்டுமானால் நீ செல்லல் வேண்டும்" என்றார். அதனையும் அவனுக்கு உளங்கொளக் கூறல் வேண்டும் என்னும் நோக்கு உடையவராய்,"கானத்தில் ஐயறிவு உயி ராய்த் தோகை விரித்து ஆடிய மயிலைக் கண்டு மனமுருகி அருள் செய்தாயே! உன் துணைவியின் கூந்தலை வள மிக்க மயில் தோகை எனக் காணும் கண் பெற்றிலையோ! அத் தோகைபோல், தழைத்த மெல்லிய கூந்தலைக் கண்டு உருகி அருள் செய்யும் மனம் பெற்றிலையோ!" என்னும் குறிப்போடு "கலிமயிற் கலாவங் கால்குவித் தன்ன ஒலி மென் கூந்தல்" எனச் சிறப்பித்தார். அக் கூந்தல் புகை யும் பூவும் பண்டே போல் பெறச் செய்யும் எண்ணங் கொண்டு இங்கிருந்து இல்லத்திற்குத் தேரேறிச் செல் லுதலே தம் பரிசிலென வேண்டினார்.

பெருங்குன்றூர் கிழார் என்னும் புலவரும் கண்ணகி யின் கூந்தலைக் குறித்தே தம் வேண்டுகோளை விடுத்தார்.

"ஆவியர் கோவே! உன் துணைவியின் கூந்தல் நெய் துறந்து மறந்து பன்னாள் ஆயின. ஆயினும் அதன் இயற்கையழகு இளமை மிகுதியால் கெடவில்லை. மாசு சூழ்ந்த மணி போல் உள்ளது; அவள் தன் துயரம் நீங்கி நலம் பெறப் புனையத் தொடங்கி, நீரால் மண்ணுதல் பெறின், மாசற்ற மணி யென விளங்கலாகும்; புது மலரும் சூடிப் பொலியும்; இன்று அந் நல்லருள் கொண்டு உன் மனைக்குத் திரும்பிச் செல்லுக. அதுவே எமக்கு வேண்டும் பரிசில்" என்றார்.

கன்முழை அருவிப் பன்மலை நீந்திச்
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததை
கார்வான் இன்னுறை தமியள் கேளா
நெருநல் ஒருசிறைப் புலம்புகொ(ண்டு) உறையும்
அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல இன்று பெயரின்
அதுமன் எம் பரிசில் ஆவியர் கோவே. (புறம். 147)

"இன்று பெயர்க" என்னும் புலவர் வேண்டுகோளில் துணிவும் தெளிவுமான கருத்து விளங்குகின்றது. "இங்கிருந்து நீ செல்க" என்று கூறுவதோடு அமைந்திருப்பின், "செல்லின்" என்னும் சொல் பெய்திருப்பர். ஆயின், "உன் மனை அதுவே. உன் வாழ்வும் அங்கே விளங்கல் வேண்டும்" என்னும் அறிவுறுத்தல் 'பெயர்தல்' (திரும்பிச் செல்லுதல்) என்னும் சொல்லில் அமைந்து கிடக்கின்றது. முழையும் அருவியும் மிக்க பல மலை வழிகளை யெல்லாம் அரிதின் கடந்து வந்ததை - நீந்துவார்போல் கை கால் மார்பு முதலிய பல உறுப்பாலும் குனிந்தும் சார்ந்தும் தவழ்ந்தும் அரு முயற்சியோடு வந்த வரவை எடுத்துக் கூறி இத்தகைய வரவு இப் பரிசில்

கருதியதே என வற்புறுத்தினுர். "அதுமன் எம் பரிசில்" என்றவர், இத்தகைய பரிசில் வேண்டாதே தரும் குடிப் பெருமையும் நினைவூட்டி "ஆவியர் கோவே" என்ருர். இடையே கண்ணகியின் கட்டழகும் இளமைச் சிறப்பும் சிறு சிறு தொடர்களால் விளங்கச் செய்தார். "தமியள் கேளா, நெருநல் ஒரு சிறைப் புலம்பு கொண்டு உறையும் அரிவை" என்றபோது, "ஒரு செல்வத் தலைவன் - ஆவியர் கோ - சிறந்த வள்ளல் ஒருவனுக்கு வாழ்க்கைத் துணையாய் வந்தவள் தனிமைத் துன்பமுற்றுப் பெரு மனை யில் ஒரு மூலையில் பொலிவின்றி வாழ்தலைச் சுட்டிப் பேகன் தலைமைக்கு நேர்ந்த இழுக்கை வெளிப்படுத்தினுர்.

இப் புலவர் பெருமக்கள் பேகனிடம் இவ்வாறு உரைத்த வேண்டுகோள்களில் பேகன் இழைத்த பெருங் குற்றத்தை நயமான வகையிலும் தெளிவான முறையிலும் கரவாமல் எடுத்துரைத்த திறமை போற்றத் தக்கது. "ஈ யென இரத்தலோ அரிதே" என்னும் பெருமிதப் புலமை மரபில் வந்தவர், "இஃது யாம் இரந்த பரிசில்" என்று இரந்ததும் போற்றத் தக்கதே. பழுமரந் தேரும் வாவல் (வௌவால்) போல் பரிசில் தரும் செல்வரை நாடிச் செல் லும் வாழ்க்கையினர் புலவர் என்று காண்கின்ருேம். ஆயினும், செல்வர், வறியர் என்று பகுத்த பகுப்புக் கொண்டு அவர்கள் பொருள் தருவோரை நாடிச் செல்ல வில்லை. நல்லோர் அல்லோர் என்றே பகுத்து நாடிச் சென்றனர். நல்வாழ்க்கை உடையவர் தரும் பொருளையே அவர் விரும்பிப் பெற்றனர். ஏனையோர் செல்வத்தை அவர் மதித்தார் அல்லர்.

பேகன் நல்வாழ்க்கை உடையவன் என்பதற்கு வேறு சான்று வேண்டா; கான மயிலைக் கண்டிரங்கி அருளிய அருட் செயல் ஒன்றே அவனது வாழ்க்கைச் சிறப்பிற்குச் சான்ருக அமையும். அது பற்றியே புலமையாளர் அவ

னைச் சூழ்ந்து அவன் தரும் பொருளைப் பெற்று உவந்தனர். அத்தகைய அருள் வாழ்வில் பெருங்குறை கண்டபோது கண் மூடி யிருக்கப் புலவர் மனம் பொறுக்கவில்லை. ஒன்று அவன் வாழ்க்கையைத் திருத்த வேண்டும்; அல்லது, அவனை அணுகாது துறத்தல் வேண்டும். நன்றி மறவா நெஞ்சத்தினர் பின்னது ஒருகாலும் செய்ய இசையார். முன்னதே செய்ய முற்படுவர்.

புலவர் நன்றி மறவா நெஞ்சத்தினர். அவர் இத்தகையார் என்பதற்கு ஆலத்தூர் கிழார் என்னும் ஒருவர் கிள்ளி வளவனைப் பாடிய ஒரு பாடலே சான்றாய் அமையும். எத்தகைய தீங்கு இழைத்தார்க்கும் கழுவாய் உண்டு; ஆயினும் நன்றி மறந்தோர்க்கு உய்வு இல்லை என்றார் அவர்.

நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்(கு) உய்தி இல்லென
அறம்பா டின்றே ஆயிழை கணவ !
காலை யந்தியும் மாலை யந்தியும்...
எங்கோன் வளவன் வாழ்க என்றுநின்
பீடுகெழு நோன்தாள் பாடேன் ஆயின்
படுபறி யலனே பல்கதிர்ச் செல்வன் (புறம். 34)

புரவலர் செய்த நன்றியைப் புலவர் மறத்தலோ இல்லை. ஆயின், அது பொருட்டுப் புரவலர் செய்வன எல்லாம் போற்றிப் புகழும் கண்மூடி வாழ்வும் அவர்பால் காண்பது அரிது. பொருள் பொருட்டாக அப் புரவலர் நட்பைக் கொண்டு அவர் தவறும்போது மறந்திருக்கும் ஆற்றல் உணர்வு மிக்கவர்க்கு உளதாகுமோ? நகுதற் பொருட்டே அவர் நட்பு எனக்கொண்டு அமைந்திடாமல், மிகுதிக்கண் மேற் சென்று இடித்துரைத்தற் பொருட்டும் ஆகும் எனத் துணிந்தவர் அவர். அவ்வாறு தவறு கண்ட இடத்துக் கடிந்துரைத்தலால், புரவலர் மனம் நோகுமே

எனக் கவலையுற்றார் அல்லர். பெறும் பொருளே பெரிது எனக் கருதி நாடும் கயவராயின், புரவலர் நெஞ்சம் வெறுப் புறுமே எனத் தயங்கியிருப்பர். புலவர், பொருளைப் பெரி தெனப் போற்றாது, பூரியர் கண்ணும் பொருட் செல்வம் இருத்தலை உணர்ந்து, அதனை அதன் பொருட்டாகவே மதியாது, அருட் செல்வத்தினையே பெரிதெனப் போற்றி, அருளின் பொருட்டாகவே மதித்தனர். ஆதலின், புரவலர் செய்யும் தவறு எடுத்துரைத்தலால் அவர் நெஞ்சம் திருந் தின் நலம்; திருந்தாவிடின் கவலை வேண்டா என்னும் துணிவு கொண்டு வாழ்ந்தனர். புரவலர் வெறுத்து நீக் கினராயின், அப்போதுதான் வேறொரு பழுமரந் தேடி வாவலெனச் சென்றனர். அந்நிலையிலும் நன்றி மறவா உள்ளத்துடனேயே சென்றனர்.

இவ்வாறு தவறு கூறிக் கடியும் வகையில், புரவல ரது பொது வாழ்க்கையில்—புற வாழ்க்கையில் நேர்ந்த குறைகளைக் குறிப்பிடல் ஒரு வகை. அதுவும் அருமை உடையதே. ஆயின் அதனினும் அருமை மிக்கது மற்றொரு வகையானது. அஃதாவது, புரவலரது இல்வாழ்க்கை யில்—அக வாழ்க்கையில் நேர்ந்த குறைகளைக் குறிப்பிடல். இத் துறையில் பேகன் செய்த தவற்றினைத் தயங்காமல் எடுத்துரைத்த கபிலர் முதலானோரை என்னென்று போற்றுவது? புலமை என்னும் ஒன்று, மக்களுக்குரிய நற்பண்பு பலவும் விளங்குமிடத்தே வாழ்வது என உணர்ந்து போற்றுவோமாக.

# பரிசில் வாழ்க்கை

வாழ்க்கை என்பது ஊண் உடை உறையுள் முதலிய வற்றைத் தேடிப் பெறும் முயற்சியில் தொடங்குவது. சமைத்து உண்ணல், நெய்துஉடுத்தல், வீடு அமைத்து வாழ் தல், தற்காப்புக்காகப் பற்பல கருவிகள் இயற்றிக் கொள்ளல் முதலியன வாழ்க்கையின் முதற்படியில் நிகழ்வன. அந்நிலையில் பொருளே வாழ்க்கையின் நோக்க மாக - மக்கள் நாட்டமாக - அமையும்.

பொருளால் - ஊண் உடை முதலியவைகளால் - இன்பம் பெற முயன்று அலைந்து அலைந்து வாடிய பின், மக்கள் வாழ்க்கையின் இரண்டாம் படியினை எய்துவர். உண்ணும் உணவுக்கும் உடுக்கும் உடைக்கும் இருக்கும் இடத்திற்கும் போராட வேண்டிய வறுமையில் சிக்குண்டு வருந்தும் மக்கள் இரண்டாம் படியினை எய்தார். கஞ்சிக் கவலை மிகுந்த நாட்டில் கலைக் கவலை எழாது; கடவுட் கவலையும் தோன்றாது. பசித்துன்பம் அலைக்கும் நாடு பண் பாடு எய்தாது. வேண்டிய உணவும் பெற்று, உடையும் பெற்று, இடம் முதலியனவும் பெற்றவரே இரண்டாம் படியை எய்தும் தகுதி வாய்ந்தவர். தமிழ்ச் சான்றோர் ஊர் களைப் புகழத் தொடங்கியபோது, மாடமாளிகையும் பிற வும் பற்றிப் புகழ்ந்துரைத்தலில் ஊக்கங் கொள்ளாமல், "பசியெனல் அறியாப் பணைபயில் இருக்கை" என்று புகழ்ந்த திறன் போற்றத் தக்கது. "பசிப்பிணி மருத் துவன்", "பாண்பசிப் பகைஞன்" என்று அப்பெருமக்கள்

தாம் அறிந்த வள்ளல்களைப் போற்றினர். ஆதலின் வறுமை அற்ற நாடே முன்னேற்றத்திற்குத் தகுதியுற்ற நாடாகும். அந்நாட்டு மக்களே வயிற்று வாழ்வு என்னும் முதற்படியிலிருந்து கலைவாழ்வு என்னும் இரண்டாம் படிக்கு உயர வல்லவர். ஏனையோர் கலை கலை என்று முழங்குதல் ஆரவாரமே அன்றிச் சிறிதும் பயன்படாதது. அவரால் கலைக்கும் ஊறு, கலையால் அவர்க்கும் அல்லல் என்னும் நிலையே பசிப்பிணி மிக்க நாட்டில் காணப்படுவது.

இரண்டாம் நிலை உற்ற மக்கள் வயிற்றுக்கவலை அற்றவராய், புலன்களுக்குச் சிறந்த விருந்து தேடி அவற்றின் வாயிலாக இன்பம் பெற முயல்வர். கண்ணுக்கு இனிய காட்சியாக ஓவியம், சிற்பம், நாடகம் முதலியன தேடுவர். செவிக்கு இனிய விருந்தாக இசை காவியம் கதை முதலியன நாடுவர். அவ்வாறே மற்றப் புலன்களுக்கும் ஏற்ற விருந்து விழைந்து தேடுவர். அந்நிலையில் கலைவளர்ச்சியே மக்களின் வாழ்க்கையாக அமையும். இத்தகைய வாழ்க்கையின் உயிர் கலை எனலாம்.

இன்று உலகம் எந்நிலையில் உள்ளது? வாழ்க்கையின் இரண்டாம்படியில் உள்ளது எனக் கூறுதலோ இயலாது. பல கோடி மக்கள் வாழும் பரந்த உலகில் ஒருவர் இருவர் வாழும் வாழ்க்கையினை எண்ணி நாகரிகத்தினை அளத்தல் கூடாது ; பெரும்பாலான மக்கள் வாழ்க்கையே அளக்குங் கருவியாகக் கொள்ளுதல் அறிவுடைமை.

மேற்குநாடுகள் ஊண் உடை முதலிய பொருட் கவலையினைக் கடந்தாற்போலிருந்து (ஆயின் உண்மையில் கடக்கவில்லை) இண்டாம் நிலையினை எய்தின. சென்ற சில நூற்றுண்டுகளில் பொருள்துறையில் முன்னேற்றமும் உற்றன. எங்கும் காவியமும் ஓவியமும் இன்னிசையும் நாடகமும் வளர்ந்தோங்கின. அக் கலைகளுடன் விரைந்து

வளர்ந்து சிறந்து விளங்கியது அறிவியல் (Seience) என்னும் கலை. அதன் வளர்ச்சி வியப்பானது ; அதனால் பிறகலைகள் உற்ற மாறுதல்கள் அதனினும் மிக வியப்பானவை. அத்தகைய வியப்பான முன்னேற்றத்தால் புகைவண்டி, மோட்டார், வானக்கப்பல் முதலாய போக்குவரவுக் கருவிகள் தோன்றிப் பெருகின ; பேசும் படம், வானொலி முதலியனவும் அமைந்தன. இவையனைத்தும் கலையறிவை எங்கும் பரப்பின ; எவர்க்கும் பரப்பின.

இப் பயனைக் கிழக்கு நாடுகளும் எய்தாமல் போகவில்லை. எங்கெங்கும் கலைகள் பல துறையிலும் பரவி, கொள்ளுமிடத்துக் கொண்டும் கொடுக்குமிடத்துக் கொடுத்தும் மிக்க கலப்பும் வளர்ப்பும் பெற்றன. சிறந்த ஓவியத்தைச் செல்வாக்கு மிக்கவரே அன்றி அனைவரும் கண்டு களிக்கும் வாய்ப்பு அமைந்தது. இனிய இசையில் வல்ல கலைஞன் ஒருவன் பாடும் பாட்டை ஒரு வள்ளலின் அரண்மனையில் ஒரு சிலர் இருந்து கேட்கும் எட்டாநிலை போய், ஊர்தொறும் வீடுதொறும் எல்லோரும் கேட்டு மகிழும் வாய்ப்பு வானொலியால் அமைந்தது. இசைக் கலைஞன் பாடியதை இசைத்தட்டில் நிறுத்திப் பின்னர் வேண்டிய போதெல்லாம் வேண்டிய இடத்திலெல்லாம் கேட்டு மகிழும் நல்வாய்ப்பும் மக்கள் பெற்றனர். நாடகம் ஒன்றை ஒரு முறை வல்லார் நடிக்க, ஒலியும் ஒளியும் பதியும் படக்காட்சி யாக்கி அந் நாடகத்தை எங்கும் எவரும் எளிய செலவில் கண்டு களிக்கும் வாய்ப்பும் பெறலாயிற்று. பெருஞ் செல்வர் களித்திடக் காரணமாய கலைகள் வறியவர்க்கும் எளியவர்க்கும் தடையின்றிப் பயனளித்தன. நாடெல்லாம் கலைமுழக்கு எழுந்தது.

அறிவியல், கலைவளர்ச்சிக்கு இத்துணை நன்மையை இத்துணை விரைவில் செய்தல்கூடும் என எவரும் எதிர்

பார்த்திரார். ஒரு சிலர்க்கே உரியதாய் ஒதுங்கி வாழ்ந்த கலை பொதுமக்களிடம் பெருவாழ்வு பெறத் தொடங்கியது சுருங்கக்கூறின், அறிவியல் முன்னேற்றம் கலையைப் பொதுவுடைமை யாக்கிற்று எனலாம்.

கலையைப் பொதுவுடைமை யாக்கிடப் பேருதவி புரிந்த அறிவியல் முன்னேற்றம் பெரியதொரு தீங்கும் இழைக்கலாயிற்று. இயந்திரங்களைப் பெருக்கி, கைத்தொழில் நிலையங்களை வளர்த்து, பொருள் வருவாயினை ஒரு சிலர்க்கே உரியதாக்கி, ஏனையோர்க்குப் பொருட்கவலையை வளர்த்தது அறிவியல் முன்னேற்றமே அன்றோ? இம் மாறுதலால், ஒரு நாட்டில் பொருள் சுரந்து பெருகுதலும் மற்றொரு நாட்டில் பொருள் வறண்டு குறைதலும் நேர்ந்தன. பொருள் மிகுதியாக ஈட்டிய நாடு செருக்குக் கொள்ளலாயிற்று; பொருள் இழந்த நாடு பொறாமை கொள்ளலாயிற்று. செருக்கும் பொறாமையும் கூடி வாழும் இயல்பின அல்லவே! அந்நாடுகள் கூடி வாழாமல் தனித் தனியே ஒதுங்கியிருத்தலும் இந் நூற்றாண்டில் இயலாதே! எனவே, அவை முட்டின; முழங்கின. அவ்வாறு முட்டுதலும் முழங்குதலுமே இக்காலத்து நிகழும் போர்களும் பூசல்களும் ஆகும். இப்போர் பூசல்களுக்குக் காரணமான அறிவியல் துறையே அவற்றிலும் அளவற்ற முன்னேற்றத்தைக் கண்டு உதவியது; உலகை அழிக்க உதவியது; உயிர்களை இரக்கமின்றி எளிதில் கொல்ல வழிகண்டு உதவியது. போர்களிலும் பூசல்களிலும் உள்ள புதுமை வியக்கத் தக்கது. புதுமுறையான போர்; அதற்கு ஏற்ற புதிய பலவகைக் கருவிகள்; பூசல்களை மூலை முடுக்கெல்லாம் பரப்புதற்கு ஏற்ற பல வழிகள்; நிலத்திலே அன்றி நீரிலேயும் அன்றி வானத்திலும் பறந்து கண்மூடிச் செய்யும் குருட்டுக் கொலைகள்; அவற்றை மேன்மேலும் வளர்த்தற்கு ஏற்ற பல முறைகள்; போர்க்கோலம்

புனைந்த வீரர் இனிதிருக்கப் போர் வேண்டா மங்கையரும் குழவிகளும் அவர்தம் குடும்பத்தினரும் மாண்டு போதற்கு உதவும் முறைகள்; இவை யாவும் அறிவியல் முன்னேற்றத்தின் விளைவேயாம்.

கலைகளைப் பெருக்கிப் பொதுவுடைமையாக்கி அற நாகரிகம் வளர்க்கவேண்டுவதொரு நிலையில் நின்ற மேற்கு நாடு எத்தகைய வீழ்ச்சியுற்றது! அறவாழ்வைப் பற்றிய எண்ணமும் அங்குள்ளார் பலர்க்கு வேம்பாகக் கைக்கும் நிலையே உற்றது!

அறிவியல் முன்னேற்றத்தால் கலை பொதுவுடைமையாய்ப் பரவியும் வாழ்க்கையின் முதற்படியாகிய பொருட் கவலை தீரவில்லை; பொருள்நிலை திருந்தவில்லை; திருந்தாதொழியினும் கவலை இல்லை; மிக்க கேடுற்றது. கலை பொதுவாய் வளர வளர, பொருள் தனிச் சிலர்க்கு எட்டுவதாய் ஏனையோர்க்குக் கிட்டாததாய் மாறிற்று; கலைவாழ்வில் எல்லோரும் ஏறக்குறைய ஒத்த உரிமையராய் விளங்க விளங்க, பொருள் நிலையில் ஒரு சிலர் இமயம்போல் உயர்ந்து நிற்க, மிகப் பலர் இந்தியக் கடல்போல் தாழ்ந்து கிடந்தனர். கலையுலகம் சமவெளியாகி வரவர, பொருளுலகம் மலையும் மடுவும் மிக்கதாகி வந்தது. மலை மடுப் போன்ற வேற்றுமை, வாழ்க்கையின் அமைதியைக் குலைத்தது. பொருட்போரிலும் பொருட்பூசலிலும் மக்கள் கருத்துப் பதியலாயிற்று. பொதுவிருந்தாய்த் தத்தம் வீடு நோக்கி வந்த கலையை வரவேற்கும் கண்ணற்றவராய் மக்கள் வெறிகொண்டு பொருட்போர் புரியலாயினர்; பொருள் தேடும் போர், தேடிய பின் காக்கும் போர்— இவற்றில் அவர் வாழ்வு முழுதுமே திரும்பிற்று. பொருளினையே முதல் நோக்கமாகக் கொண்ட அவர்க்குக் கலை ஒரு கருவியாகவே தோன்றலாயிற்று; கலைகளைப் பொருட் போருக்குப் பயன்படுத்தி வரலாயினர்; அவ்வளவில்

நிற்றலின்றித் தாம் போற்றும் சமயத் துறையினையும் பொருள் வாழ்விற்கு ஈர்த்தனர். தாம் ஈர்த்தவாறு இணங்கின் சமயம் நன்று எனவும் மெய் எனவும் போற்றினர்; ஈர்த்தவாறு இணங்காத சமயநெறி தீது, பொய் எனத் தூற்றினர்.

பொருள் காரணமாக முயன்று கல்லும் கட்டாரியும் கொண்டு தற்காப்புத் தேடிய மனிதன் உலகத்தின் தொடக்கத்தில் வாழ்ந்தவன் அல்லனோ? இன்றுள்ள மனிதனும் பொருள் காரணமாகவே எல்லாம் செய்கின்றான். இவனுக்குக் கல்லும் கட்டாரியும் இல்லை; அவற்றிற்கு ஈடாக நச்சுப்புகையும் அணுக்குண்டும் கொண்டு தற்காப்புத் தேடுகின்றான்; கலை நாகரிகத்தையும் போர்க்கு இரையாக்கிக் கொல்கின்றான். காவியம் ஓவியம் இசை நாடகம் எல்லாவற்றையும் இவற்றோடு சமய நெறியினையும் சேர்த்து 'நாட்டுப் பற்று' என்ற கண்கவர் நிறம் ஊட்டிப் பொருட்சந்தையில் விற்கின்றான்; சந்தையில் பூசல் கிளம்பியபோது அவை பலவற்றையும் போர்ப் பேய்க்குப் பலியிட்டுத் துள்ளுகின்றான்; தானும் தன்னுயிரை அவிப்பலியாகக் கொடுத்திடுகின்றான்.

பொருளின் பொருட்டுக் கலை இரையாகும் காலம் இது. அறிவியல் முன்னேற்றத்தால் கலை வளர்வதுபோல் வளர்ந்து இவ்வாறு அலைவுறுதல் இரங்கத் தக்கதே. ஆயின் இந்நிலை நீடித்திராது. இயற்கை யன்னை வாழ்க்கை நிலையினை உயர்த்த முனைவாளே அன்றி ஒருகாலும் தாழ்த்த முனையாள். அவளருளால் கலை எல்லாரையும் நாடி அடைந்ததுபோல் பொருளும் பலர்க்கும் கிட்டுவதாகி உலகம் நலமுறும் காலம் வரும். "வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்" என்று கலையுலகத் தலைவர் பலர் கண்ட செந்நெறி அரசியல் தலைவர்க்குப் புலனாகிவிட்டது. அத்தகைய செந்நெறியை வெறுங் கன

வாக எண்ணி வைத்திராமல், நனவாக ஏற்படுத்தும் பொறுப்பு அரசியல் தலைவரைச் சார்ந்தது. அப்பொறுப்பினை அவர் உணர்ந்து செயலாற்றி நல்லுலகம் அமைக்கும் வரையில் இயற்கை யன்னை ஒறுத்துக்கொண்டே யிருப்பாள்; ஒறுப்பின் வாயிலாக உயர்ந்த தேவையைத் தேடத் தூண்டிக்கொண்டே யிருப்பாள். எனவே, என்றேனும் ஒருநாள் கலையும் பொருளும் பொதுவாகி, மக்களிடையே பல்கியுள்ள பல்வகை வேறுபாடுகளும் குறைந்து ஒழியும். அன்று, கலை வாழப் பொருள் குற்றேவல் செய்வதைக் காணலாம். கலை அரியாசனத்தே அமர்ந்திருக்க, பொருள் அக் கலையைப் போற்றிவழிபடுவதைக் காணலாம். பொருள் கருவியாய் அமைந்து மக்கள் கவலையை ஒழிக்க, கலை பயனாய் அமைந்து மக்கள் மனத்தை விளக்கக் காணலாம்; கவலை ஒழிந்து விளங்கும் மனத்தில் அன்று அறம் வாழும். சமயம் சிறக்கும்; உண்மை உயரும்.

பண்டைத் தமிழ்நாட்டில் கலையும் பொதுவாகவில்லை; பொருளும் பொதுவாகவில்லை. அந்நாள் நெருங்க இன்னும் பல்லாண்டு இருத்தலால், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழங்காலத்தில் அப் பொதுநிலை அமைந்திருத்தல்வேண்டும் என எண்ணுதலும் கூடாது. ஆயின், நாகரிகம் அக்காலத்தில் இயன்ற அளவில் அமைந்திருந்தது. அஃதாவது: கலை வேண்டுவார் கலையும் பெற்றனர்: பொருள் வேண்டுவார் பொருளும் பெற்றனர். கலைக்குப் பொருள் உதவியதே அன்றி, அது பொருளுக்கு இரையாகவில்லை. செல்வர் வள்ளல்களாய் விளங்கினர்; கலைஞர்க்குப் பொருட்கவலை நேராமல் காத்தனர். செல்வர் பொருளாளராக இராமல் கொடையாளராக வாழ்ந்து கலைக்காதல் கொண்டு கலைஞரைப் போற்றினர்.

தோயன்மாறன் என்பவன் ஈர்ந்தூரில் வாழ்ந்த வீரன். அவன் செல்வனும் அல்லன்; வறிஞனும் அல்லன்.

ஆயினும் கொடை மனம் உடையவன். அவனை நாடிச் சென்ற இசைக்கலைஞர் (பாணர்) பசி அறிந்திலராம் அக்காரணத்தால் அவன் 'பாண்பசிப் பகைஞன்' எனப் பாராட்டுற்றான். தன் நாட்டு அரசன் பொருட்டுப் போர்க் களம் புக்குப் பெருஞ்சமர் புரிந்து விழுப்புண் பல பட்ட யாக்கையனாய் விளங்கினான். மருந்தாகிப் பயன்படும் மரம் வாள்வடுப் பல பட்டு நின்றாற்போல் நின்றான். அவனிடம் எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார் என்னும் புலவர் ஒருவர் பசியால் வாடியவராய்ச் சென்றார். அவர்தம் ஒட்டிய வயிற்றைக் கண்டு தோயன்மாறன் வருந்தினான் "உணவின்றி வாடும் வயிறு - கலைஞர் வயிறு - என் கண் எதிரே யான் காண வாடுகின்றது. யான் உயிர் கொண்டு வாழ்தல் பெரும்பிழை. போர்க்கருவிகள் வேண்டும். வேல் வேண்டும். வேல் கொண்டெழுந்து பொருளுடையவரிடம் சென்று அவரோடு பொருவேன். புலவர் வறுமை தீர்ப் பேன். என் உடல் வலியையும் உயிர் வாழ்வையும் ஈடு வைத்துக் கலை யுரிமையைக் காக்க வல்லேன். கலைஞர் பசி என் சாக்காடு ஆகுக" என எண்ணி எழுந்தான். மறுபுறம் திரும்பினான். தன்னூர்க் கொல்லனைக் கண்டான். "ஐய! உன்னை நினைந்தே எழுந்தேன். புலவர் வயிறு காண். அவர் இரக்கின்றார் அல்லர். இரப்பவன் யானே. வேல் வேண்டும். பொருளுடையவரோடு பொருது கலையினைக் காத்தல் வேண்டும். அப் போருக்கு வேல் வேண்டும். வேல் வடித்து உதவுக" என்றான்.

நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே
இறையுறு விழுமம் தாங்கி அமரகத்(து)
இரும்புசுவைக் கொண்ட விழுப்புண் நோய்தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடைஎதிர்ந்(து)

ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்
யாம்தன் இரக்குங் காலைத் தான்எம்
உண்ணு மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே (புறம். 180)

மதுரைக் குமரனார் என்னும் அப்புலவர் இவ்வாறு பாடியுள்ளார். கலைஞரது உண்ணு மருங்குல் கண்டதும் வீரன் வேல் தேடும் காட்சி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகம் கண்ட காட்சி. இருபது நூற்றாண்டுகள் கழிந்தபின்னர், தனி ஒருவனுக்கு உணவின்மை காணின் சகத்தினை அழிக்க என்று அப்புரட்சியே புத்துருக்கொள்ள லாயிற்று. கலைஞர் வாழின் உலகம் வாழும். நாடு பசித் திருக்கக் கலைஞர் பொறார் என்னும் உண்மையை உணர்ந்தே பண்டைக் காலத்தில் உணர்வு மிக்க செய லாளர் கொடையாளராய் விளங்கினர். இடையறாப் பொருள் வருவாய் நல்கும் செல்வம் இல்லை எனினும் அவர் கவலை உற்ற தில்லை. செல்வம் நல்கும் ஆண்மையை—வேல் கொண்டு எறிந்து பொருது வென்றேனும் செல்வம் தேடும் ஆண்மையை நம்பி அவர் வாழ்ந்தனர். உண்ணுது வாடிய வயிற்றைக் கண்டதும் வேல் தேடிப் போருக்கு எழும் வீரமன்றோ உண்மையான வீரம்!

பொருளுடைமையையோ, அன்றிப் பொருளின்மையை யோ அத்தகையோர் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. உண்டென நல்கும் வண்மையையே அவர் பெருமையாகப் போற்றினர். இல்லென மறுக்கும் வன்மையையே அவர் சிறுமையாக வெறுத்தனர். நல்கும் வண்மையும் மறுக்கும் சிறுமையும் பொருளில் இல்லை; உள்ளத்தில் உள்ளவை. எனவே, பெருஞ் செல்வராக இருந்தும் ஈகைப் பண்பு இல்லாதவரே வறியவர்; பொருள் அற்றவராக இருந்தும் கொடைமனம் வாய்ந்தவரே செல்வர். உள்ளத்தின்

பெருமையும் சிறுமையுமே அவர்க்குச் செல்வமும் வறுமையுமாக இருந்தன.

" இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே " என மதுரைக்குமரனுர் வள்ளலின் நிலைமையைக் கூறுமிடத்து 'வறுமை' என்னுது சிறுமை என்றதும் கருதத்தக்கது. பெருஞ்செல்வராகஇருந்தும் விருந்தோம்பல் இல்லாதவரை வறியவர் என்றே திருவள்ளுவர் கருதுகின்ருர். அவர்தம் செல்வத்தை வறுமையாகவே கொள்கின்ருர். " உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை" என்பது வாய்மொழி. நல்லார்கண் தோன்றிய வறுமை அத்துணைக் கொடியது அன்று, கல்லார்கண் தோன்றிய செல்வமே கொடியது என்று அவர் கூறுதலும் காண்க.

*நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னுதே*
*கல்லார்கண் பட்ட திரு.*

நல்லவர் உற்ற வறுமையை வறுமை என்றுதிருவள்ளுவர் கூற இசைகின்ருர் அல்லர்; கடமை செய்ய இயலாமை என்றே கூறுகின்ருர்.

*நயனுடையார் நல்கூந்தார் ஆதல் செயும்நீர*
*செய்யா(து) அமைகலா வாறு.*

கலைஞர்க்கு உதவும் கடமையைச் செய்யாது அமையும் நிலைமை தோயன்மாறனிடம் இல்லை; ஆதலின் அவனை நல்குரவு அணுகவில்லை. செல்வமின்மை பற்றிக் கவலையுருமல், " என் கடமை செய்வேன்—செயும் நீர செய்திடுவேன்; செய்யாது அமைகலேன். வேல் வடித்துக் கொடுக்க" எனக் கொல்லனை இரந்த உரவோனை வறியவன் என்று கூறப் புலவர் நா எழவில்லை; இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே என்று அமைந்தது.

குமணன் புகழ்பெற்ற கொடையாளி. பாரி முதலிய வள்ளல் எழுவரும் மாய்ந்த பின்னர், தமிழகம் வாழத் தண்ணளி செய்தவன். அத்தகைய சான்ரோனுடன் பிறந்த தம்பி இளங்குமணன் சூழ்ச்சி சில செய்து தமையனுக்கு இடர் இழைத்தான். தமையன் ஆண்டுவந்த நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். தன் ஆட்சிக்கு இடையூறு நேராவண்ணம் தமையனையும் காட்டிற்குத் துரத்தினன். கைவண்மை மிக்க குமணன் செல்வமெல்லாம் இழந்து காட்டில் ஒதுங்கி வாழ்ந்துவந்தான். அந்நிலையில் குமணன் கை வண்மை மாறி வறுமை உற்றது. ஆயினும், அவனுக்கு இயல்பாய கொடைவன்மை அவனைவிட்டு நீங்கவில்லை. காரணம் என்ன ? குமணன் பொருள் இழந் தானே அன்றி, அதனினும் சிறந்த உடலும் ஆவியும் இழந்திலன். உடல் பொருள் ஆவி என்னும் முத்திறச் செல்வத்துள் பொருள் என்னும் ஒன்று இழந்தானே அன்றி ஏனை இரண்டும் இன்னும் இழந்திலன். ஆதலின் வாழ்வு உள்ள வரையிலும் வண்மை மாருத நிலையில் குமணன் இருந்தான்.

இந்நிலையில் குமணன் காட்டில் இருந்த காலத்திலும் புலவர் மனம் அவனை நாடிற்று. வண்மை மிக்க கையின் சுவை கண்ட புலவர் மனம் மீண்டும் அச் சுவை நாடுதல் இயல்பு. அன்றியும், தம்மை வறுமை விடாது நெருங்கி அடர்க்கும்போது, வள்ளல் ஒருவனை நெருங்கிடும் உரிமை அக்காலப் புலவர்க்கு அமைந்திருந்தது. பெருந் தலைச் சாத்தனர் என்னும் புலவர் அத்தகைய வறுமையும் உரிமையும் உடையவராய்க் காட்டில் வாழ்ந்த குமணனை அணுகினர். அப் புலவரது வறுமை நினைக்கவும் கொடியதாக இருந்தது. அவர் தம் மனைவியின் துன்பமே அவரைக் காட்டிற்குத் துரத்தியது. மனைவியின் துன்பம் எத்தகையது ? இல்லின்கண் உள்ள அடுப்பு அதற்கு

உரிய சமையலை மறந்து நாள் பல ஆயின. அடுப்பில் ஆம்பி (காளான்) பூக்கும் நிலையும் வந்துற்றது. பசியின் ஆட்சி பெருகிற்று. அந்த ஆட்சியின் கொடுமை இளங் குழந்தையையும் விடவில்லை. தாய்மார்பின் பால் வற்றவே வீணில் சுவைத்துச் சுவைத்துப் பால்பெறுமல் குழந்தை அழுதது. அவ்வாறு அழுத குழந்தையின் முகத்தை நோக்கி நோக்கித் தாய் கண்ணீர் கலங்கிக் கசிந்து அழுதாள். அந்தத்தாயின் துன்பமே தந்தையாம் புலவரைக் குமணன் இருந்த காட்டிற்குத் துரத்தியது.

*ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்*
*ஆம்பி பூப்பத் தேம்புபசி உழவாப்*
*பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி*
*இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை*
*சுவைத்தொறு அழூஉந்தன் மகத்துமுகம் நோக்கி*
*நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண்என்*
*மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ*
*நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண!* (புறம். 164)

என அப்புலவரே தம் நிலையைக் குமணனுக்கு உணர்த்தலானர்.

புலவரைக் கண்டு அவர்தம் நிலையினை உணர்ந்ததும் குமணனது நெஞ்சத்தில் எழுந்த எண்ணம் என்ன? “நாடு இழந்தேன்; அஃது எனக்குத் துன்பமாகத் தோன்றவில்லை, புலவர் வாட்டமே என்னைத் துன்புறுத்து கின்றது. நாடு இழந்தும் உயிர் வாழ்கின்றேன். ஆயின், புலவர் வாடிய நிலையில் திரும்பிச் செல்வாராயின், யான் எவ்வாறு உயிர்வாழ வல்லேன்?” என எண்ணினன். உடனே, தன்னிடம் உடல் ஒரு செல்வமாய் விளங்குவ தாய்க் கண்டான்; தம்பியின் வன்னெஞ்சம் தன் தலைக்கு விலைமதிப்பு அளித்திருத்தலையும் உணர்ந்தான். தனது

வாளை எடுத்துப் புலவர் கையில் தந்து, "புலவர் பெரும! என் தலையைக் கொண்டுவருவோர்க்குப் பெரும்பரிசில் நல்குவதாகத் தம்பி அறிவித்துள்ளான். என் நல்ல பேறு போலும்! என் தலைக்கு உள்ள விலைமதிப்பால் உமக்குப் பரிசில் நல்கும் வாய்ப்பு இன்னும் பெற்றுள்ளேன். என் தலையே உமக்குப் பரிசில், இதோ வாள்! தலையைத் துணிக்க; பரிசில் பெறுக; என் துன்பம் தீர்க்க" என்றான்.

புலவர் வியந்து நின்றார். "புலவர் மரபைப் போற்றும் வள்ளலின் உயிர் வாழ்வினும் என் ஒரு வாழ்வு சிறந்ததோ? குமணனைவிடச் சிறந்ததாக யான் இவ்வுலகத்தில் பெறத்தக்க பிறிதுபொருள் உளதோ?" என எண்ணினார். "யான் குமணனையே பெற்றேன். ஆதலின் மகிழ்ச்சியும் உற்றேன்; வெற்றியும் உற்றேன்" என இளங்குமணனிடம் சென்று, "அண்ணனைக் கண்டேன்; அவன் நிலை இன்னது" எனத் தெரிவித்துக் குமணன் தந்த வாளையும் காட்டி, நல்லறிவு கொளுத்தினார்.

*கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்*
*பாடி நின்றனென் ஆகக், கொன்னே*
*பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்என்*
*நா(டு)இழந் ததனினும் நனி இன் னாதென*
*வாள்தந் தனனே தலைஎனக்(கு) ஈயத்*
*தன்னின் சிறந்தது பிறிதொன்(று) இன்மையின்*
*ஆடுமலி உவகையொடு வருவல்*
*ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.* (புறம். 165)

தன் உரிமையான நாட்டை இழந்த வறுமை கொடியதெனக் கொள்ளாமல் கலைஞர் வாட்டத்தைத் தீர்க்க முடியாமையே மிகக் கொடியது எனக் கருதிய நெஞ்சம் குமணனிடம் இருந்தது. பரிசிலன் வாடிப் பெயர்தல் நாடு இழந்ததைவிட இன்னாது, நனி இன்னாது எனக் கருதிய

நெஞ்சம் தன் உயிர் வாழ்வையும் தலையையும் பொருட் படுத்தாத வீறு எய்தியது.

பெருந்தலைச் சாத்தனர் தம் வறுமையைப் போக்க வேறு ஒருவனிடம் சென்று பொருள் கேட்டிருக்கலாம்; தமிழ் நாட்டு மூவேந்தருள் ஒருவனிடம் சென்று பரிசில் கேட்டிருக்கலாம். ஆயின், அவர் அவ்வாறு செய்ய வில்லை. காரணம், அவர் மனம் வெறுஞ் செல்வம் பெற் றவரை நாடவில்லை. பொருள்வளத்தோடு கலையுளம் பெற்றவரையே அவர் நாடினர். "நிறைந்த செல்வம் பெற்றவரான மூவேந்தரே ஆயினும் அன்பு இன்றி ஈயும் பரிசு எமக்கு வேண்டா" என இப் புலவரே கடிய நெடு வேட்டுவன் என்னும் ஒருவனுக்கு அறிவித்துள்ளார்.

*முற்றிய திருவின் மூவர் ஆயினும்*
*பெட்பின்(று) ஈதல் யாம்வேண் டலமே.* (புறம். 205)

குமணனை இப் புலவர் பாடும்போதும், கலைஞரைப் போற்றும் குடிச் சிறப்பையே எடுத்துரைத்ததும் கருதத் தக்கது.

*பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்*
*மண்ணமை முழுவின் வயிரியர்*
*இன்மை தீர்க்கும் குடிப்பிறந் தோயே.* (புறம்.164)

இத்தகைய குடிப்பண்பையே—கலைஞரின் வறுமை தீர்த்தலைக் கடமையாகக் கொண்ட அரும் பண் பையே புலவர் நினைந்து சென்றார். "மனையோள் எவ் வம் நோக்கி, நினைஇ நிற்படர்ந்திசினே" எனக் கூறும் தொடர்களில் இந் நினைப்பே நிலவுகின்றது. ஆதலின், அப் புலவர், குமணன் காடுநோக்கிய பின்னரும் விடாமல் அவனுடைய கைவண்மை நோக்கிச் சென்றார்.

கொடுப்பவர் பண்பு நோக்காமல் அவர் கொடுத்தன கொண்டு செல்வாரும் அக்காலத்து இருந்தனர் போலும்! அத்தகையாரோடு பெருந்தலைச்சாத்தனாரையும் சேர்த்து எண்ணுதல் ஆகாது. அவ்வாறு கொடுப்பவரின் பண்பு நோக்காமல், அவர் கொடுக்கும் பொருளே பெரிதெனக் கொள்வாரை வாணிகப் பரிசிலர் என்று பெருஞ் சித்திரனார் என்னும் பெருமிதப் புலவர் எள்ளினார். அவர் அதியமான் நெடுமான் அஞ்சியிடம் சென்றபோது, அவன் அவரைக் காணாது பரிசில்மட்டும் கொடுத்தனுப்பினான். அப் பரிசிலைப் புலவர்தம் பெருமித நெஞ்சம் ஏற்காமல் இகழ்ந்தது.

......என்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா(து) ஈத்த இப்பொருட்(கு) யான்ஓர்
வாணிகப் பரிசிலன் அல்லேன் (புறம். 208)

என்று தந்த பரிசிலை மறுத்துவிட்டார். அவர் கொடுத்ததைப் பரிசில் எனக் கூறவும் மனமின்றிப் 'பொருள்' என்றார். "பெரும் பரிசிலும் வேண்டேம். எம் பண்பு தெரிந்து கொடுப்பாராயின், தினையளவே ஆயினும் அதனை இனிதாக ஏற்பேம்" என்றும் உரைத்தார்.

......பேணித்
தினையனைத்(து) ஆயினும் இனி(து)அவர்
துணையள(வு) அறிந்து நல்கினர் விடினே.

இப் பெருமிதப் புலவரும் வறுமைத் துன்பம் துரத்த வாடி வருந்திக் குமணனிடம் சென்றார். புலவர் பெரு மகனார் சென்றபோது குமணன் நாடு இழந்து காட்டில் ஒதுங்கி யிருக்கவில்லை. அவ் வள்ளல் அரச செல்வத்திடையே நாட்டில் விளங்கிய காலம் அது. அப் போது சென்ற புலவர்தம் வறுமை மிகக் கொடிய

வறுமை. "என் உயிர் போகவில்லையே!" என வாழ்வை வெறுத்த சொல்லோடு கோல் காலாக முன்றிலில் முதிய தாய் வருந்திக் கிடந்தாள். துணைவியோ மக்கள் பலர் பசித்துத் தன்னைச் சூழ அழுக்கேறிய கந்தல் உடுத்து உண்ணாமல் வாடியிருந்து 'அந்த அறக் கடவுளுக்குக் கண் இல்லையோ?' எனப் பழித்து வருந்தினாள். சமைக்க அரிசி இல்லா வறுமையால், குப்பைக் கீரையைக் கொய்து கொய்து அதனிடத்திலும் இலை இல்லை யாயிற்று. ஆயினும், புதிதாக விடும் இளந் தளிரும் விடாது கொய்து வேக வைத்து வெறுங் கீரை உண்ணும் வாழ்வே அவ் வீட்டில் இருந்தது. கலைச் செல்வம் நல்கி உலகைக் காக்கும் புலவர்தம் வயிறோ, சோற்றுப் பருக்கை புகுதலறியாது வாடியது. உடலோ பசி தின்னத் தின்னத் தோல் திரைந்து மெலிந்தது. புலவர்தம் குழந்தைச் சிறுமகனோ, பல முறை சுவைத்தும் தாய்ப்பால் காணாது ஏமாந்து, "அம்மா கூழ்! அம்மா சோறு!" எனப் பிற உணவு கேட்டுக்கேட்டுத் தாயை வருத்தினான். சமையல்அறையில் தானேசென்று, கலம்திறந்து நோக்கிஅஃது உணவு இன்றி வறுங்கலமாய் இருக்கக் கண்டு அழுதான். அவனது அழுகையைப் போக்க அத்தாய், "அதோ புலிவருகின்றது" என அச்சுறுத்தியும், "அப்பா, அதோ பார் அழகான நிலா" என மகிழ்வூட்டியும் அழுகையை நிறுத்த முடியாது கலங்கினாள். வேறு வழி இல்லாமையால், "உன் அப்பா மூஞ்சி எப்படி, காட்டு" எனக் கேட்டு அவன் நினைவை மாற்ற முயன்று அல்லல் உழந்தாள். இவ்வாறே பல நாள் கழிந்தன. இந் நிலையில் வறுமை துரத்தாமல் வாளா இருக்குமோ? பெருமிதப் புலவர் வள்ளலிடம் செல்ல நேர்ந்தது. சென்ற பின்னர் அவர் வேண்டியது என்ன? வாணிகப் பரிசில் அன்று.

**காண(து) ஈத்த இப்பொருட்(கு) யான்ஓர்**
**வாணிகப் பரிசிலன் அல்லேன்** (புறம். 208)

என மறுத்த பெருமிதம் அவரை விட்டு நீங்கவில்லை. வறுமை மிகுதி அப் பண்பை மாற்ற வலியற்றதுஆயிற்று. "குமண! நீ பெருங் களிறுதரினும் அன்புஇன்றிக் காலந் தாழ்த்துத்தரின் அதனைக் கொள்ளேன். நீ மனம்மகிழ்ந்து கொடுப்பாயாகில், சிறிய குன்றிமணி யாயினும் இனிய பரிசிலாக ஏற்றுக்கொண்டு மகிழ்வேன்' என்றார்.

உயர்ந்தேந்து மருப்பின் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் உவந்துநீ
இன்புற விடுதி ஆயின் சிறிது
குன்றியும் கொள்வல் கூர்வேல் குமண! (புறம். 159.)

குமணனிடம் அன்பும் இன்சொல்லும் இருத்தலை உணர்ந்ததும் பெருஞ்சித்திரனார் தம் வேட்கையை மறைக்காமல் எடுத்துரைத்தார். தம் துணைவியின் நிலை இத் தகையது எனத் தெரிவித்து, "அவ்வாறு அருந்துயர் உழக்கும் அவள் மருளுமாறு நீ பரிசில் நல்கல் வேண்டும். பனை போன்ற நெடுந் துதிக்கை, முத்துத் தோன்ற முதிர்ந்த கொம்புகள், மலை போன்ற பெருந் தோற்றம், பொன்னால்ஆகி ஒளி வீசும் நெற்றிப் பட்டம், இருபாலும் இரட்டும் மணிகள் இவற்றினை அவள் கண்டு மருளு மாறு, பெரிய வலிய களிற்றின் மீது யான் ஏறிச் செம் மாந்து செல்லல் வேண்டும். அக் காட்சியை அவள் கண் டால்தான் துன்பம் தீர்வாள். அத்தகைய பரிசில் கொடு" எனக் கேட்டார்.

கண்பொறி போகிய கசிவொடு உரன்அழிந்(து)
அருந்துயர் உழக்கும்என் பெருந்துன் புறுவிநின்
தாள்படு செல்வம் காண்தொறும் மருளப்
பனைமருள் தடக்கையொடு முத்துப்பட முற்றிய
உயர்மருப் பேந்திய வரைமருள் நோன்பக(டு)
ஒளிதிகழ் ஓடை பொலிய மருங்கின்

*படுமணி இரட்ட ஏறிச் செம்மாந்து*
*செலல்நசை யுற்றனென் விறல்மிகு குருசில்.!*

(புறம். 161)

பெரிய யானையைப் பரிசிலாகப் பெற்று அதன்மீது படுமணி இரட்டச் செம்மாந்து செல்லும் வாய்ப்பையும் பெற்ற பெருஞ்சித்திரனார் இதற்குமுன் தகுதியற்ற ஓரிடத்தில் பரிசில் கேட்டு வருந்தி மீண்டார். அவர் வெளிமான் என்னும் தலைவனிடம் சென்றபோது, அவன் உறங்கப் புகுவானாய்த் தம்பியைப் பரிசில் கொடுக்கப் பணித்தான். தம்பியோ, பொருளின் அருமையைக் கருத்தில் இருத்திச் சிறியதொரு பொருளைப் பரிசிலாகக் கொடுத்தான். பெருஞ்சித்திரனார் அதனைக்கொள்ளாது வெறுத்து வந்தார். குமணனிடம் தாம் வேட்டவாறு களிறு பெற்றதும், அதனை நேரே தம் துணைவியிடம் கொண்டு செல்லாது, வறுமை களையும் நோக்கத்தினும் பெருமிதம் காக்கும் நோக்கம் மிக்கவராய், வெளிமானிடம் செலுத்திச் சென்றார். வெளிமானது ஊரில் இருந்த கடிமரத்தில் அதனைக் கட்டி அவனிடம் சென்று, "ஐய, நீ ஒருவனே புரவலனோ? அல்லை, இரப்பவரைப் புரப்பதற்கு உலகில் பலர் உள்ளனர். இரவலர் உலகில் உள்ளது போலவே, அவர்க்கு ஈயும் புரவலரும் உள்ளனர். அதனை உணர வேண்டுமாயின், வெளியே வந்து உன் கடிமரத்தைக் காண்பாயாக. அதனிடம் பிணித்துள்ள நெடுநல் யானை யாம் பரிசிலாகப் பெற்றது என உணர்வாயாக" என்று இடித்துரைத்தார்.

*இரவலர் புரவலர் நீயும் அல்லை ;*
*புரவலர் இரவலர்க்(கு) இல்லையும் அல்லர்;*
*இரவலர் உண்மையும் காண் இனி ; இரவலர்க்(கு)*
*ஈவோர் உண்மையும் காண் இனி ; நின்ஊர்க்*
*கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த*

நெடுநல் யானைஎம் பரிசில் ;
கடுமான் தோன்றல் ! செல்வல் யானே. (புறம். 162)

இத்தகைய புலவர்தம் வறுமையைத் துடைத்து அவர்தம் கலையுணர்வு குன்றாதவாறும் பெருமித வாழ்வு மங்காதவாறும் அரிய பரிசில் பல நல்கிக் காத்தவன் குமணன். புலவர் வறுமையைப் பொருட்படுத்தி வாணிகப் பரிசிலர் ஆகாமைபோலவே, குமணன் போன்ற புரவலரும் நல்குரவு உற்றபோதும் வன்னெஞ்சர் ஆகவில்லை; இயன்ற கடமையைத் தளராது செய்தே வந்தனர். நாடு இழந்ததைவிட வாடும் புலவரின் வறுமையைக் காண்பதே கொடியது எனக் கருதித் தலை துணிக்க வாள் தந்த குமணன் வண்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்கினான். அவன் வண்மையினைத் தலைவண்மை எனலாம். புலவர்தம் கலைவன்மையைவாழச்செய்தது அத்தகைய கைவண்மையே ஆகும்.

# வயிற்றுக் கவலை

புலவர் பலர் வறுமையுற்று வாடும் வாழ்வினராக இருந்திருக்கின்றனர். அதன் காரணம் என்ன? சிலவற்றைக் காரணம் எனக் கூறலாம்.

புலமை என்பது உயர்ந்த உணர்வு. ஆழ்ந்த எண்ணங்களின் முதிர்வே உணர்வு. எண்ணம் பெருகப் பெருகச் செயல் குறையும். எண்ணுந் தொழிலுக்கே காலம் போதாது ஏங்குபவர் புலவர். அத்தகையவர் செய்யுந் தொழிலுக்குக் காலத்தைச் செலவிட வல்லவர் அல்லர். தங்கால்பொற்கொல்லன் வெண்ணாகனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைக் கொல்லன் புல்லனார், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் முதலாய ஒரு சிலர் சில தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என அவர்தம் பெயரால் அறிதல் கூடும். அவரும் இளமையில் அத்தொழிலினராக இருந்து, பிறகு புலமை பெற்றதும் தொழில் விடுத்திருத்தல் கூடும். தொழிலும் கடமையும் உயர்ந்து பறக்கும் எண்ணங்களைத் தடுத்துப் புலமைக்கு ஒருவாறு ஊறு செய்யும்போது, புலமையின்பம் கண்ட புலவர் தொழிலை விடுதற்குத் தயங்கார். எனவே, புலவர் பலர் கலைக் கனவில் காலங் கழிப்பர். அத்தகையாரை அரசியல் தலைவர் அறிந்து மதித்து அவர்க்குக் கவலை தோன்றாவாறு திங்கள்தோறும் அல்லது ஆண்டுதோறும் பெரும்பொருள் தந்து வாழ்வித்தல் வேண்டும்.

அரசியலோ அத்தகைய அமைப்புக்களை அக்காலத்தில் பெற்றிருக்கவில்லை. உலகத்துச் செல்வம் மக்கள் அனைவர்க்கும் பொது என்னும் கொள்கை நிலைபெறும் பேரரசே அத்தகைய அமைப்புக்களைப் பெற வல்லதாகும். "வண்மை இல்லையோர் வறுமை இன்மையால்," "கொள்வார் இலாமையின் கொடுப்பாரும் இல்லை மாதோ" என்றெல்லாம் முரசறையும் நல்லாட்சியில்தான் நல்லமைப்பு நிலவும். தாள்கொண்டு உழைப்பவனும் தோள்கொண்டு உழைப்பவனும் அறிவு கொண்டு ஆராய்ந்து எழுதுபவனும் உணர்வு கொண்டு உயரப் பறப்பவனும் ஆகிய அனைவரும் நாட்டுக்குஉழைத்துநலஞ்செய்வோரே என்னும்உண்மைக் கொள்கை அத்தகைய அரசியலில் நிலவும்; அவரவரால் இயன்ற உதவியைப் பெறுவதை இரண்டாவதாக வைத்து, அவரவர்க்கு வேண்டும் வாழ்பொருள் உதவும் கடமையை முதலாவதாக அரசியலார் மதித்தல் இயலும். அன்று, புலவர் வறுமை என்பது மக்கள் கருத்திற்கு எட்டாத கற்பனையாக—பழங் கதையாக — வெறுஞ் சொல்லாக நின்றிடும். அதுவரையில்,புலவர் உலகத்திற்கு இன்றியமையாதவர் என்பதை அரசியல் உணராது; தலைவர் சிலர் உணரலாம்; அவ்வளவே கூடும். அதுவரையில் புலவர் கவலையற்று வாழ்பொருள் பெற அரசியல் உதவாது; வள்ளல் சிலர் உதவலாம்; அவ்வளவே கூடும். ஆதலின், அந்நாள் வரையில் புலவர்பலர் வறுமையால் வாடுதல் இயல்பே ஆகும்.

இரண்டாம் காரணம் வருமாறு :—

பழந் தமிழ்நாடு புலவர் வறுமையைக் கண்ட நாடு ஆயினும், புரவலர் வண்மையையும் அந் நாடு கண்டது. அதுவே நாகரிகம் வாழக் காரணமாக இருந்தது. புலவர் வறுமை புரவலர் நெஞ்சைக் கொல்லும் அளவுக்கு நாகரிகம் வளர்ந்திருந்தது.

வறுமை மிக்க புலவர் பலரிடையே, "வெய்து உண்ட வியர்ப்பு அல்லது செய்தொழிலான் வியர்ப்பு அறியேம்' என்னும் செல்வ வாழ்வைப் புலவர் சிலர் உற்ற காட்சியும் காண்கின்றோம். அவர் அந்நிலை உறுமாறு ஆளுதலே ஆட்சி என்று கருதி, "எதுவும் வறுமை அன்று; புலவர் பாடாதுஎன் நாட்டை விட்டு நீங்குதலே வறுமை" என்று உணர்ந்த புரவலரும் விளங்கியிருந்தமை காண்கின்றோம்.

எனினும், இயற்கை நல்கும் வளன் வாழ்வார் அனை வர்க்கும் பொதுஎன்னும் உண்மை உணராத உலகில் வறு மை நீங்குமோ? விளக்கு உள்ள இடமெல்லாம் அவ் விளக் கினடியே இருள் இருத்தல்போல், செல்வம் மிக்க இடம் எல்லாம் வறுமையும் உடன் உறைந்தது. விளக்கொளி மிக்கும் அடியிருள் குறைந்தும் இருத்தல் இயல்பு. விளக் கொளி சிறிதாயும் அடியிருள் பெரிதாயும் இருத்தலே பொருளுலகக் காட்சி. விளக்கின் இயல்பு ஒளியைப் பெருக்கி இருளைப் போக்குவதாகும். ஆயின், செல்வத்தின் இயல்பு, வண்மை ஒளியைச் சுருக்கி வறுமை இருளைப் பெருக்குதலாகும். நாகரிக வளர்ச்சி அந்நிலையை மாற்றி வண்மை ஒளியைப்பெருக்கி வறுமை இருளைச் சுருக்கவல்ல தாக உலகப் போக்கை மாற்றி வருகின்றது. இத்தகைய வளர்ச்சி பழந்தமிழ்நாடு பெற்றிருந்ததாகத் தெரிகின்றது.

"புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே" (புறம்.72

என்றுபாடிய மன்னவன் நெஞ்சம் இந் நாகரிகம் அரும்பிய நெஞ்சம் அன்றோ? வறுமைத் துன்பத்தால் இரப்பவர்க்கு ஈதல் இயலாத வாழ்வே இன்மை-வறுமை என்று உணர்ந்த உணர்வு சிறந்த நாகரிக உணர்வே அன்றோ?

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்

நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே (புறம். 189)

என்று பாடிய பெரும்புலவர் நக்கீரனார் நெஞ்சம் இந் நாகரிகம் மலர்ந்தநெஞ்சம் அன்றோ? ஒருகுடைக்கீழ்உலகாளும் மன்னனை ஒருபால் நோக்கி, இராப்பகலாக வேட்டைமீது மனம் செலுத்தும் வேட்டுவனை ஒருபால் நோக்கி, இருவர்க்கும் ஊணும் உடையும் பிறவும் ஒக்கும் எனக் கருதிய திருந்திய கருத்தினை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் புலவர் ஒருவர் தமிழகத்தில் கூறியுள்ளார் என எண்ணவும் வியப்பாக உள்ளது! ஆயின், அக்காலத்து அரசியல் விரிவுறாத ஒன்று ஆதலின், ஊணும் உடையும் பிறவும் அனைவர்க்கும் ஒக்கும் எனக் கருதிய பெருங் கருத்துப் பிறந்த காலமாக இருந்தும் பயன் பெரிதும் விளையாது போயிற்று. புலவர் நக்கீரனாரும், அதனை உணர்ந்தே செல்வரை நோக்கி அறிவுறுத்துவராய், "செல்வத்தின் பயன் ஈதல் ஒன்றே" என்றார். செல்வர் சிலராகவும் வறியவர் பலராவும் இருப்பினும் குறையில்லை. அச் சிலர் இப் பலர்க்கு உதவல் வேண்டும் எனச் சான்றோர் கருதினர் போலும்!

தமிழகம் இத்தகைய நாகரிக வளர்ச்சியைப் பெற்றிருந்தும், அறிஞர்க்குப் பொருட் கவலை தீரவில்லை. பெருஞ்சித்திரனார் என்ற புலவர் ஒருவர் வாழ்வே இதனை விளக்க அமையும். அவர் வாழ்ந்த வாழ்வு பெருமித வாழ்வு. பெற்ற பரிசில்களோ பெறற்கரிய பெரும் பரிசில்கள். ஆயினும், வறுமை அவரை விட்டு நீங்கவில்லை. காரணம் என்ன?

செல்வத்துப் பயனே ஈதல் எனப் பிறர்க்கு அறிவுறுத்தும் பேறு பெற்ற நக்கீரனுர் போன்றவர் செல்வம் பெற்றிருப்பின், அதனைப் பிறர்க்கு வழங்காது வைத்திருத்தல் ஒல்லுமோ? சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக வாழும் உணர்வற்ற வாழ்வு உண்மையுணர்வு மிக்க புலவரிடையே காணப்படுமோ? நக்கீரனுர் போன்றவர் பெற்ற பொருளைப் பல்லாண்டு பேணிப் பேழையில் வைத்துக் காக்கும் வலிமை அற்ற மெல்லியர். பெருஞ்சித்திரனுர் அக்குழுவில் சேர்ந்தவர் ஆவர்.

குமணனைப் பாடிப் பெரும் பரிசில் பெற்றுக் கொணர்ந்த பெருஞ்சித்திரனுர் தம் துணைவிக்குக் கூறியது என்ன? அதனைப் பல்லாண்டு போற்றி வறுமைப் பேயைக் கொல்லுமாறு கூறினுரோ? அல்லர். வல்லமையாக வாழுமாறு அறிவுறுத்தினுரோ? அல்லர். கணக்கு எழுதிவைக்குமாறும் தம்மைக் கேட்டுச் செலவழிக்குமாறும் உரைத்தாரோ? அல்லர். “உன்னை விரும்புவோர்க்கும் கொடு; நீ விரும்புவோர்க்கும் கொடு. உன் சுற்றத்தார்க்கும் கொடு. நம் பசிதீரப் பல நாள் கடனுகப் பொருள் கொடுத்தார்க்கும் கொடு. இன்னுர்க்கு என்று வரையறை செய்யாமல் கொடு. என்னைச் கேளாமல் கொடு. யானும் கொடுப்பேன். நீயும் கொடுப்பாயாக. எல்லார்க்கும் கொடு. வல்லவாறு—திறம்பட—வாழ்தலைப் பற்றி எண்ணுதே. இது வள்ளல் குமணன் நல்கிய வளம்” என்றுர்.

நின்நயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்(கு) என்னது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னது நீயும்

*எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே*
*பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்*
*திருந்துவேல் குமணன் நல்கிய வளனே.* (புறம் 163)

இத்தகைய புலவர்க்கு எத்துணைச் செல்வம் நல்கினும் வறுமை தொலையுமோ? பெற்றதை உடனே பகுத்தளிக்கும் நெஞ்சத்தினரிடம் செல்வந்தான் நிலைபெறுமோ? இதுவும் புலவர் வறுமைக்குக் காரணம் அன்றோ? "செல்வத்துப் பயனே ஈதல்" என்று உணர்ந்த பின்னர் அவரால் அதனை வைத்துக் காத்தல் இயலுமோ? ஆதலின், அப் புலவர்பெருமக்களுடைய வாழ்வில் வறுமை தலைகாட்டா வண்ணம் செய்தல் சிறந்த அரசியல் அமைப்பால் தான் இயலும்!

அந்த அரசியல் அமைப்பு எத்தகையதாக இருத்தல் வேண்டும்? "எல்லோர்க்கும் கொடுமதி" என்று புலவர் தம் துணைவிக்குக் கூற வழியற்ற காலமாக இருத்தல் வேண்டும்; அஃதாவது, புலவர் கொடுக்கும் பொருளைப் பெற எவர்க்கும் கையெழாத காலமாதல் வேண்டும்; எவர்க்கும் வேண்டும் பொருள் கிடைத்தலின், அந்நாடு, பசியெனல் அறியாப் பணைபயில் இருக்கை உடையதாய், வறுமை இல்லையாய்க் கொள்வார் ஒருவரும் இல்லாமையின் கொடுப்பாரும் இல்லையான நிலைமை உடையதாய் விளங்கல்வேண்டும். அந்நாள் வரும்வரையில் புலவரை வறுமை விடாது. புலவர் உணர்வும் செயலும் அத்தகையவை. சுற்றிலும் உள்ளவர் வயிறு காய, தம் வயிறு மட்டும் குளிரும் நிலையைப் புலவர் விரும்புதல் இல்லை. ஊரெல்லாம் பற்றி எரியத் தனியே இனிது அமர்ந்து இன்னிசை பாடும் கல்நெஞ்சக் களியாட்டு இப் புலவர் வாழ்வில் இல்லை. தம் இன்பம் உலக இன்பமாகுமாறு காமுறுதல் கல்விச் செல்வத் தளவில் மட்டுமன்றி, பொருட் செல்வத் தளவிலும் கொண்டவரே உண்மைப் புலமை உடையவர்.

ஆதலின், பெருஞ்சித்திரனார் போன்ற புலவர் எவ்வளவு பெறினும் வல்லாங்கு வாழாது வறுமையை வரவேற்றதில் வியப்பு இல்லை.

மூன்றும் காரணம் வருமாறு :—

அறிவு என்னும் ஒன்றே மக்கட் பிறப்பின் சிறப்பியல்பு. மக்களாய்ப் பிறந்தவர் அறிவைத் தேடி உழைத்தல்வேண்டும் ; அறிவைப் பிறர்க்கு அளித்தல் வேண்டும் ; அறிவின் பயனாய் இன்புறல் வேண்டும் ; இதுவே மக்களின் வாழ்வு. இவ் வாழ்வைச் சீர்பெற வாழ்பவரே புலவர் பெருமக்கள். உலகம் திருந்திய அரசியல் பெறுமாகில், மக்கள் அனைவரும் இத்தகைய அறிவு வாழ்க்கை வாழவல்லவர் ஆவர்.

ஆயின், உலகம் இன்னும் அந்நிலை எய்தவில்லை. ஆதலின், புலவர் அறிவு வாழ்க்கை வாழ, ஏனைய மக்கள் வயிற்று வாழ்க்கை நடத்தும் நிலை உள்ளது. வயிற்றுக் கவலை பொல்லாதது ; அது பிற நல்ல கவலைகளுக்கு இடம் தராதது. பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பது உண்மை மொழியே. இரவும் பகலும் வயிறு வயிறு என்று அதன் பொருட்டே உழலும் மக்கள், கலைஎன்றோ கடவுள் என்றோ எண்ணுதல் இயலுமோ ? ஈராயிரம் ஆண்டுகளாக உலகின் பல பகுதிகளிலும் பேரறிஞர் பலர் தோன்றி நல்லறம் எடுத்துரைத்தும் உலகம் பழைய நிலையிலேயே உள்ளது ; உலகில் பல நாடுகளிலும் அறநூல்கள் பல பெருகி உண்மையை எடுத்து விளக்குவனவாக அமைந்தும் உலகில் அறிவிலார் பலராகவே உள்ளனர். அடிப்படையான காரணம் ஒன்றே ; வயிற்றுக் கவலை உடைய மக்களின் தொகை குறையவில்லை; அறிவுக் கவலை பெருகவில்லை. ஆதலின் அறவோரும் அறநூல்களும் ஆற்றுற் தொண்டு அவ்வளவாகப் பயன்படவில்லை.

இன்றைக்கு வேண்டும் பொருள் தேடுவோர், நாளைக்கும் வேண்டுமெனத் தேடுவோர், நூறாண்டு வாழ உதவும் பொருள் தேடுவோர், தம் மக்களின் மக்களும் என்றென்றும் வாழ உதவும் பொருள் தேடுவோர் ஆகிய அனைவரும் வயிற்றுக் கவலை உடையவரே. நாளை வயிற்றுக்கு என் செய்வோம் என்ற கவலையே ஒருவன் மனத்தை மாற்றி அளவின்றிப் பொருள் திரட்டச் செய்கின்றது. அக் கவலையே பிறர்க்கு ஈயாது இவறும் வன்மையையும் தருகின்றது. ஆதலின், பொருட்செல்வம் மிக்கவர் அதனைக் காக்க முற்படுகின்றனர்.

புலவர் பெருமக்களும் ஒருவகைச் செல்வரே ஆவர். அவர் அறிவுச் செல்வத்தை மிகுதியாகப் பெற்றுள்ளவர். வறியவருக்கும் செல்வருக்கும் வேற்றுமை மிகுந்துள்ளது போலவே அறிவிலார்க்கும் அறிஞர்க்கும் வேற்றுமை மிகுந்துள்ளது. பொருள் சிலரிடம் திரண்டிருத்தல் போலவே, அறிவும் சிலரிடம் பெருகியுள்ளது. ஆதலின் பொருள்வகையால் சிறந்த செல்வர் போலவே, அறிவு வகையால் புலவர் சிறந்து விளங்குகின்றனர்.

பொருள் வகையால் செல்வராய்ச் சிலர் விளங்கக் காரணம் கொடைப்பண்பு இல்லாமையே. அவர் தம்மிடம் உள்ளதைப் பகுத்து வழங்குவராயின் செல்வராய் விளங்க இடமிராது. ஆயின், அறிவு வகையால் புலவர் சிலர் மட்டும் உயர்ந்தோராய் விளங்கக்காரணம் கொடைப் பண்பு இல்லாமை அன்று; கொள்ளும் பண்பு ஏனையோரிடம் இல்லாமையே ஆகும். பொருட் செல்வம் உடையவன் ஈயாது வைத்துக் காத்து இன்பம் உறலாம். அறிவு மிக்க புலவர் அவ்வாறு வைத்துக் காக்கவேண்டுமெனக் கனவிலும் கருதார்; அவ்வாறு செய்தல் துன்பத்தினும் துன்பமாக அவர் உணர்வர். அன்றியும் பிறர்க்குக் கொடுத்துக் கொடுத்து வளரும் இயல்பினது அறிவு.

ஆதலின், புலவர், கொள்வார் உளரோ, கொள்வார் உளரோ எனத் தம் அறிவை விலை கூறித் திரிவர் ; பாட்டு எழுதித் திரிவர் ; நூல் இயற்றித் திரிவர் ; உண்மையைப் பறைசாற்றித் திரிவர். ஆதலின், கொள்வார் இல்லாத குறையே அறிவுத்துறையில் இலர் பலராக இருத்தற்குக் காரணம். அறிவைக் கொள்வார் பலர் இல்லாமைக்குக் காரணம் அவரை அலைக்கும் வயிற்றுக் கவலையே ஆகும். வயிற்றுக் கவலை உள்ளவரையில் அறவோரின் தொண்டும் பயன்படாது ; அறநூல்களின் விளக்கமும் பயன்படாது ; புலவர் வாரி வழங்குவன ஏற்பாரின்றி ஏங்கிக் கிடக்கும்.

எனவே, வாரிக் கொள்ள மனமின்றி அறிவுச் செல்வத்தைப் புறக்கணிக்கும் ஏனை மக்களையே குற்றம் எல்லாம் சாரும். அம் மக்கள் கொடைப்பண்பு இல்லாத செல்வரை விடாது சென்று நாடுகின்றனர் ; பயன் சிறிது பெற்றும்பெருதும் ஏமாற்றம் உறுகின்றனர்; மீண்டும் மீண்டும் அச் செல்வரையே நாடுகின்றனர். அவ்வாறு அறிவுச் செல்வரான புலவரை மக்கள் நாடுதல் இல்லை. நாடியிருப்பின் உலகம் திருந்தியிருக்கும். புலவரே வலிய முந்துற்று உதவிய காலத்து மக்கள் அவர் உதவியை விரும்பி நிற்றலும் அமையும் ; அதுவும் காண்பது அரிது.

உலகில் உயிர் வாழ்வதற்கு உரிய ஊண் உடை முதலியவற்றைத் தம் உழைப்பால் நல்குவோர் இப் பொது மக்களே. அவர்தம் உழைப்பைப் பொருட் செல்வர் பெறுகின்றனர் ; பெற்று இனிது வாழ்கின்றனர். ஆயின், அவர்தம் உழைப்பின் பயன் அறிவுச் செல்வராய புலவர்க்குக் கிட்டுதல் இல்லை ; கிட்டாமையால் புலவர் வறியவராய் வாழ்கின்றனர்.

உலகம் கொள்ளல் கொடுத்தலாய் அமைந்தது. கொல்லன் கருவிகள் செய்து தருதலால், உழவன் அவ

[stamp]

னுக்கு நெல்லும் வரகும் விளைத்துத் தருகின்றான். பின்னவன் உணவிற்கு உரியன தருவான் என்று எதிர் நோக்கியே முன்னவன் உழவிற்கு உரியன உதவுகின்றான். நாட்டில் குழப்பம் விளைக்காமல் ஆள்வான் என்றே குடிகள் அரசனுக்கு இறை இறுக்கின்றனர். குடிகள் ஆறிலொன்று தருவர் என்றே தலைவன் ஆளும் பொறுப்பை ஏற்று நடத்துகின்றான். இதுவே உலகியல். செல்வரிடம் பொருளுதவி எதிர்நோக்கியே வறியவர் உழைத்து உதவுகின்றனர். ஆயின் அவர் புலவரிடம் எதிர்பார்க்கும் பொருள் உளதோ? புலவரிடம் உள்ள அறிவு எவர்க்குப் பயன்படும்? வயிற்றுக் கவலை அற்றவர்க்கு அல்லது அதனைக் கடந்தவர்க்கு மட்டுமே அறிவு பயன்படும்; அவர்க்கே அஃது இன்பமும் தரும். வயிற்றுக் கவலை உடையவர்களோ அறிவுப்பசி எழாமல் தேய்கின்றனர்; ஒருவகைச் செல்வரை அணுகி உதவி, மற்றொருவகைச் செல்வரைத் துறந்து ஒதுங்குகின்றனர்.

உழைப்பவர்க்கு ஒருவர் உதவியும் வேண்டுவதில்லை. அவர்தம் உழைப்பே அவர்க்கு உதவ வல்லது. உழைக்கும் ஆற்றல் உள்ள வரையில் அவர் வயிற்றுக் கவலை துறந்து வாழலாம். ஆயின், அவ் வுண்மையை உணரும் ஆற்றலும் அவர்க்கு இல்லை. அவ் வாற்றலை அளிக்க வல்ல புலவரை நாடும் மனமும் அவர்க்கு இல்லை. தம் உழைப்புக்கும் உழைப்பின் பயனுக்கும் இடையே நிற்கும் சிலரை நாடும் அறியாமையே அவர்க்கு உள்ளது. அதன் விளைவோ பொல்லாதது. இறுமாந்து வாழ்வதற்கு உரிய உழைப்பாளிகள் வறியவர்களாய் ஏங்கி வாழ்தலாயிற்று; அறிவைத் தேடி அறிவால் இன்புறும் பிறப்பு, வயிறே நோக்கமாகக் கொண்டு பிறழ்தலாயிற்று; அறிவை அளிக்கும் பெருங் கொடையாளிகளான புலவரைப் புறக்

கணித்தலாயிற்று. முடிவில் புலவர் வறுமையால் வாடல் இயல்பாயிற்று.

உழைப்பாளிகளின் வயிற்றுக் கவலையை அரசியல் அமைப்பு ஒன்றே மாற்ற வல்லது. அரசியல் அமைப்பால் அத்தகைய மாறுதல் நேரத் தொடங்கியதும், உழைப்பாளிகளிடையே விழிப்பும் உரிமை உணர்வும் எழுதல் காணலாம்; அவர் செல்வரை விடுத்துப் புலவரைப் போற்றுதலும் காணலாம். அறிவு மக்கட் பிறப்பின் சிறப்பியல்பு அன்றோ? ஆதலின், வயிற்றுக் கவலை அகன்ற பின்னர் அறிவு நாட்டம் தானே வந்து அமையும். அதுவரையில் புலவர்வாழ்வில் வறுமை இடம் பெறுதல் இயல்பு.

எனவே, புலவர் வறுமைக்கு இம் மூன்று பெரிய காரணம் கண்டோம். ஒன்று, புலவர் உழைத்துப் பொருள் தேடுவதில் காலம் கழிக்காமல், எண்ணி எண்ணிப் புலமை தேடி வாழ்ந்த வாழ்வு. இரண்டு, அவர் தம் வாழ்வின் பெருமை உணர்ந்த புரவலர் சிலர் பெரும் பொருள் நல்கினும் அதனை வைத்துக் காக்கும் வன்னெஞ்சம் இன்றி ஈத்து உவந்த எளிமை. மூன்று, புலவரால் தமக்கு விளையும் நன்மையை உணர ஆற்றலின்றி, வரவு செலவு நோக்கிப் பயனின்மை கருதி அவரைப் புறக்கணித்த பொது மக்களின் வயிற்றுக் கவலை.

இம் மூன்றனுள், முன்னவை இரண்டும்—புலவர் பொருள் தேடாப் பெருமிதமும் கிடைத்த பொருளையும் காவாது ஈயும் பெரு வாழ்வும்—திருந்த முடியாதவை. அவை புலமையுணர்வோடு உடன் பிறந்த பண்புகள். அவற்றை மாற்ற முயலுதல், வித்தின் முளையைக் கீழ் நோக்கியும் வேரை மேல் நோக்கியும் மாற்றும் முயற்சிக்கு நிகரானது. ஆதலின், புலவர்தம் எண்ணும் ஆற்றல்

எழுந்தோங்கி உயர்வதைத் தடுக்க வல்லவர் இல்லை. அவர்தம் நெஞ்சம் எளியவரிடம் இரக்கமோடு இறங்கிப் பாய்தலைத் தடுக்க வல்லவருமில்லை. மூன்றாவதாக உள்ளது வயிற்றுக் கவலை. அஃதுஉலகமுழுவதையும் பிணித்த பிணி; அதனைத் தீர்த்தாலன்றி அறிவுக் கவலை எழாது. அறிவுக் கவலை எழும்நாளே புலவரை விடுத்து வறுமைப் பேய் அகலும் நாள்.

ஆதலின், அறமும் அறிவும் ஓங்காதவாறு பெருந் தடை செய்யும் வயிற்றுக் கவலையைக் கொன்று ஒழிக்கப் பழந் தமிழகத்தில் உணர்வு மிக்க உரவோர் பலர் முயன்றுள்ளனர். அவர் அரசியல் அமைப்புகளை மாற்ற முயன்றார் அல்லர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகம் அத்துணை அரசியல் முன்னேற்றம் பெறவில்லை என்றே கூறலாம்.

உலக வளர்ச்சி படிப்படியானது; முறையும் ஒழுங்கும் பெற்றது. இயற்கை யன்னை தந்தருளும் வளம் அனைவர்க்கும் பொது என்று உணரும் உணர்வு அரும்புவதற்கு முன் என்னென்ன நிகழ்ந்தன? உழைப்பின் பயன் எனக் கிடைத்ததை உரிமை யுடையவரும் சேர்த்து வைத்தனர்; உரிமை யில்லாதவரும் சேர்த்து வைத்தனர். இரு சாராருள் பின்னவரே நாளடைவில் வெற்றி பெற்றனர். முன்னவர் காலமெல்லாம் உழைப்பில் கழிக்க, பின்னவரோ சேர்த்து வைக்கும் முயற்சியில் காலம் போக்கித் திறமும் பெற்று வென்றனர். அவர்தம் தன்னலம் பல வகையாய் வளர்ந்து வந்தது. அவர் பெட்டியும் பேழையும் செய்து பூட்டும் தாழும் கொண்டனர்; காவல் முறை கண்டு கூலியாள் அமைத்தனர்; சட்டம் இயற்றி நிதிமுறை கண்டனர்; படையும் முடியும் படைத்து அரசைக் கைப்பற்றினர். ஆயின், இவற்றிற் கெல்லாம் இடங் கொடுத்து இடையூறும் படைத்துத் தடுத்து

வந்தாள் இயற்கையன்னை ; பெட்டியும் பேழையும் முதலான எல்லாம் பொருள் சேர்த்துக் காப்பதற்கு மாறாகக் கவலை சேர்த்துக் கொல்வன என்பதை மக்களுக்கு அறிவுறுத்தினாள் ; மணிமுடி சூடியவனே மாயாக் கவலையால் வாடியவன் என்று புலவர் பலர் வாயிலாகத் தெளிவித்தாள் ; தன்னலத்தால் பொருள் சேர்க்கும் அளவிற்குத் தன்னை அழிக்கும் கவலையும் சேரும் என்பதை அறிவுறுத்தினாள். இறுதியில், எல்லை காணும் நிலையில் பூசல் பல எழுப்பி நல்லறிவைக் கொளுத்தலாயினாள் ; போர் பல எழுப்பி அடிப்படையைத் திருத்தலாயினாள். உலகில் விளைவன உலகோர் அனைவர்க்கும் பொது என்னும் அறம் புத்துருக்கொண்டு புது நூல்கள் எழலாயின; புதுக் கொள்கைகள் பரவலாயின ; புதிய புதிய அமைப்புக்கள் அரசியலில் இடம் பெறலாயின.

தன்னலத்தை வெறுத்த பேச்சு இன்று ஒருவாறு நின்று, வேறு வடிவில் எழுகின்றது. உலகம் வாழ்ந்தால் அன்றித் தனி ஒருவனாக யான் வாழ்தல் இயலாது என்னும் உண்மையை அறியாதவன் அறிவின்மையால் தன்னைத் தானே அழித்துக் கொள்கின்றான் ; ஆதலின் அவனது தன்னலம் பயன்படாமல் தன்னையே அழிக்கின்றது என்னும் புதுக் கொள்கை எல்லாரையும் விழிக்கச் செய்துவிட்டது. இஃது அடிப்படை அற்ற தன்னலம், குருட்டுத் தன்னலம், பேதைத் தன்னலம், கண்மூடித் தன்னலம் என்பதை அனைவரும் அறியத் தொடங்கியுள்ளனர். இந்த ஈராயிர ஆண்டுகளின் வளர்ச்சியால் பெற்ற நல்லறிவு இது.

இதனை அப் பழங்காலத்திலேயே எதிர்பார்த்தல் கூடாது. ஆயினும், அக்காலத்தில் இதன் வித்துக் காணப்பட்டது எனலாம்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். (திருக்குறள்)

இம் மணி மொழிகளில் வறுமையைக் கொன்று வீழ்த்தும் வலிய படை விளங்கக் காணலாம்.

பெரும் புலவர் நக்கீரனார் மண் முழுதாளும் மன்னவனை ஒரு தட்டில் வைத்தும், ஒரு மூலையில் விலங்கு பார்த்து ஒதுங்கும் வேட்டுவனை மற்றொரு தட்டில் வைத்தும் நிறுத்து, ஊணும் உடையும் பிறவும் ஒக்கும் என உண்மை முடிபை எடுத்துரைத்த திறம் இப் பெரு நாகரிகத்தின் அருமுளையே அன்றோ? "இவர் போன்றார் அனைவரும் புலவர்; புலவர் இவ்வாறு அறிவுறுத்துதல் இயல்பே; அவரால் ஆவது யாது? அரசியலாளராகிய வேந்தர்க்கு இத்தகைய எண்ணம் அரும்பியது உண்டோ? அதுதான் போற்றத் தக்கது" என வினவலாம். பழந் தமிழ் அதற்கும் சான்று காட்டுகின்றது. புலவர்பால் பேரன்பு கொண்டு கைவண்மை காட்ட முந்திய அரசர் மரபில் புலமையுணர்வு குன்றியிருந்தது எனக் கூறல் தகுமோ? புலவர் உணர்ந்தது போன்றே புலவரைப் போற்றி உண்மை கண்ட புரவலரும் உணர்ந்திருந்தனர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தன் காலத்தில் புகழ் பெற்று விளங்கிய கொடையாளி—பசிப்பிணி மருத்துவன்—பண்ணன் என்பவனைக் காணச் சென்றான். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்ற அழகிய தொடரால் கொற்றங் கொற்றனார் என்ற புலவரால் பாராட்டப் பெற்றவன் இப் பண்ணன் என்ப

வன். இவனது சிறுகுடிக்குச் சோழன் சென்றபோது, அவன் கண்ட காட்சி அவனது உள்ளத்தை உருக்கியது.

பண்ணனது இருப்பிடத்திற்கு நெடுந் தொலைவில் இருந்தபோதே, பழம் மிக்க மரத்தில் பலவகைப் பறவைகளும் இருந்து ஒலித்தாற் போன்று உணவு பெறுவார் செய்யும் ஆரவார ஒலி கேட்டது. சிறிது அப்பால் சென்றதும், சிறுவர் பலர் சோற்றுத் திரளைக் கையில் ஏந்தி வேறு வேறாக நிரல் நிரலாகச் செல்லும் காட்சியைக் கண்டான். மழை வரும் என்று அஞ்சிச் சிற்றெறும்புகள் முட்டை எடுத்துக் கொண்டு மேட்டு நிலம் நாடிச் செல்லும் ஒழுங்குபோல் அது காணப்பட்டது. அச் சிறுவர் ஒழுங்கு வந்துகொண்டே இருந்ததே அன்றி நின்றது காணவில்லை. சிறுவர் மேன்மேலும் இடையறாது வந்துகொண்டிருந்தது கண்டு, சோழன் கிள்ளிவளவன், “பசி நோய்க்கு மருந்து நல்கும் பண்ணன் இல்லம் எங்கு உள்ளது? அண்மையிலோ, சேய்மையிலோ, இன்னும் இவ்வாறே நெடுந்தொலைவு சென்று காணவேண்டுமோ?” எனக் கேட்டான். பசித் துன்பத்தால் “வயிறே! வயிறே!” என்று வயிற்றுக் கவலையால் வாடும் மக்களின் நிலை அவனது உள்ளம் கசிந்துருகச் செய்தது. ஆதலின், அந் நிலையில் வாடும் மக்களிடையே இருந்து அவர்தம் துன்பந் தீர்க்கும் பசிப்பிணி மருத்துவனை நினைந்து நினைந்து வாழ்த்தலாயினன். பண்ணன் வாழ்க என்று வாளா வாழ்த்தினன் அல்லன். வெண்குடைக்கீழ் உலகாளும் வேந்தனாகிய தன்னைவிட அவ்வள்ளல் உதவி மிக்கவனாக நாட்டைப் புரத்தலை உணர்ந்தான். தான் வாழ்வதைவிட அவன் வாழ்தல் மிக்க நன்மையாம் என எண்ணினன். பண்ணன் அக் காலத்தில் முதுமையை அணுகும் வயது உடையவனாய் இருத்தலை நினைந்த சோழன், அவனது வாழ்நாள் நீள வேண்டுமே என்று

விழைந்து நின்றான். தன் வாழ்நாளில் எஞ்சிய பகுதி எல்லாம் பண்ணனே கொண்டு நெடிது வாழ்ந்து நாட்டிற்கு நலம் செய்ய வேண்டும் என வாழ்த்தினான்.

யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய !
பாணர் காண்கிவன் கடும்பின(து) இடும்பை !
யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந் தன்ன
ஊண்ஒலி அரவந் தானும் கேட்கும் ;
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறு நுண் எறும்பின் சில்ஒழுக்(கு) ஏய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ(று) இயங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும் ; கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும் ; தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே.
(புறம். 173)

வயிற்றுக் கவலையால் வாடும் மக்களின் துன்பத்தைப் போக்க ஒருவன் உழைப்பானாயின், அவனை வாழ்த்தி, அவ் வாழ்த்து உண்மை வாழ்த்தாக விளங்குமாறு தனக்கு உரிய வாழ்நாளை அவனுக்கு நல்கி, அவன் நெடுங் காலம் வாழுமாறு விழையும் நெஞ்சம் பெருநிலம் ஆளும் வேந்தனுக்கு இருந்தது. அஃது அக்காலத்து உணர்வின் விழுப்பத்தை விளக்குகின்றது அன்றோ ?

கிள்ளிவளவன் பிறந்த குடியிற் பிறந்த நல்லுருத்திரன் என்னும் சோழனும் இத்தகைய விழுமிய நோக்கங் கொண்டு தன் வாழ்நாளைக் குறித்து வேண்டியுள்ள கருத்து பழந்தமிழில் உள்ளது. அவ் வேந்தன், வள்ளல் ஒருவனைக் குறிக்காது பொதுவாக உலக மக்களை நோக்கி அவரை இருவகைப் படுத்தியுள்ளான். ஒரு வகையார் எலி போன்றவர் ; மற்றொரு வகையார் புலி போன்றவர்.

எலி தானாக உழைத்துப் பொருள் பெறாமல், பிறர் உழுது பயிரிடும் நிலத்தில் விளையுங் காலம் அறிந்து சென்று நெல் முதலியன கொணர்ந்து வளை நிறையச் சேர்த்துப் பிறர் கண்ணில் படாதவாறு காக்கும். எலி போன்றவரும் தாமாக உழைத்து உண்ணாமல், பிறர் உழைப்பால் கிடைக்கும் பொருளைச் சிறிது சிறிதாகச் சேர்த்துப் பெட்டியிலும் பேழையிலும் வைத்துப் பூட்டிப் பிறர் கண்ணில் படாதவாறு காப்பர்; அப் பொருள் பிறர்க்குப் பயன்படாத பொருளாகும். நாளைக்கு என் செய்வோம் என்ற கவலையே இம் மக்களை இவ்வாறு சேர்க்கத் தூண்டுவது. அஞ்சாமல் ஊக்கங்கொண்டு உழைத்துப் பொருள் தேடும் உரம் இல்லாக் குறையே இவ்வாறு நாளைக்கு என் செய்வோம் என்னும் கவலையை வளர்த்துவிடுவது.

புலியும் புலி போன்றவரும் வாழும் வாழ்வு வேறே. புலி இரை வேட்டு வெளிவரும்போது, பன்றி ஒன்று எதிர்ப்பட்டுத் தாக்குண்டால், அப் பன்றி இடப்பக்கத்தில் வீழ்ந்தால், அதனைத் தன் வெற்றியாகக் கொள்ளாமல், இதைவிட்டால் இனி என் செய்வேம் என்ற கவலையும் கொள்ளாமல் அப்பால் செல்லும். அன்றெல்லாம் உணவு கிடைக்காவிடினும் வாளா கிடக்கும். மறுநாள் பேரூக்கங் கொண்டு இரைவேட்டுப் புறப்பட்டுப் பெரிய களிறு எதிர்ப்பட்டபோது விடாது தாக்கித் தன் உணவாக்கிக் கொண்டு, வேண்டுமளவு தின்று எஞ்சியன அவ்விடத்திலேயே விட்டுச் செல்லும். புலிபோன்றவரும் சிறிதும் சோர்வு கொள்ளாமல் ஊக்கமே வடிவாய் உழைத்து உண்பர்; அவரால் பிறர்க்கும் பயன் உண்டாகுமாறு பெரு வாழ்வு வாழ்வர்.

இவ்வாறு மக்களை இருகூறுபடுத்திய சோழன் நல்லுருத்திரன், தன் வாழ்நாளை எண்ணினன். வாழ்வில் இருவகையாரோடும் பழகநேரும் என்பதையும் எண்ணி,

எலிபோன்றவரோடு பழகுதல் இழுக்கு என்றும், புலி போன்றவரோடு பழகுதல் விழுப்பம் என்றும் துணிந்தான். "யான் வாழவேண்டும் என எஞ்சியுள்ள வாழ்நாளில் எலியனையார் கேண்மைக்கு உரிய வாழ்நாட்பகுதி இல்லாமல் குறைந்து போவதாக" என்றும், "புலியனையார் கேண்மைக்கு உரிய வாழ்நாட்பகுதி சிறிதே ஆயினும் அது மட்டும் இருப்பதாக" என்றும் வேண்டினுன். எலியனை யாருடன் பழகும் நாட்கள் தனக்கும் பிறர்க்கும் பயன் படாமல் இழிந்த வாழ்க்கை வாழும் நாட்களாகக் கழிதலே எண்ணிப் பார்த்தே அவ் வாழ்நாட் பகுதி வேண்டா என மறுக்கும் உரம்பெற்றுன்.

விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனையர் ஆகி உள்ளதம்
வளன்வலி யுறுக்கும் உளமி லாளரொ(டு)
இயைந்த கேண்மை இல்லா கியரோ !
கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்(று)அவண் உண்ணு தாகி வழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்(து)
இருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்(து)
உரனுடை யாளர் கேண்மையொ(டு)
இயைந்த வைகல் உளவா கியரோ. (புறம். 190)

எலிவாழ்வும் புலி வாழ்வும் நோக்கிச்சோழன் உணர்ந்த உண்மை எவரும் என்றும் உணரத் தக்க உண்மையாகும். உழைப்புக்குப் பின்வாங்கி ஊக்கம் இழக்கும் எலிபோன்றவரே பிறர்க்கு எட்டாதவாறு பொருளைச் சிறிதுசிறிதாகச் சேர்த்து வைக்கும் இயல்பினர் ; அவரே உள்ள பொருளைக் கரந்துவைக்கும் கருத்தினர் ; ஊக்கமற்ற இம் மக்களாலேயே செல்வத்தின் செல்லுந்தன்மை பாழ்படுகின்றது ;

சென்று சென்று பலர்க்கும் பயன்படும் நல்ல தன்மை குன்றுகின்றது. இவராலேயே உழைக்கும் உழைப்பாளிகள் பொருள் பெருது வர்டுகின்றனர்; வறுமை என்னும் ஒன்று குடிபுகுந்து உலகைக் கெடுக்கின்றது. சுருங்கக் கூறின், வயிற்றுக்கவலைக்கு - அறிவு வளர்ச்சியின் தடைக்குக் காரணம் எலியனைய மக்களே. இதனை உணர்ந்தே சோழவேந்தன் தன் வாழ்நாளில் அவரோடு பழகும் ஆயுட்பகுதி எத்தனை ஆண்டுகளாயினும் அத்தனை ஆண்டுகளும் குறைந்து இல்லாமற் போக வேண்டும் என விழைந்தான்.

உலகம் இன்னூரால் கெடுகின்றது என உணர்ந்து அவர்தம் கேண்மையை வெறுத்த வேந்தன் போலவே, மற்ருெரு வேந்தன் உலகம் இன்னூரால் வாழ்கின்றது என உணர்ந்து அவர்தம் வாழ்வை வாழ்த்திப் பாடியுள்ளான். அவன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்பவன். "தேவர்தம் அமிழ்தமே கிடைத்திடினும் அதன் இனிமை கருதித் தமியராய் உண்ணூர்; வாழ்வில் வெறுப்புக் கொள்ளார்; பிறர்க்கு வரும் துன்பம் கண்டு அவர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சித் துன்பம் களையும் வரையில் தூக்கமும் கொள்ளார்; புகழ்தரும் நற்செயலாயின் உயிரையும் பொருட்படுத்தாது கொடுத்துச் செய்வர்; பழிதரும் தீச்செயலாயின் உலகமுழுதும் பெறும் பேறு வாய்ப்பதாயினும் பொருட்படுத்தாது நீங்குவர்; சோர்வு என்பது அறியார்; தமக்கென முயலும் தன்னலம் அற்றவர்; வலிய முயற்சியும் உழைப்பும் கொண்டு பிறர் பொருட்டே தொண்டாற்றுவர்; அத்தகையார் ஒரு சிலரேனும் உலகத்தில் உள்ள காரணத்தால்தான் உலகம் உளதாகின்றது. இன்றேல் உலகம் நிலைபெறல் இயலாது" என அன்னூர் பெருமையை உணர்ந்து பாடியருளினன்.

உண்டால் அம்ம இவ் வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்

தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ(து) அஞ்சிப்;
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. (புறம். 182)

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை

என்னும் திருவள்ளுவர் வாய்மொழியும் நோக்குக.

அத்தகைய மாண்புடைய சான்றோர் செங்கோல் ஏந்தல்வேண்டும் என்பதே உலகம் அந்நாளில் வேண்டிய வேண்டுகோள். ஆயின், உலகப்போக்கு மாறிவிட்டது. தனி மனிதர் ஆற்றலைவிட அமைப்புக்களின் ஆற்றல் பெருகிவிட்டது. தனிமனிதர் நல்லவராக இருந்து விளையும் பயன் சிறிதே; நெடிது நீடிப்பதும் அன்று. ஆதலின், பெரும்பயனை நிலைபெற நல்கவல்ல அமைப்புக்கள் நல்லன கண்டு அவற்றைக் காக்கும் கடமையே இன்று வேண்டுவது. ஈராயிர ஆண்டுகளுக்குமுன் புலவரும் புரவலரும் கண்ட கனவாய் முளைத்த முளை, இன்று அரசியலமைப்பு எனும் நன்மரமாய் உலகனைத்தும் நிழற்றும் நல்லுதவி ஆற்றத் தொடங்குகின்றது. இனி, புலவர் வறுமையும் இராது; புரவலர் வாட்டமும் இராது; வயிற்றுக்கவலை மாய்ந்திடும்; அறிவுக்கவலை மாண்புறும்; மக்கட் பிறப்பும் மதிப்புறும்.

# உணர்ந்தலும் உணர்தலும்

பலர் சேர்ந்து தொழிலாற்றி வாழ்தலும் உலகம் ஒரு குடும்பமாக உணர்தலும் பெரிய யந்திரங்கள் பயன் படும் இக்காலத்தில் எளிதில் கூடுவன. இந்த யந்திரங்கள் ஏற்படாக் காலத்தில் தனித்தனியே சிற்சிலர் கூடித் தொழிலாற்றி வாழ்தலும் தனித்தனியே பொருள் தேடும் முயற்சியும் அன்றி வேறு வழி இல்லை. அந்த நிலையில் நாட்டை ஆளும் மன்னவன் பொறுப்பு அரியது, பெரியது, துன்பமும் தருவது. மன்னவன் அறிவுடையவனாயின் பொறுப்பினை எளிதில் உணர்ந்து, செங்கோல் ஏந்துதல் எளிதன்று எனத் தெளிவான். அவன், மக்கள் தனித் தனியே பொருள் தேடும் உரிமையும் அளித்து, அரசியல் நடைபெற ஆறில் ஒரு பங்கு இறை எனப் பெறவும் வல்ல வனாய் விளங்கல் வேண்டும். பொருள்தேட உழைக்கும் மக்கள் வேண்டுமளவுக்குமேல் பொருள் கிடைத்தால்தான் அரசனுக்கும் ஒரு கூறு இறையாக இறுக்க இசைவர். வேண்டுமளவு பொருள் கிடைக்காதபோது இறை இறுக்கத் தயங்குவர்; ஆயின், அரசு நடத்தும் தலைவனோ, செல்வம் இன்றிப் படையும் பிறவும் காத்து இறைவனாய் விளங்க இயலாமையின், எவ்வாறேனும் குடிகளிடமிருந்து வற் புறுத்தி வாங்கவும் முனையலாம். அந்நிலையில் நெறி இன்னது எனத் தெளிய வேண்டுமாயின், அறிவு மிக்க சான்றோர் துணை வேண்டும். அரசனும் அறிவுடையவனாய், அறிஞர் சொல் கேட்கும் திறனுடையவனாய் விளங்கல் வேண்டும்.

அறிவுடையார்க்கும் அறிவிலார்க்கும் வேறுபாடு என்ன? இன்னது செய்தால் இன்னது விளையும் என முன்னதாக அறிய வல்லவர் அறிவுடையவர்; அதனை அறியமுடியாதவர் அறிவில்லாதவர். இது திருவள்ளுவர் கூறும் வேறுபாடு.

> அறிவுடையார் ஆவ(து) அறிவார்; அறிவிலார்
> அஃ(து)அறி கல்லா தவர்.

இதுபற்றியே அறிவை "எதிரதாக் காக்கும் அறிவு" என அடைகொடுத்தும் விளக்கியுள்ளார். அறிவுடையார் இன்று கிடைக்கும் களாக்கனியைவிட நாளை வரும் பலாப்பழமே சிறந்தது என எண்ணுவர். ஒறுத்துப்பெறும் ஒருநாள் இன்பத்தைவிடப் பொறுத்துப் பெறும் பொன்றுப்புகழ் இனியது என நாடுவர். விதைக்க வைத்துள்ள நெல்லைக் குற்றித் தின்று அழிக்காமல், விதைத்து வளர்த்து அறுத்துப் பன்னுள் உணவாக்க விரும்புவர். அரசன் கடமையாகிய இறை பெறுவதிலும் இவ் வுண்மை செல்லும். இறை செலுத்த இயலாத குடிகளை வருத்தி அன்றே பெற்று அவர்தம் வாழ்வை அழித்தலைவிட, அன்று வாளா இருந்து குடிகளை வாழச்செய்து துணையும் நல்கி அவர் தழைத்தோங்கியபின் பன்மடங்கு பெற்றுக் கொள்ளல் அறிவுடை நெறியாகும்.

பாண்டியன் அறிவுடைநம்பி என்னும் வேந்தனிடம் புலவர் ஒருவர் இவ் வுண்மையை அறிவுறுத்தியுள்ளார். புலவர் ஓர் எடுத்துக்காட்டு வாயிலாக இதனை விளக்கினுர். யானை ஒன்று தனியே நெல் வயலில் புகுந்து உண்ணத் தொடங்குமாயின், நூறு காணியாயினும் அழியும்; வாயில் புகும் உணவைவிடக் காலால் பல மடங்கு உணவுப்பொருள் அழியும். ஆயின், வயலில் உள்ள நெற்கதிர்களை முற்றவிட்டுக் காய்ந்த நெல்லை அறுத்து

அரிசியாக்கிக் கவளஞ் செய்து உண்பதானால், ஒரு சிறு பகுதியே பல நாளுக்குப்* போதுமானதாகும். அதுபோல், அறிவிலா மன்னவன் தன் உரிமையும் வலிமையுமே கருதிக் குடிகளை வருத்திப் பொருள்பெறத் தொடங்கின், அவனும் வாழான்; அவனால் உலகமும் கெடும். ஆயின், அறிவுடை வேந்தன் நெறி அறிந்து, வளம்பெற்ற குடிகளிடமிருந்து ஆறிலொன்று பெறுவானாயின், அரசும் சிறக்கும்; நாடும் நலம் பெற்று ஓங்கும். இவ்வாறு அரசனுக்கு அவர் அறிவுறுத்தினார்.

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறை(வு) இல்லதும் பன்னாட்(கு) ஆகும்;
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்(கு) உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான்; உலகமும் கெடுமே. (புறம். 184)

இறைமாட்சியைக் கூறப்புகுந்த திருவள்ளுவர், "செவிகைப்பச் சொற்பொறுக்கும்" பண்பையும் ஒரு மாண்பாகக் கூறினார். புலவர் ஒருவர் தன்னை அணுகி "நீ அறிவுடையனாக இரு. மெல்லியனாய் இராதே" என்று யானையை எடுத்துக்காட்டாகக் கூறி அறுவுறுத்தியதைப் பொறுமையோடு கேட்டுப் பயன்பெறும் மாண்பு இப் பாண்டியனிடம் இருந்தது பாராட்டத் தக்கது. தனக்கு அறிவு புகட்ட முனைவார்மீது சினந்தெழுதல் கீழ்மகன் இயல்பு; அவர்மீது அன்புகொண்டு அவர் சொல்வன கேட்க விழைதல் அறிவுடையவன் இயல்பு. இப் பாண்டி

யன் அறிவுடைநம்பி என்ற பெயரும் வாய்க்கப்பெற்றிருத்தல் பொருந்தியதே.

பெயரளவில் அறிவை அடையாகப் பெற்றிருத்தல் மட்டும் அன்றி, அவன் பாடிய பாட்டு ஒன்று அவனது அறிவான வாழ்வையே விளக்கி நிற்கக் காண்கின்றோம்.

படைப்புப்பல படைத்துப் பலரோ(டு) உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே (புறம். 188)

என்பது அப் பாண்டியன் பாடிய பாட்டு.

ஆட்சியுரிமையை எய்தி அரச செல்வத்தைக் கண்ட அறிவுடைநம்பி, பெருஞ்செல்வத்தைப் படைத்துப் பலரோடு உண்ணும் பெருவாழ்வைப் பயனற்றது என மதியாது விடுத்துக் குழந்தைகளையே சீரிய செல்வம் என மதித்தான். குழந்தைகளின் குறுகுறு நடையிலும் சிறுகை நீட்டிலும் நெய்ச்சோற்றை இடுதலிலும் தொடுதலிலும் கவ்வுதலிலும் துழவுதலிலும் விதிர்த்தலிலும் பேரின்பம் உள்ளதெனத் தெளிந்தான். அத்தகைய மக்கட்பேறு இல்லாத வாழ்வு வாழ்ந்தும் பயனில்லை என்றான்.

குழந்தைகளின்மேல் கொண்ட அன்பின் பெருக்கே அக் குழந்தைகளின் விளையாட்டில் அழகும் இன்பமும் காணச் செய்கின்றது. தம் மக்கள்மீது அன்பு பெருகுவதால், அவர்தம் ஆடலைக் காண மனம் விழைகின்றது; அயலார் மக்கள்மீது அன்பு பெருகாமையின், அம்மக்களின் ஆடலில் விருப்புக் கொள்வதில்லை ; இதுவே தன்னலம்

அறுத பெற்ருேர் இயல்பு. பாண்டியன் அறிவுடை நம்பியின் மனம் தன்னலம் அற்று விரிந்தது ; குழந்தை கள்மீது பேரன்பு கொண்டது; பொதுவாகக் குழந்தைகளை நாட்டின் பெருஞ்செல்வம் என மதித்தது. ஆதலின் வீடுதோறும் குழந்தைகளின் குறுகுறு நடையும் சிறுகை நீட்டும் பிறவும் நிறைந்து இன்பம் நிலவவேண்டும் என அவ் வேந்தன் விழைந்தான். பெருஞ்செல்வம் தேடிப் பல நலம் படைத்துப் பலரோடு உண்ணும் அளவில் வாழ்வு நிற்றல் கூடாது என்றும், மக்கள் இவ்வாறு நடந்தும் அசைந்தும் ஆடியும் மயக்கும் பேறு பெறல் வேண்டும் என்றும் விழைந்தான்.

பாண்டியன் உள்ளம் மிக உயர்ந்த உள்ளம் ; உலக வாழ்வினை உள்ளவாறு அறிந்து பொதுநலம் விழைந்த உள்ளம். ஆதலின் அவ் வுள்ளத்தில் வீடுதோறும் குழந்தை களின் ஆடற்செல்வம் மலியவேண்டும் என்று காதல் கொண்டான். இவனே சான்ருேன். “ஈன்ற குழவி எடுத்து வளர்த்தல்” சான்ருேரைத் தேர்ந்தறியும் தேர்த லாகப் போற்றப்பட்டது அன்ருே? அக் குழந்தைகளின் அசைவிலும் நடையிலும் ஆடலிலும் பேரின்பம் காணும் மனம் உடைய பாண்டியன் சான்ருண்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு என்பதில் ஐயம் உளதோ ?

இத்தகைய சான்ருேன் நாடாளும் வாய்ப்புப் பெறு வானேல், அந் நாட்டில் குழந்தைகள் வாடுமோ ? அலறு மோ? ஒருகாலும் இக் கொடுமை நேராது. சோழன் நெடுங் கிள்ளியைக் கோவூர்கிழார் என்ற புலவர் நெருங்கி இடித் துரைத்தகாலத்தும், “உன் நாட்டுக்குழந்தைகள் பாலின்றி அலறுகின்றனவே ! நீ இங்கிருத்தல் இன்னுது” எனக் கடிந்தார். குழந்தைகள் வாடாது மெலியாது வருந்தாது வளரும் நாடே நன்னுடு. அந் நாட்டை ஆள்வோனே அரசன். அவன் படையெடுப்பின், தெருவெல்லாம் வீடெல்

லாம் வீசி எறியும் வெடிகுண்டுகளை அழிக்கவே படை எடுப்பான்; அவன் போர் புரியின், உண்ணுங்காலும் உறங்குங்காலும் பரவிக்கொல்லும் நச்சுப்புகைக் கருவிகளை நசுக்கி ஒழிக்கவே போர்புரிவான். அக் குழந்தைகளின் இன்ப வாழ்விற்கு ஆவன செய்தலே முதற்கடமையாகக் கொள்வான். பண்பாலும் அறிவாலும் அக் குழந்தைகளை இனிது வளர்க்கும் பேறு பெற்றுள்ள தாயரைப் போற்றும் அறமே தலையானதாகக் கொண்டு அரசியல் சட்டம் அமைப்பான். அக் குழந்தைகள் வளரும் வாழ்மனைகளும் பயிலும் பள்ளிக்கூடங்களும் பலநலனும் பெற்றுப் பெருகப் பெருந்துணை செய்வான்.

இவ்வாறு நாட்டின் செல்வம் குழந்தைகளே என்று உணர்ந்து அருமையாய்ப் போற்றும் அன்பு பெற்ற சான்றோன், பிறநாட்டுக் குழந்தைகள் தன் நாட்டுக் குழந்தைகள் என்று வேற்றுமைப்படுத்தும் எல்லையும் கடந்து நின்றே உலகை நோக்குவான். அத்தகைய விரிந்துயர்ந்த நெஞ்சினன் எச்சொல் எவர்வாய்க் கேட்பினும் அதன்கண் உண்மை உணர முற்படுவான். "யான் ஆள்வோன்· இப் புலவர் என் ஆட்சிக்கு அடங்கிய ஒருவர்" என்ற செருக்கு ஒருபோதும் அவனை எய்தாது. அதனால், யானையை எடுத்துக்காட்டாக வைத்துப் புலவர் அறிவித்த உண்மையைத் தலைமேற் கொண்டு போற்ற முற்பட்ட பெருமையைப் பாண்டியன் அறிவுடைநம்பியிடம் காண்பது வியப்பன்று.

அறிவுடைநம்பி ஆட்சிக்கு இன்றியமையாத அரசியல் அறிவுபெற்று விளங்கிய சான்றோன் என்பது கண்டோம். குழந்தைகளைச் சிறந்த செல்வமாகப் போற்றிய முறையிலிருந்து அவன் மனத்தின் மாண்பும் கண்டோம். அத்தகைய மாண்பு இல்லாதவர் பொதுநலம் நாடி உலகம் வாழும் வகைதேடிச் "செவி கைப்பச் சொல்பொறுக்கும்"

திறம் பெறுதல் அரிது என்பதும் கண்டோம். இது பழந் தமிழ் நாகரிகம்.

உலக முற்போக்கு, அரசியலில் கட்சிகளை அமைத்து, தலைவரைத் தேர்ந்தெடுத்து, அவர்க்கு வேண்டும்போது வேண்டுவன கூற அவைகளும் மன்றங்களும் நிலைபெறச் செய்துள்ளது. ஆயினும் ஒரு குறை உள்ளது. எவர் கூறினும் கேட்டு உண்மை நாடும் உள்ளம் இன்னும் அரசியல் தலைவர் பெறவில்லை. தம் கட்சியார் கூறுவன எல்லாம் கொள்ள முனைந்து, பிறகட்சியார் கூறுவன கேளாமலே தள்ள முனைகின்றனர். ஒரு கட்சியார் தம் குறையைத் தாமே காண்பது அரிது. பிறகட்சியாரே எளிதில் காண்பர். ஆதலின் அவர் கூறுவனவும் கேட்டல்வேண்டும் என்னும் அறிவு இன்னும் பயன்தரும் முறையில் வளரவில்லை. கட்சிப்பற்று வேரூன்றி நின்று உண்மை காணாதவாறு தலைவர்க்கு மறைப்பு ஏற்படுத்தி அரசியலைக் கெடுத்து வருகின்றது. பிறகட்சியார் சொல்வன நல்லன எனினும் கேளாது, அவர் செய்வன தக்கன எனினும் போற்றாது புறக்கணித்தல் காலப்போக்காக உள்ளது. நல்லன தீயன என்ற ஆராய்ச்சியும் இன்றி எதிர்க்கட்சியாரின் சொல்செயல் எல்லாம் அடியோடு புறக்கணிக்கப்படுகின்றன. தம் கட்சியார் கூறுவன எல்லாம் நம்பும் நம்பிக்கையும், அவர் செய்வன எல்லாம் போற்றும் நடுநிலையின்மையும் பெருகி வந்துள்ளன.

ஆதலின், இக்கால ஆட்சிமுறையினை அரசியல் என்னாமல் கட்சியியல் எனலும் பொருந்தும். இது காரணமாகவே, பல நாடுகளில் பொதுநல நோக்கமும் குன்றி வருகின்றது; சான்றாண்மை உடையவர் அரசியலில் தலையிடப் பின்வாங்கி, அரசியல் என்பது கயவர் கடைமுறையாகப் புகும் அரண் எனப் பழிக்கவும் தொடங்கினர்; அரசியல் நாடுதோறும் சான்றாண்மை இல்லாதவரின்

கைப்பட்டுக் குழப்பமும் பூசலும் பெருக்கி உலகப் போரை விளைக்கின்றது. ஆயின், சான்றோர் என்றும் பின்வாங்கி அரசியலை விடார். அவர் தலைவராய் அமைவர்; அல்லது தலைவரைச் சான்றோராக மாற்றுவர். அவர்தம் நோக்கம் இன்று நிறைவேறச் சிறிய தடை உள்ளது. அத்தடை தான், அவர் கூறுவன கேட்கும் செவி பெருச் செவிடு. அச்செவிட்டுத்தன்மை ஆளுந் தலைவரைவிட்டு நீங்குதல் வேண்டும். அறிவுடை நம்பியை அச் செவிடு அணுகவில்லை. ஆதலின், அவன் அறநெறி தவருது நாட்டை வாழ்வித்தல் ஒன்றே நோக்கமாகக் கொண்டு, புலவர் கூறியது கேட்டுப் போற்றினன். இன்றுள்ள கட்சியியல் அரசிய லாக மாறின், மீண்டும் அந் நாகரிகம் வாழும் வழி உண்டாகும்.

அறிவுடைநம்பி பாண்டியன். அவனுக்கு அரசியல் அறிவுறுத்திய புலவர் பிசிராந்தையார், சோழனுக்கு நண் பர்; கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தபோது அவனேடு உடனுயிர்நீத்த நண்பர்.

*தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்*
*பிசிரோன் என்பஎன் உயிர்ஓம் புநனே*
*செல்வக் காலை நிற்பினும்*
*அல்லற் காலை நில்லலன் மன்னே* (புறம். 215)

**இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்**
**புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே**
**தன்பெயர் கிளக்குங் காலை என்பெயர்**
**பேதைச் சோழன் என்னும் சிறந்த**
**காதற் கிழமையும் உடையன் அதன்தலை**
**இன்னதோர் காலை நில்லலன்**
**இன்னே வருகுவன் ஒழிக்கஅவற்(கு) இடமே**
(புறம். 216

என அக் கோப்பெருஞ்சோழனது இறுதிநாளில் அவனால் புகழப்பெற்ற சீரிய நண்பர்.

"சோழனுக்கு உயிரனைய நண்பராகிய புலவர் நமக்கு அறிவுறுத்த வந்தாரே" எனப் பாண்டியன் வெறுத்தான் அல்லன். "நம்நண்பன் சோழனைப் புகழாது பாண்டியனைப் புகழ்வேமோ" எனப் புலவரும் நடுநிலை நீங்கினார் அல்லர்.

கட்சியியல் கடந்து குறுகிய நாட்டுப்பற்றும் கடந்து அன்பு விளங்கும் அரசியல் உலகம் அது. தாம் கவலையற்று விளங்கியதால் நரையிலையாயிற்று எனச் சோழனைச் சூழ்ந்து நின்ற சிலர்க்குப் பிசிராந்தையார் காரணம் விளக்கியபோது, "என் நாட்டை ஆளும் பாண்டிய வேந்தன் துன்பம் இழைக்காது இனிது காத்து வருகின்றான்; அதுவும் ஒரு காரணம்" என விளக்கினார். இவ் விளக்கவுரையினைச் சோழநாட்டாரிடையே எடுத்துரைத்தாரே அன்றிப் பாண்டியன் செவியில் படுமாறு அவனை முகத்தெதிரே புகழும் புகழுரையாகக் கூறினார் அல்லர். அவரவர் உளம் மகிழ அங்கங்கு அவரவரைப் புகழ்ந்து பெறுவன பெற்று வாழ விழையும் தன்னலம் சான்றோரிடம் எட்டுணையும் இல்லை. பாண்டியனைப் புகழ்ந்துரையாது, அவனுக்கு வேண்டிய உண்மையை மறையாது எடுத்தோதினார். சோழநாட்டாரிடம் சென்றபோது, அவர் வியக்குமாறு பாண்டியன் ஆட்சித்திறனை எடுத்தோதினார். அவர்தம் நடுநிலையை—பொதுநலம் பேணிய சான்றாண்மையைப் பாண்டியன் அறிவுடைநம்பியும் போற்றினான்; அவர்தம் உறவைக் காதற்கிழமையாகக் கோப்பெருஞ் சோழனும் போற்றினான். உயர்ந்த நோக்கம் கொண்டு விழுமிய வாழ்வு வாழ்ந்த சான்றோரை அரசியல் உலகம் மதித்தது என்பது ஒன்றே பழந்தமிழ் நாகரிகத்தை விளக்கும் சான்றாக அமைய வல்லது அன்றோ?

பிசிராந்தையார் நரையின்மைக்குக் காரணமாகப் பாடிய பாட்டில் அரசியல் நாகரிகமே அல்லாமல், குடும்பமும் ஊரும் நாகரிகமாய் விளங்கிய காட்சியும் உடன் காணப்படுகின்றது. கோப்பெருஞ்சோழனைச் சூழ்ந்து நின்றவர், "ஐய, உம்மைப் பற்றிப் பல ஆண்டுகளாய்க் கேள்வியுற்று வருகின்றோம். ஆதலின் நீர் நரைத்துத் திரைத்த முதியவராய் இருத்தல் கூடும் என எண்ணியிருந்தோம். இன்றுதான் உம்மைக் கண்டோம்; ஆயின் நரை சிறிதும் கண்டிலோம். இது வியப்பாகவே உள்ளது. காரணம் யாதோ?" என்றனர். "யான் ஆண்டில் முதியவன் என்பதில் ஐயம் ஒன்றும் இல்லை. ஆண்டு பல ஆயின. ஆயினும் நரை இல்லை. இதற்குக் காரணம் கூறுவேன். என் மனைவி மாண்பு மிக்கவள். மக்களும் அத்தகையவரே. அனைவரும் அறிவு நிரம்பியவர்கள். குற்றேவல் செய்யும் இளையரும் நல்லவர்; யான் கருதியவாறே செய்ய வல்லவர். அன்றியும், என் நாட்டுவேந்தன் பாண்டியனும் அல்லவை செய்யாது அறம் காக்கும் செங்கோலான். மேலும், யான் வாழும் ஊரில் சான்றோர் பலர் உள்ளனர்; அவர் நன்மை நிரம்பித் தீமை ஒழிந்து ஒழுக்கத்தில் நின்று அடக்கம் மிக்க கொள்கையினர். ஆதலின் நரை அணுகாது பல ஆண்டுகளாய் வாழ்கின்றேன்" என்றார்.

யாண்டுபல ஆக நரைஇல ஆகுதல்
யாங்(கு)ஆ கியர்என வினவுதிர் ஆயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையர்என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்(று)அவிந்(து) அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே. (புறம். 191)

இப் பாட்டைப் படிக்குந்தோறும் பிசிராந்தையார் கவலையற்று வாழ்ந்த வீடுதான் நாகரிக வீடு என்று கருதத்

தோன்றுகின்றது; சான்றோர் பலர் விளங்க அவர் வாழ்ந்த ஊர்தான் நாகரிக ஊர் என்று கருதத் தோன்றுகின்றது; இத்தகைய வீடும் ஊரும் அமையக் காரணமாக இருந்த அவர்காலத்து அரசியலே நாகரிகஅரசியல் என்று கருதத் தோன்றுகின்றது. அவரை உண்மை அறிவுறுக்கும் ஆசிரியராகவும் உறவுக்கு உரிய கெழுதகை நண்பராகவும் முறையே பெற்ற பாண்டியன் அறிவுடைநம்பியும் கோப்பெருஞ்சோழனும் நாகரிக அரசியல் தலைவர் என்று கருதத் தோன்றுகின்றது; பிசிராந்தையார் என்னும் அப்புலவர் வாழ்வையே நாகரிகம் என்று கருதவும் தோன்றுகின்றது.

நாகரிக வாழ்வு என்பது எளியது அன்று. சான்றோர்க்கே அஃது எளிதின் அமைவதாக உள்ளது. ஏனையோர் அரிதின் முயன்று பெறத்தக்க செல்வமும் அதுவே. சான்றோர் பொதுநலம் விழைந்து நெறிமுறை அறிந்து அறத்தொண்டு ஆற்றி வாழும் வாழ்விற்குத் துணையாக நிற்பது அவர்தம் நெஞ்சமே-நடுநிலை பிறழாத நெஞ்சமே ஆகும். "நமர்எனக் கோல்கோடாது பிறர் எனக் குணங்கொல்லாத" நடுநிலை நெஞ்சம் அது.

கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்(கு) அணி.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்(கு) அணி. (திருக்குறள்)

அந் நடுநிலைநெஞ்சம் சான்றோர்க்கு அணிசெய்தலை இம்மணி மொழிகள் விளக்குகின்றன. அத்தகைய நெஞ்சம் அறிவால் உயர்ந்து உலக வாழ்க்கையை உள்ளவாறு அறிந்தாலன்றி வாய்க்காது. கணியன் பூங்குன்றனார் உலக வாழ்வின் உண்மையைத் தெளிய உணர்ந்து பாடிய

பாட்டு ஒன்று இத்துறையில் கலங்கரை விளக்காக ஒளிர்கின்றது.

*யாதும் ஊரே ; யாவரும் கேளிர் ;*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா ;*
*நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன ;*
*சாதலும் புதுவ(து) அன்றே ; வாழ்தல்*
*இனிதென மகிழ்ந்தன்றும் இலமே ; முனிவின்*
*இன்னா(து) என்றலும் இலமே ; மின்னொடு*
*வானம் தண்துளி தலைஇ ஆனாது*
*கல்பொரு(து) இரங்கும் மல்லல் பேர்யாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்*
*பெரியோரை வியத்தலும் இலமே ;*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.* (புறம். 192)

உலகம் முழுவதும் இனிது வாழ்ந்தாலன்றி ஒரு தனி நாடோ ஒரு தனி ஊரோ ஒரு தனிக் குடும்பமோ இன்பமாக வாழ்தல் இயலாது. ஒருகால் சிலநாள் இன்பமாக வாழினும், உலகத்துன்பம் விடாது தொடர்ந்துபற்றி அலைத்தல் திண்ணம். காட்டைப் பற்றி எழும் தீ எத்தனைக் காலம் இந்த மூலையையும் அந்த முடுக்கையும் விட்டுவைக்கும்? கடலில் ஒருபால் கொதிக்கும் கொதிப்பு எப்பாலும் பரவி எல்லா நீரணுக்களையும் தாக்குதல் திண்ணம். அவை போன்றே உலகத் துன்பம் எந்த நாட்டையும் எந்த ஊரையும் எந்தக் குடும்பத்தையும் விடாது; சிலநாள் விடுதல்போல் தோன்றலாம் ; ஆயினும் பின்னர் வந்து பற்றுதல் திண்ணம். ஆதலின், தம் குடும்பமும் ஊரும் நாடும் வாழ விரும்பிய சான்றோர் அனைவரும் உலகம் வாழவே வழி கோலிச் சென்றனர். அவர் முயற்சி இன்னும் வெற்றி பெற்றதாகக் கூறுவதற்கு இல்லை.

ஆயினும், அது தவிர வேறு வழி இல்லை என்பது உறுதி; அம் முயற்சி தவிர ஏனைய முயற்சியெல்லாம் வீண் என்பதும், சான்றோர் முயற்சிக்குச் சிறுசிறு தடையே என்பதும் அதனினும் உறுதியே.

ஆதலின், குடும்பமும் ஊரும் நாடும் வாழவேண்டும் என்று அறிவும் அறமும் வகுத்த நெறியில் நின்று தொண்டு செய்ய விரும்புவார் கற்கவேண்டிய ஒரு பாடம், "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பது. தனக்கு நன்மை செய்வார் கேளிர் என்றும், தீமைசெய்வார் பகைவர் என்றும் எண்ணி எண்ணித் திரிந்துவிட்ட மனம், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என உணர்தல் எளிதோ? ஆதலின், அம் மனத்தின் திரிபைப் போக்கிச் செம்மைப் படுத்தப் பூங்குன்றனார் வழி கூறுகின்றார். மக்களைக் கேளிர் என்றும் பகைவர் என்றும் பிரித்தற்குக் காரணமான (நன்மை தீமைகள் அவரால் விளைவன என்னும்) புல்லறிவைப் போக்கவேண்டும் என்கிறார். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் உண்மையை வற்புறுத்துகின்றார். தீதும் நன்றும் பிறர் செய்யக் காண் கின்றோமே, அவரால்தான் விளைவன எனின், அவர் செய்தன விடுத்து, செயலால் விளையும் பயனைக் கருதுக என்கின்றார். தீது நோதல் தரும். நன்று தணிதல் தரும். துன்பமும் இன்ப ஆறுதலும் நுகர்வார் மனத்தின் அளவே அன்றிச் செய்வார் செயலளவு அல்ல என்னும் சிறந்த உண்மை அடுத்தபடி விளக்கப்படுகின்றது. "நோதலும் தணிதலும் அவற்றோரன்ன" என்கின்றார்.

துன்புறுதலும் அமைதியுறுதலும்—நோதலும் தணி லும்—பிறரால் வருவன அல்ல என்று சொல்லுதல் எளிது; சொல்லியவாறு உணர்ந்து மனம் அமைந்து வாழ்தல் அரிதினும் அரிது. இடுக்கண் வருங்கால் நகும் வன்மை பெற்ற மனமே இவ்வாறு அமையவல்லது.

"துன்பமா? வருக; என் மனம் என் வயமாக உள்ளபோது, துன்பமே! நீ அதனை ஆட்டி அல்லற்படுத்த முடியாது. என் மனத்தைக் காக்கும் காவலனாக யான் உள்ளபோது நீ என் செய்தல் கூடும். வந்தவாறே செல்லுக" என்று துன்பம் கண்டு நகும் ஆற்றல் பெறுதல் வேண்டும். அதற்கு வழி என்ன? சிறுசிறு துன்பங்களைப் பொருட் படுத்திக் கொண்டிருத்தலாகாது. துன்பத்துள் துன்பமாய சாதலை நோக்கி நகைக்கும் வன்மையைப் பெற்றுவிடல் வேண்டும். அதனைப் பெற்ற பின்னர் ஏனைய சிறு துன்பங் கள் வந்த வழியும் சொல்லாது மீண்டுபோம். ஆதலின், பூங்குன்றனார் தொடர்ந்து அறிவிக்கும் உண்மை, "சாத லும் புதுவது அன்றே" என்பது. சாதல் என்பது புதுமையற்றது, இயல்பானது எனக் காணும் நெஞ்சம், வாழ்வை இனிது என மகிழாது; அதனை இன்னாது என வெறுத்தலும் செய்யாது. அங்கு விளங்கும் பேருண்மை யாவது, உயிர் வாழ்வு முறை என்னும் ஒன்றன் வழிப் பட்டது என்பதே. சமயநெறிகள் பலவும் அறிவுறுத்தும் உயர் வாழ்வைப் பூங்குன்றனார் தெள்ளிய எளிய வழியில் விளக்குகின்றார். அந்த முறை என்பதனை இயற்கை என்பர் சிலர்; கடவுள் என்பர் பலர்; எப்பெயரால் கூறினும் என்ன? உயிர்வாழ்வு ஒப்பற்றதோர் ஆட்சி முறைக்கு உட்பட்டது என்று உணர்தலே வேண்டும். இதனை உணரும் உணர்வே மெய்யுணர்வு. இம் மெய்யுணர்வை வலியுறுத்தும் சமயங்கள் உலகிற்குப் போதிய உதவி புரியாவாறு மக்கள் சமயங்களின் பெய ராலும் பிறவேற்றுமைகளின் பெயராலும் பிரிந்து பிரிந்து பிணங்கி நின்று பகைத்து வருந்திக் கேடும் அல்லலும் பெருக்கிப் பெருக்கி மாள்கின்றனர். அதன் காரணமும் உணர்த்துகின்றார் நடுநிலையே வாழ்வாகக் கொண்ட பூங்குன்றனார்.

மக்களுக்கு என ஆன்ருேர் அமைத்த நெறிகள் பலவும் நன்னெறிகளே. ஆயின், மக்கள் நெறியைப் போற்றத் தவறி, நெறியுணர்த்தும் தலைவர் சிலரைப் போற்றத் தொடங்கிக் கடமையை மறந்தனர். இன்ன நெறியின் கொள்கை இன்னது என்று நோக்குவார் இலராகி, இன்ன தலைவர் பெருமை இன்னது என்று நோக்குவார் உளராயினர். தத்தம் நெறியை மறந்தவராய், தத்தம் தலைவரைப் புகழ்ந்து திரியலாயினர். தம் தலைவரைப் புகழ்தல் வேண்டிப் பிற தலைவரைப் பழித்தலாயினர். ஒருவர் பழிக்க, ஒருவர் புகழ, இருவரும் கூடி வாழ்தலும் ஒல்லுமோ? ஆதலின் பூசல் விளைந்து போர் நிகழ்தலாயிற்று. இத்தகைய போர்களே சமயப் போர்கள்; இவ்வாறே அரசியல் தலைவர் காரணமாகப் பிறப்பன அரசியல் போர்கள். எல்லாம் மக்கள் தவற்ருல் விளைந்து மக்கள் வாழ்வையே அழித்துவருகின்றன. ஆதலின், பூங்குன்றனர், "மாண்பு மிக்க சிலரைப் பெரியோர் என வியத்தலும் வேண்டா; சிலரைச் சிறியோர் என இகழ்தலும் வேண்டா; எல்லாப் பெருமைக்கும் மாட்சிக்கும் காரணமான முறை என்னும் ஒன்றையே போற்றித் தெளிதல் வேண்டும்" என்கிருர்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் உண்மையை அடிப்படையாகக் கொண்டே வாழ்க்கை நிலைகளைச் சமமாக அமைத்தல் வேண்டும். இஃது ஒன்றே உலகத்தின் ஒன்றுபட்ட அமைதியான இன்ப வாழ்வுக்கு வழியாகும். இஃது இல்லையானல், உலக முற்போக்குக்கு உரிய எல்லா நன்முயற்சிகளும் வீணுகும். பொருள் நிலையால் ஒத்த வாழ்வு அமையவேண்டும் என்னும் கொள்கை போலவே, புகழ் நிலையாலும் உயர்வு தாழ்வு பெருகக்கூடாது என்னும் கொள்கையும் பரவ வேண்டும். செல்வம் என்னும் முதலைவிடப் புகழ்

என்னும் முதல் பெருந் தீமை செய்வதாகும் என்பதை எதிர்காலம் உணரவேண்டும். உழைப்புக் குறைந்தவர் செல்வம் சேர்ப்பதுபோலவே தகுதி குறைந்தவர் புகழ் மிகப் பெறுவதற்கும் உலகத்தில் வாய்ப்புக்கள் உள்ளன. அவ்வாறு புகழ்பெற்றவர் தம்மையும் கெடுத்துக்கொண்டு உலக வளர்ச்சிக்கும் தடை செய்கின்றனர். அவர்பெறும் செல்வாக்குத் தவருகப் பயன்படுகின்றது. அவர் தம்மைப் புகழ்வோரையே விரும்பிப் படை திரட்டிக் கட்சி எனப் போற்றி, இகழ்வார்மேல் பகைகொண்டு இன்னல் விளைக் கின்றனர். இஃது மெல்ல மெல்ல உள்நாட்டுக் குழப்ப மாய் அரும்பி உலகப் போராய் மலர்வதாகும். புகழை ஈட்டியவர் செய்யும் செயல்களின் விளைவு இது. இவரைப் போற்றிப் புகழ் நல்கும் பொது மக்களின் நிலையும் இத்தகையதே ஆகும்.

வீடுகட்டி உதவிய தச்சனையும் கொல்லனையும் மறத் தல் இயலாது. ஆனல், அவர்களைப் போற்றிக்கொண்டே வீட்டினுள் இருந்து நடத்தவேண்டிய வாழ்க்கையைப் புறக்கணித்தல் தகுமோ? இத்தகைய அறியாமையே, சமயத்தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் போற்றிக் கொண்டு சமய நெறியினையும் அரசியல் நெறியினையும் மறந்து தம் வாழ்வைக் கெடுத்துக்கொள்ளும் பொது மக்க ளிடம் உள்ளது. போற்றுதல் என்பது தூற்றுதலுடன் பிறந்தது. ஒருவரைப் போற்றும் மனம் மற்றவரைத் தூற்றுவதிலேயே அமைதி காண வல்லது. ஆகவே, போற்றுதல் தூற்றுதல்களே உலக முற்போக்குக்கு அவ்வப்போது முட்டுக்கட்டைகளாய்ப் பொது வாழ்வைக் கெடுத்துவந்துள்ளன. உலக வரலாற்றை இந்தக் கண் கொண்டு நோக்கின் எளிதில் உண்மை தெளியலாம். போற்றுதல் தூற்றுதல்களை நச்சிய அறியாமையே வீழ்ச்சி பலவற்றிற்கும் காரணம் ஆயிற்று. இந்த அறியாமையே,

வாழ்வை மறந்த வழிபாடுகளையும் உண்மையைத் துறந்த சடங்குகளையும் பெருக்கிச் சமயச் சிறப்புக்களை மறைத்தது. இந்த அறியாமையே, கட்சி வெறியையும் தந்திர நெறியையும் வளர்த்து அரசியல் அமைப்புக்களைக் கெடுத்தது. இந்த அறியாமையே, கண்மூடிப் போக்கையும் கணக்கற்ற வேறுபாடுகளையும் வளர்த்துப் பொதுவாழ்வின் அடிப்படையைக் குலைத்தது. உண்மை தெளியாத வியத்தலும் இகழ்தலும் இவ்வாறு விளைத்த இடர்கள் பற்பல.

"ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது தெளிந்தனம். ஆதலின், பெரியோரை வியத்தலும் இலம். சிறியோரை இகழ்தலும் இலம்" எனப் பூங்குன்றனார் கூறுவது இன்றும் உலகம் உணர இயலாத சிறந்த உண்மையாகும். தனித்தனியான சிற்சிலர் ஆற்றலைவிட, அவர்தம் மாட்சியைவிட, எல்லோரையும் இயக்கும் முறையின் ஆற்றலும் மாட்சியுமே வியத்தற்கு உரியன என உலகம் உணர இன்னும் எத்துணை ஆண்டுகள் செல்லுமோ? இந்த அரிய உண்மையைத் தமிழ்நெஞ்சம் உணர்ந்து ஈராயிரம் ஆண்டுகள் ஆயின.

THE MALAYSIAN TAMIL SANGAM